32

28°c

கூடிய வெப்பநிலை 32 c
குறைந்த வெப்பநிலை 26 c
மேக மூட்டம், மழையுட
டன் கூடிய காலநிலை

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna
கற்பதற்கு (யாழில் 1976 முதல்) FRENCH EMBASSY
இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர
சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 136 நாடுகளில்
1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர் குழு.
அங்கீகரிக்கப்பட்ட
CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS
விரையுங்கள்... வடமாகாணத்தில் ஒரே முகவரி தான்
61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093

விலை: யாழ். – 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/= ■ சுடர்: 29 ■ கதிர்: 162 ■ வள்ளுவர் ஆண்டு: 2045 சித்திரை 24, புதன் 07.05.2014

## திருமலையில் நேற்று முப்படையும் தேடுதல்

### நான்கு கிராமங்கள் அதிகாலை முதல் சுற்றிவளைப்பு

திருகோணமலை, மே 07

திருகோணமலையின் வெருகல் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நான்கு கிராமங்களில் நேற்று அதிகாலை முதல் முப்படையினரும் இணைந்து பெரும் எடுப்பிலான தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். சந்தேகத்துக்கிடமானவர்கள் குறித்த பகுதியில் உலவுவதாகவும், அவர்கள் கைவிட்டுச் சென்ற ஆயுதங்களைக் கடற்படையினர் மீட்டுள்ளதாகவும் தெரிவித்தே இந்த நடவடிக்கைகள் நேற்று முழு நாளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் தேடுதல் நடவடிக்கையின்போது தமிழீழ விடுத

21ஆம் பக்கம் பார்க்க

## தாய் - மகள் பாசத்தால் சோகமயமானது பூசா

### விபூசிகா - ஜெயக்குமாரி சந்திப்பின் போது

கிளிநொச்சி, மே 07

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுப் பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஜெயக்குமாரியை பார்வையிடச் சென்ற மகள் விபூசிகா, தாயைக் கண்டதும் கதறி அழுத காட்சியால் சிறைச்சாலையின் அந்தப் பகுதியே சோகமயமானது.

கடந்த மார்ச் மாதம் 13 ஆம் திகதி தர்மபுரம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்ப

21ஆம் பக்கம் பார்க்க

### படைத் தளபதியுடன் யாழ். பல்கலையினர் இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 7

யாழ். பல்கலைக்கழகத் தரப்பினரை இன்று தன்னுடன் சந்திப்புக்கு வருமாறு யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா அழைப்பு விடுத்துள்ளார் என்று பல்கலைக்கழகத் தரப்பு தெரிவித்தது.

இந்தச் சந்திப்பு காங்கேசன்துறையில் உள்ள ஒரு இடத்தில் இன்று இடம்பெறவுள்ளது. பல்கலைக்கழகத் துணைவேந்தர், பீடாதிபதிகள், நிர்வாகப் பகுதியினர் மற்றும் மாண

21ஆம் பக்கம் பார்க்க


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு மிரட்டல்

## மாணவர்களுக்கும் அச்சுறுத்தல் விடுத்து பல்கலை வளாகத்துக்குள் துண்டுப் பிரசுரம்

யாழ்ப்பாணம், மே 7

யாழ். பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் துண்டுப் பிரசுரங்கள் நேற்றுப் பல்கலைக்கழக வளாகத்துக்குள் ஒட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மாணவர் ஒன்றியங்களின் தலைவர்கள் ஆகியோருக்கு அச்சுறுத்தல் விடுத்தே


01
மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க அனுமதிக்க முடியாது!

பாசிச புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள் மகிழ்ச்சியாக முடிவடைக் போகின்ற நிலையில் மீண்டும் பயங்கரவாதம் இந்நாட்டில் தலைதூக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது.

ஆனால் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு தூபமிடுதலும், அவர்களிடம் [illegible] வருகின்றன [illegible] வேதனை [illegible] ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளால் நாமும், இத் தேசமும் எத்தனையோ [illegible] என்று இந்த உலகமுமே நன்றாக அறியும்.

எனவே பல்கலைக்கழகத்தில் மீண்டும் புலிகளை புதுப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிய முடிகிறது.

அவ்வாறான செயற்பாடுகளை தூண்டும் பேராசிரியர்கள், மாணவர் ஒன்றிய தலைவர்களை [illegible] நீண்ட காலமாக அவதானித்து வருகிறோம் அவர்களுக்கு நேரடியாக எச்சரிக்கையும் செய்தோம்.

குறித்த துண்டுப் பிரசுரங்கள் அங்கு ஒட்டப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது.

'மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க அனுமதிக்க முடியாது' என்ற தலைப்பில் 'நாட்டைக் காக்கும் மாணவர் படை' என்று தம்மை அடையாளப்படுத்தியவர்களால் இந்தத் துண்டுப் பிரசுரம் ஒட்டப்பட்டுள்ளது. இதனை அங்குள்ள பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் பலரும் உறுதிப்படுத்தினர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாசிசப் புலிகளுக்கு எதிரான போர் முடிவடைந்து 5 ஆண்டுகள் மகிழ்ச்சியாக முடிவடைகின்ற நிலையில் மீண்டும் பயங்கரவாதம் இந்நாட்டில் தலைதூக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது. ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்

21ஆம் பக்கம் பார்க்க

### இராணுவ வாகனம் மோதி மூதாட்டி நேற்று படுகாயம்

யாழ்ப்பாணம், மே 7

கைதடியில் வீதியில் நடந்து சென்ற வயோதிபப் பெண்ணை இராணுவ வாகனம் மோதித் தள்ளியதில் தலையில் படுகாயமடைந்த அவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கைதடி - கோப்பாய் வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது. விபத்தில் கைதடி தெற்கைச் சேர்ந்த சின்னத்தங்கம் என அழைக்கப்படும் பண்டாரி நாச்சி (வயது 74) என்பவரே படுகாயமடைந்தார்.

21ஆம் பக்கம் பார்க்க

## முள்ளிவாய்க்கால் நினைவுவேளை யாழ். பல்கலைக்கழகத்துக்குப் பூட்டு

### விடுதிகளை விட்டு வெளியேறுமாறு மாணவருக்கு பணிப்பு

யாழ்ப்பாணம், மே 7

முள்ளிவாய்க்காலில் இறுதிப் போர் நிறைவடைந்த மே 18 ஆம் திகதியன்று போரில் மாண்டுபோன உறவுகளுக்குத் தமிழ் மக்கள் அஞ்சலி செலுத்தும் நேரத்தில், யாழ். பல்கலைக்கழகம் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் ஒரு வார காலம் மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாணவர்களுக்

21ஆம் பக்கம் பார்க்க



மருந்தாளர்களின் பணிப்புறக்கணிப்பு காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையின் மருந்து வழங்கும் பகுதி வெறிச்சோடிக் காணப்படுகிறது.

மருந்து வழங்கும் பகுதி மூடப்பட்டுள்ளமையால் நோயாளர்கள் தமக்கான மருந்துகளைப் பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்துத் தனியார் மருந்தகங்களில் அவற்றைப் பெறுவதாகக் கவலையுடன் தெரிவித்தனர். (த-21)

### தென்னாபிரிக்க தூதர் வருகை ஜூன் இறுதியில்

யாழ்ப்பாணம், மே 07

இலங்கை விவகாரத்தைக் கையாளும் தென்னாபிரிக்காவின் சிறப்புத் தூதுவரின் இலங்கைக்கான பயணம் அடுத்த மாத இறுதியிலேயே சாத்தியமாகும் என்று கொழும்பு இராஜதந்திர வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் இந்தப் பயணத் தாமதம் தொடர்பில் எந்தவொரு தகவலும் தமக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளுக்கு

21ஆம் பக்கம் பார்க்க

## 10 இலங்கை அகதிகளும் புழல் சிறையில் அடைப்பு

### தமிழ் அமைப்புக்கள், சமூக ஆர்வலர்கள் கண்டனம்

இராமநாதபுரம், மே 07

உயிர் வாழ்வதற்குப் படையினரால் அச்சுறுத்தல் உள்ளதாகத் தெரிவித்து முல்லைத்தீவில் இருந்து தமிழகத்தின் கரையோர மாவட்டமான தனுஷ்கோடியைச் சென்றடைந்த இலங்கைத் தமிழ் அகதிகள் 10

21ஆம் பக்கம் பார்க்க

### இளைஞர் மாநாடு நேற்று ஆரம்பம்

கொழும்பு, மே 07

இலங்கையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சர்வதேச இளைஞர் மாநாட்டை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலை

21ஆம் பக்கம் பார்க்க

## அகதிகளாக வந்த ஈழத் தமிழரை சிறையிலடைத்தது மகா தவறு

### பழ. நெடுமாறன் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 07

தமிழகத்துக்கு அடைக்கலம் தேடி அகதிகளாக வந்த ஈழத் தமிழர்களைச் சிறையிலடைத்தது மகா தவறு. அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று உலகத் தமிழர் பேரவையின்

21ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைத் தூதர்கள் 12 பேர் இன்று யாழ்ப்பாணம் வருகை

### போரின் பின்னரான நிலைமையை பார்வையிட

யாழ்ப்பாணம், மே 07

வெளிநாடுகளுக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைத் தூதுவர்கள் 12 பேர், போரின் பின்னரான வடக்கு-கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பார்வையிடுவதற்காக இன்று புதன்கிழமை யாழ். மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

23ஆம் பக்கம் பார்க்க

### பொருளாதார அமைச்சின் திட்டங்கள் முடிவுக்கு

யாழ்ப்பாணம், மே 07

யாழ். மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வந்த விசேட திட்டங்கள் யாவும் முடிவுறுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலகத் தகவல்கள்

23ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


மீட்கப்பட்ட வெடிபொருள்கள்

## வெடி பொருள்கள் தாவடியில் மீட்பு

யாழ்ப்பாணம், மே 7

தாவடிப்பகுதியில் தோட்டக் காணியிலிருந்து நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் நிலக் கண்ணிவெடி உட்பட வெடி பொருள்கள் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய மீட்கப்பட்டுள்ளதாகச் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை - இன்று குறித்த பகுதியில் தோண்டும்பணி இடம் பெறவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

தாவடி தெற்குப் பகுதியிலுள்ள வெற்றுக் காணி ஒன்றில் இருந்தே நிலக்கண்ணிவெடியொன்று உட்பட ரி-56 ரக துப்பாக்கியின் சன்னம் மற்றும் கைக்குண்டுகளின் கிளிப் என்பன இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-104)

# இலங்கைப் பிரச்சினைக்கு பிரிட்டனும் ஒரு காரணம்

## அமெ. மனித உரிமைச் செயற்பாட்டாளர் தெரிவிப்பு

கொழும்பு.மே 7

இலங்கையில் தேசிய பிரச்சினை அதிகரிப்பதற்குப் பிரிட்டனும் சில காரியங்களைச் செய்துள்ளதாக அமெரிக்க மனித உரிமை செயற்பாட்டாளரான கலாநிதி ரெண்டி சோர்ட் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் காலனித்துவ ஆட்சியின்போது இலங்கையின் சிங்கள மக்களைத் தமிழ் மக்களுக்கு அடிபணிந்தவர்களாகப் பிரிட்டன் வைத்திருந்தமையும் இதற்கு ஒரு காரணமாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஐரோப்பிய நாடுகள் தாம் செல்லும் இடங்களில் எல்லாம் இப்படியான பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு நாடுகளில் இன வன்முறைகள் என்ற கருப்பொருளில் தொலைக்காட்சி ஒன்றில் நடத்தப்பட்ட நேர்காணலில் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.



“பிரிட்டன் காலனித்துவ ஆட்சியின்போது இலங்கையின் சிங்கள மக்களைத் தமிழ் மக்களுக்கு அடிபணிந்தவர்களாகப் பிரிட்டன் வைத்திருந்தமையும் இதற்கு ஒரு காரணமாகும்.

கௌரவம், மனித உரிமை மற்றும் சமாதான அமைப்பின் உறுப்பினரான கலாநிதி ரெண்டி, ஐக்கிய நாடுகள் அமைப்பின் மீது இது தொடர்பில் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

உலக நாடுகளில் தேசியப் பிரச்சினைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயற்பாடுகள் பக்கச் சார்பானதாக உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

# குற்றம் நிரூபிக்கப்பட்டால் பதவி விலகுவதற்கு தயார்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு.மே 7

குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் பதவி விலகத் தயார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பதவிக்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்படும் சம்பளம், ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் வரப்பிரசாதங்கள் தவிர்ந்த எதனையும் நான் பெற்றுக் கொண்டதில்லை.

அவ்வாறு சட்டத்துக்கு முரணான வகையில் பெற்றுக் கொண்டிருந்தால் அதனை நிரூபிக்க முடியும். லஞ்சம் பெற்றுக் கொண்டதாகவோ அல்லது வேறு சலுகைகளைப் பெற்றுக்கொண்டதாகவோ நிரூபிக்கப்பட்டால் நான் உடன் பதவி விலகத் தயார் என்று பேச்சாளர் கூறினார்.

மோட்டார் போக்குவரத்து குற்றச் செயல்களின்போது இலகுவாகப் பணம் செலுத்தக் கூடிய முறைமை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் தண்டப் பணத்தை செல்லிடப் பேசி மூலம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்களத் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (த)

# பயணப் பையினுள் மறைத்து இறைச்சி கடத்தியவர் கைது

யாழ்ப்பாணம், மே 7

பயணப் பையினுள் மாட்டிறைச்சியை மறைத்து வைத்து சாதாரண பயணிபோல் மிகவும் சாவகாசமாக அதனை பஸ்ஸில் கொண்டு யாழ்.நோக்கிப் பயணித்த இளைஞனைப் பொலிஸார் துரத்திச் சென்று கைது செய்தனர். இறைச்சியும் கைப்பற்றப்பட்டது.

இந்தச் சம்பவம் யாழ்.மண்டைதீவுச் சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

மானிப்பாயைச் சேர்ந்த கஜேந்திரன் என்பவர் மண்டைதீவில் மாட்டை வெட்டி அதன் இறைச்சியை வெளியே தெரியாதவாறு பல பைகளில் போட்டுச் சுற்றி பயணப் பையினுள் வைத்து அதனை அரச பஸ்ஸில் கொண்டு சாதாரண பயணி போல பயணித்துள்ளார்.

அவர் அவ்வாறு இறைச்சியைக்கொண்டுசெல்வது தொடர்பில் இனந்தெரியாத ஒருவர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். அதனையடுத்து அந்த பஸ்ஸைப் பொலிஸார் துரத்திச் சென்று மண்டைதீவுச் சந்தியில் வைத்து மறித்துச் சோதனையிட்டபோது உண்மை தெரியவந்தது.

35 கிலோகிராம் இறைச்சியை அவர் அவ்வாறு கொண்டு சென்றுள்ளார். அவரைப் பொலிஸார் கைது செய்ததோடு இறைச்சியையும் கைப்பற்றினர். ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் அவர் நேற்று முற்படுத்தப்பட்டார். தன் மீதான குற்றத்தை அவர் ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அவர் முன்னரும் அவ்வாறு சட்ட விரோதமாக இறைச்சியைக் கொண்டு சென்றதற்காக ஊர்காவற்றுறை நீதிமன்றில் அவர் முன்னரும் 3 ஆயிரம் ரூ. அபராதம் செலுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-4-5)

# தமிழ்க் கூட்டமைப்பு பதிவுக்கான ஐவர் குழுக் கூட்டம் இவ்வாரம்

யாழ்ப்பாணம், மே 07

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிப் பதிவுக்காக அமைக்கப்பட்ட ஐவர் கொண்ட குழுவின் கூட்டம் இந்த வாரம் இடம் பெறும் என்று கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்று திருகோணமலையில் கடந்த மாதம் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. கட்சிப் பதிவு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக ஐந்து பேர் கொண்ட குழுவும் அமைக்கப்பட்டிருந்தது.

தமிழரசுக் கட்சி சார்பில் மாவை. சேனாதிராசா, ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன், புளொட் சார்பில் த.சித்தார்த்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

தற்போது நாடாளுமன்றக் கூட்டத்தொடர் இடம்பெற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிவித்த சுரேஷ் பிரேமச்சந்திரன், இந்தக் கூட்டத்தொடரின்போது பதிவு தொடர்பிலான முதலாவது கலந்துரையாடல் இடம்பெறும் என்று தெரிவித்தார். (த-5)

## அகற்றப்பட்டது சோதனைச் சாவடி

கிளிநொச்சி, மே 07

புதுமுறிப்புப் பகுதியில் இராணுவத்தினர் அமைத்திருந்த சோதனைச் சாவடியும், வீதித் தடைகளும் அகற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி - முழங்காவில் பிரதான வீதியில் புதுமுறிப்பு வளைவில் திடீரென இராணுவத்தினர் புதிய சோதனைச் சாவடியையும் வீதித் தடையையும் அமைத்திருந்தனர். இதனால் இந்த வீதியூடாகப் போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நி... ல் குறித்த சோதனை நிலையமும், வீதித் தடையும் நேற்றுமுன்தினம் இரவு அகற்றப்பட்டுள்ளன. (ஐ-426)

## பயிலுநர் நியமனத்தில் உள்வாங்கப்படாத பட்டதாரிகளின் ஆவணங்கள் அமைச்சுக்கு

### நேர்முகத் தேர்வின் பின்னர் அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், மே 07

பட்டதாரிகளை அரச சேவையில் உள்ளீர்ப்புச் செய்யும் நோக்குடன் கடந்த 2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பட்டதாரி பயிலுநர் நியமனத்தில் உள்வாங்கப்படாத, முறையீடு செய்த பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு யாழ்.மாவட்டத்தில் நடத்தி முடிக்கப்பட்டு ஆவணங்கள் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

பட்டதாரிகளை அரச சேவையில் உள்ளீர்ப்புச் செய்யும் நோக்குடன் கடந்த 2012 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. இதன் போது 2011 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பட்டம் பெற்றவர்களே நேர்முகத் தேர்வுக்குத் தோற்ற முடியும் என்று பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்திருந்தது.

இந்த நிலையில் 2012 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் திகதிக்கு முன்னர் பட்டம் பெற்றவர்கள் தம்மையும் இதில் இணைத்துக் கொள்ளுமாறு கோரி முறையீடு செய்திருந்தனர்.

இதற்கமைய யாழ்.மாவட்டத்திலிருந்து பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு 333 விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருந்தன. யாழ்.மாவட்ட செயலகத்தில் இவர்களுக்கான நேர்முகத் தேர்வு கடந்த வாரம் இடம்பெற்றது. இதில் 178 பேரே தோற்றியிருந்தனர். அத்துடன் புதிதாக 74 பேர் முறையீடும் செய்துள்ளனர்.

நேர்முகத் தேர்வுக்குத் தோற்றிய பட்டதாரிகளின் ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார். (த-5)

## முள்ளியவளை வெடிப்பு தொடர்பில் இரசாயன பகுப்பாய்வாளர் ஆராய்வு

முல்லைத்தீவு.மே 7

முள்ளியவளை கணினி நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற வெடிப்புச் சம்பவம் குறித்து நேற்றுக் கொழும்பிலிருந்து வந்த இரசாயனப் பகுப்பாய்வாளர்களே இந்தச் சம்பவ இடத்தை ஆராய்ந்துள்ளனர்.

இதன் பின்னர் குறித்த கணினி நிலையத்துக்கு வழங்கப்பட்ட பொலிஸ் காவல் நீக்கப்பட்டுள்ளது. ஆயினும் இந்தச் சம்பவத்தின்போது காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் பணியாளரான உடுத்துறையைச் சேர்ந்த இ.நிதர்சன் என்பவரைச் சுற்றி 2 பொலிஸார் காவலில் ஈடுபட்டுள்ளனர். அவரை பார்வையிட வருவோரும் கண்காணிக்கப்படுகின்றனர்.

வெடிப்புச் சம்பவத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. (த-102)

# ஆசிரியர்களுக்கு நிலுவை வழங்கியமையாலேயே மாதாந்தம் 20 மில்லியன் ரூபா மேலதிக செலவு

## வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மே 07

ஆசிரியர்களுக்கான நிலுவைப் பணம் வழங்கியமையினாலேயே, வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு மாதாந்தம் 20 மில்லியன் ரூபா மேலதிக செலவு ஏற்பட்டதாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு வரவு - செலவுத் திட்டத்துக்கு அமைய ஒதுக்கப்பட்ட நிதியிலும் பார்க்க மாதாந்தம் 20 மில்லியன் ரூபா மேலதிக செலவு செய்யப்பட்டு வந்தது. இந்த மேலதிக நிதிக் கொடுப்பனவினால் கல்வி அமைச்சு இந்த வருடத்தின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் நிதி நெருக்கடி நிலைமைக்குள் தள்ளப்படும் நிலையை எதிர்நோக்கியிருந்தது.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழான மேலதிக ஆளணியினாலேயே இந்த மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டிய தேவை எழுந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது. வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் கூட மேலதிக ஆளணியினால் தான் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படுகின்றது என்பதை ஒப்புக் கொண்டிருந்தார்.

இந்த நிலையில் மேலதிக கொடுப்பனவு ஏன் வழங்கப்படுகின்றது என்பது தொடர்பில் வடக்கு மாகாணப் பிரதம செயலாளருக்கு, மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகளினால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை விளக்கமளிக்கப்பட்டது.

குறித்த விளக்கத்தில், ஆசிரியர்களின் பதவி உயர்வுகள் காரணமாக அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைப் பணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்குரிய நிதி வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. இதனாலேயே இந்த மேலதிக நிதிக் கொடுப்பனவுகள் இடம்பெறுவதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் குறிப்பிட்டார். (த-5)

# பாடசாலைக் கட்டடத்தை சேதப்படுத்திய இரண்டு மாணவர்

யாழ்ப்பாணம், மே 07

தெல்லிப்பழைப் பிரதேசத்தில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப் பட்ட பாடசாலைக் கட்டடம் நேற்று முன்தினம் இரவு மாணவர்கள் சிலரினால் சேதமாக்கப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜி.சீ.ஈ சாதாரண தரத்துக்குத் தோற்றும் பாடசாலை மாணவர்களின் ஒழுக்கமின்மையை ஆசிரியர் ஒருவர் கண்டித்ததைத் தொடர்ந்து, அதற்குப் பழிவாங்கும் நோக்குடன் குறித்த கட்டடத்தை அவர்கள் சேதப்படுத்தியுள்ளனர். நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு பாடசாலையின் பின்பக்க வழியாக வந்த இரு மாணவர்களே இந்தத் தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

குறித்த இரு மாணவர்களின் பெற்றோர் பாடசாலைக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் கட்டடத்தின் திருத்தங்களைத் தாம் மேற்கொண்டு தருவதாகப் பாடசாலை நிர்வாகத்திடம் உறுதியளித்துள்ளனர்.

மேற்படி பாடசாலைக் கட்டடம், கடந்த 2012 ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## நவீன மீன் விற்பனைக் கூடம்; அரியாலையில் நிறுவ அடிக்கல்

யாழ்ப்பாணம், மே 7
கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கிவரும் இலங்கை கடற்றொழில் கூட்டுத் தாபனத்தின் வடபகுதிக்கான நவீன மீன் விற்பனைக் கூடம் ஒன்று அரியாலையில் நிறுவப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் கடந்த வெள்ளிக் கிழமை அரியாலை நாலாம் கட்டைச் சந்தியில் பிராந்திய முகாமையாளர் க.கனோஜனால் நடப்பட்டுள்ளது. இந்த விற்பனைக் கூடம் ஜூன் மாத நடுப்பகுதியில் செயற்பட ஆரம்பிக்கும் என்றும், யாழ்ப்பாண மீனவர்களுக்கு நல்லதொரு சந்தை வாய்ப்பும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் முகாமையாளர் குறிப்பிட்டார். (ஓ-10)

## ஊழியர் நியமன முறைகேட்டை விசாரிக்க வல்வெட்டி நகர சபைத் தலைவர் இணக்கம்

யாழ்ப்பாணம், மே 7
வல்வெட்டித்துறை நகர சபையினால் வழங்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர் தெரிவில் இடம்பெற்ற முறைகேடு தொடர்பில் விசாரணைக் குழு அமைப்பதற்கு நகர சபைத் தலைவர் சம்மதித்துள்ள அதே வேளை, நகர சபைத் தலைவருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சட்ட ஏற்பாடுகளைச் சுட்டிக்காட்டி அவர் நிராகரித்துள்ளார்.
வல்வெட்டித்துறை நகர சபையினால் வழங்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர் தெரிவில் இலஞ்சம் பெறப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அது தொடர்பில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சும், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரும் விசாரணைக் குழுவை அமைத்து விசாரணைகள் நடத்தி அதில் தொடர்புடைய அனைவருக்கும் தண்டனை வழங்க வேண்டும். இதற்காக அவசர கூட்டத்தை முன்னறிவித்தல் வழங்கிக் கூட்டுமாறு வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர்கள் 5 பேர் கூட்டாகக் கோரிக்கை விடுத்திருந்தனர்.
உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைய வல்வெட்டித்துறை நகரசபைத் தவிசாளரால், சபையின் கூட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கூட்டப்பட்டது. இதில் முறை கேடுகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்குத் தவிசாளர் சம்மதம் தெரிவித்துள்ளார். இதற் கமைய விசாரணைக் குழு அமைக்க வேண்டும் என்ற பிரேரணை நிறைவேற்றப்பட் டுள்ளது.
அதனைத் தொடர்ந்து தலைவருக்கு எதிராக நம்பிக்கையில் லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.
அதனைத் தலைவர் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். உள்ளூராட்சிச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் சமர்ப்பிக்க முடியாது என்று தெரிவித்தே அதனை ஏற்க மறுத்து விசேட கூட்டத்தை முடிவுறுத்தியுள்ளார் தலைவர், இருப்பினும் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த உறுப்பினர்கள் சபை மண்டபத்தை விட்டுப் பல மணி நேரமாக வெளியேறாமல் இருந்தனர். (த-5)

## சாவகச்சேரி நகர சபையால் விடுவிப்பு கடிதங்கள் கையளிப்பு

தென்மராட்சி, மே 7
வடமாகாண உள்ளூராட்சி திணைக்களத்தால் அனுப் பப்பட்ட இடமாற்றல் பட்டியல் பிரகாரம் சாவகச்சேரி நகர சபையில் கடமையாற்றி இடமாற்றம்பெற்ற மூன்று உத்தியோகத்தர்களுக்கான விடுவிப்பு கடிதங்கள் நேற்று உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட்டன.
எதிர்வரும் 12 ஆம் திகதி தொடக்கம் அவர்கள் இடமாற்றல் செய் யப்பட்டுள்ளதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
நகரசபை அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளர்களாகக் கடமையாற்றிய அ.சதீஸ் யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனைக்கும், திருமதி ப.கிருஷ்ணகுமார் சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகத்துக்கும், அபிவிருத்தி உதவியாளராக கடமையாற்றிய க.சிவகுமார் நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.
இவர்கள் உள்ளூராட்சி திணைக்களத் தால் கடந்த மார்ச் 2 ஆம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய் யப்பட்டிருந்த போதிலும் சபையின் வேலைத் திட்டங்களை பூர்த்தி செய்யும் நோக்கில் இரண்டு மாதங்களின் பின்னர் இடமாற்றல் கடிதங்கள் வழங்கப்பட்டதாகவும் தெரி விக்கப்பட்டது. (வ-9)

**எதிர்வரும் 12 ஆம் திகதி தொடக்கம் இடமாற்றல் செய் யப்பட்டுள்ளதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

## நகரசபைத் தலைவருக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

### சாவகச்சேரி சமுர்த்திச் சங்கத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு

தென்மராட்சி, மே 7
சாவகச்சேரி சமுர்த்திச் சங்கத்தினரால் சாவகச்சேரி நகர சபைத் தலைவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றினால் தள்ளுபடி செய்யப்பட்டது.
சாவகச்சேரி நகரசபையின் கட்டடங்களுக்கு அருகில் நீண்ட காலமாக சாவகச்சேரி பொழுது போக்குக் கழகத்தால் பயன்படுத்தப்பட்டு வந்த ரெனிஸ் மைதானம் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தாமல் காணப்பட்டது. குறித்த காணியை நகர சபையினர் அரச காணி என்று கருதி தமது தேவைக்குப் பயன்படுத்தி வந்தனர்.
தற்போது அந்தக் காணிக்குள் சாவகச்சேரி சமுர்த்திச் சங்கத்தினர் கட்டடம் அமைக்க முற்பட்டபோது நகரசபையினர் அக்காணி சபையின் பயன்பாட்டுக்கு தேவையென தடுத்துள்ளனர். அதை எதிர்த்து சாவகச்சேரி சமுர்த்திச் சங்க முகாமையாளரால் நகரசபைத் தவிசாளருக்கு எதிராக "சாவகச்சேரி பிரதேச செயலருக்குரிய காணியில் சமுர்த்தி வங்கிக்கு கட்டடம் நிர்மாணிப்பதற்கு ஒதுக்கப்பட்ட காணியை நகரசபை அனுமதியின்றி பாவிப்பது தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
அந்த வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, நகரசபை சார்பில் சட்டத்தரணி கேசவன் சயந்தன் முடிக்குரிய காணியை அரச சார்பற்ற நிறுவனமான சமுர்த்திச் சங்கம் கட்டடம் அமைக்க முயல்வது குற்றமென வாதிட்டதுடன் நகர சபைத் தலைவருக்கு எதிராக தனியார் சங்கம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது எனவும் வாதிட்டார்.
அதையடுத்து குறித்த வழக்கை விசாரிப்பதற்கு இந்த நீதிமன்றுக்கு நியாயாதிக்கம் இல்லை என்பதால் தகுந்த நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யலாம் என்று கூறி வழக்கைத் தள்ளுபடி செய்தார் நீதிபதி. (வ-9)

## வறட்சியின் பாதிப்பு குறித்து மன்னார் விவசாயிகளுக்கு பயிற்சிப் பட்டறை

மன்னார், மே 7
வறட்சியால் பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்ட விவசாயிகளின் எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டு 'வறட்சியான சிறுபோகம் 2014 வெற்றிகரமான பயிர்ச் செய்கைக்கான விவசாய தொழிநுட்ப முறைகள்' என்ற தொனிப்பொருளில் பயிற்சிப் பட்டறை ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை காலை காலை 9.45 மணிக்கு மன்னார் வண்ணாமோட்டை மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடை பெற்றது.
மன்னார் விவசாய திணைக்களத்தின் மன்னார் பிரதி விவசாய பணிப்பாளர் பொ.அற்புதச் சந்திரன் தலைமையில் நடைபெற்ற பயிற்சிபட்டறைக்கு பிரதமவிருந்தினராக வட மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் கலந்துகொண்டார்.
நவீன விவசாய முறைகளை விவசாய அமைச்சர் பார்வையிட்டபின்னர் அதன்பின்மாவட்ட விவசாய பயிற்சி நிலைய மண்டபத்தில் பயிற்சிப்பட்டறை ஆரம்பமாகியது. இதன் போது விவசாயம் தொடர்பாக அமைச்சர் உரை யாற்றினார்.



*பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்ட விவசாய அமைச்சர் . வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன். மேலதிக பணிப்பாளர் (ஆராய்ச்சி) எஸ்.அரசகேசரி. பிரதி விவசாயப் பணிப்பாளர், மன்னார் நகரசபைத் தலைவர், உப தலைவர், மற்றும் உத்தியோகத்தர்கள்.*

இந்தவருடம் மன்னார் மாவட்டத்தில் கடும் வறட்சி காணப்படுவதால் பயிர்ச் செய்கை பாதிப்படைந்துள்ளது.
இதனை எதிர்வரும் காலங்களில் எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பன தொடர்பாகவும் நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகள் எவ்வாறு கையாள்வது? அதன் மூலம் உச்சகட்ட விளைச்சலை எவ்வாறு அடைவது போன்ற விடயங்கள் ஆராயப்பட்டு விவசாயிகளுக்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டன. (வ)



சிறுநீரக நோய்களைத் தடுக்கும் நடவடிக்கையாக இடர் முகாமைத்துவ அமைச்சின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் குடிதண்ணீரில் கல்சியம் கூடுதலாக காணப்படும் இடங்களில் சுத்திகரிப்பு நீர் வழங்கும் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றது. இதன் ஒரு கட்டமாக நேற்று செவ்வாய்க்கிழமை நெடுங்குளம், ஆசிகுளம் பகுதியில் சுத்திகரிப்பு நீர் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர மற்றும் வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் வே.சூரியராஜா ஆகியோர் குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தனா. (ஓ-421)

## குழந்தையுடன் பிச்சையெடுத்த பெண்ணை பிணையில் விடுவிக்கக் கோரிய உறவுகள்

தென்மராட்சி, மே 7
தன்னை அநாதை என்று கூறி சாவகச்சேரி சந்தையில் குழந்தையுடன் பிச்சை எடுத்தமைக்காக நீதிமன்றால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பெண்ணின் பெற்றோர், கணவர், உறவுகள் எனப் பலர் சாவகச்சேரி நீதிமன்றுக்கு வந்து குறிப்பிட்ட பெண்ணைப் பிணையில் விடுவிக்குமாறு கோரினர்.
கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி சந்தையில் குழந்தையுடன் பிச்சை எடுத்ததாகக் குற்றம் சாட்டி பெண்ணொருவருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.
வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அந்தப் பெண் தனக்கு உறவுகள் என்று சொல்வதற்கு குழந்தையைத் தவிர வேறொருவரும் இல்லை என்று நீதிமன்றில் கூறினார்.
அதனையடுத்து குழந்தையுடன் பிச்சையெடுத்த குற்றத்துக்காக இரு வாரங்கள் சாதாரண சிறைத் தண்டனை விதித்ததுடன் தண்டனைக் காலம் முடிவடைந்ததும் அப்பெண்ணை வவுனியாவில் உள்ள பராமரிப்பு நிலையத்தில் தங்க வைக்குமாறு உத்தரவிட்டார்.
குறித்த செய்தி பத்திரிகையில் வெளியானதை அடுத்து பெண்ணின் பெற்றோர், கணவன் மற்றும் உறவினர்கள் நேற்றுக்காலை நீதிமன்றுக்கு வந்து பெண்ணையும் குழந்தையையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு சட்டத்தரணி மூலம் கோரிக்கை விடுத்தனர்.
நீதிமன்றால் ஏற்கனவே தண்டனை வழங்கப்பட்டுள்ளதால் தண்டனைக்காலம் முடியும் வரை அது குறித்து பரிசீலிக்க முடியாது எனக்கூறி நீதிவான் அவர்களது கோரிக்கையைத் தள்ளுபடி செய்தார். (வ-9)

**"குறித்த செய்தி பத்திரிகையில் வெளியானதை அடுத்து பெண்ணின் பெற்றோர், கணவன் மற்றும் உறவினர்கள் நேற்றுக்காலை நீதி மன்றுக்கு வந்து பெண்ணையும் குழந்தையையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு சட்டத் தரணி மூலம் கோரிக்கை விடுத்தனர்.**

# தவறான எண்ணங்களுக்கு இடமளியாதீர்! இளைஞர் மாநாட்டில் ஜனாதிபதி அறிவுரை

"இளம் மனங்கள் கூருணர்வு மிக்கவை. அவற்றை இலகுவில் தவறான வழியில் செயற்படுத்த முடியும். எனவேதான், போராளிகளாக இளைஞர்களை சேர்த்துக்கொள்வதற்கு இதை ஓர் கருவியாக பயங்கரவாதிகள் பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறு சேர்க்கப்படு கின்ற இளைஞர்கள், பெரும் பாலும் துப்பாக்கியின் இறுதிக் குறியாகி விடுகின்றனர்."

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சர்வதேச இளைஞர் மாநாட்டை ஆரம்பித்துவைத்து உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:

பயங்கரவாதத் துன்பங்கள் முடிவடைந்ததையடுத்து இளைஞர்களிடையே மிகவும் பாதுகாப்பான அபிவிருத்தியடைந்த இலங்கையைப் பற்றிய எதிர்பார்ப்பு மீண்டும் உயிர் பெற்றுள்ளது.

இன்றைய இளைஞர்களுக்கு பாரிய பொறுப்புகள் இருக்கின்றன. உயர்ந்துகொண்டிருக்கின்ற முதியவர் களை கவனத்தில் எடுத்துக்கொள்கின்ற அதேவேளை, தமது வாழ்க்கையை சீர்படுத்திக்கொள்ளும் பாதைகளைத் தேடிக்கொள்ள வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வளர்ச்சியடைகின்ற இவ்விடயம் தொடர்பாக கவனம் செலுத்தாவிட்டால், அது கொள்கை தயாரிப்பாளர்கள், தேசிய தலைவர்கள், உலக சமூகத்தினர் ஆகியோருக்கு கட்டுப்படுத்த முடியாதளவிலான சிக் கல்களை ஒரே நேரத்தில் உருவாக் கிவிடும்.

அபிவிருத்தியில் இளைஞர்களின் பங்கேற்பை உறுதிப்படுத்தும் அடிப்படைப் பொறுப்பு அரசுக்குரியதாகும். இந்த முயற்சியை அர்த்தமுள்ளதாகவும் வெற்றிகரமானதாகவும் ஆக்கிக்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அதேவேளை, இளம் மனசுகள் தாக்கங்களுக்கு கூருணர்வுமிக்கவையென்பதையும் இலகுவாகத் தவறான வழியில் செலுத்த முடியும் என்பதையும் நாம் அறிவோம். தமது போராளிகளாக இளைஞர்களை சேர்த்துக்கொள் வதற்கு பயங்கரவாதிகள் இதை ஒரு கருவியாக பயன்படுத்திக் கொள் கின்றனர். அவ்வாறு சேர்க்கப்படுகின்ற இளைஞர்கள், பெரும்பாலும் துப்பாக்கியின் இறுதிக் குறியாகிவிடுகின்றனர். இன்றேல் வாழ்வதற்கு வாய்ப்பு பெற்றால் களைப்படைந்த சந்ததியாக மாறுகின்றனர். இலங்கையில் முன் னாள் போராளிகளுக்கு புனர்வாழ் வளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் சமூகமயப்படுத்தப்பட்டுள்ளனர்.

1971ஆம் ஆண்டிலும் 1989ஆம் ஆண்டிலும் தலைதூக்கிய இளைஞர் கலகங்கள் இரண்டின் அனுபவத்துடன் நாம் பகைமை ரீதியான நிலைமைகளை உருவாக்குகின்ற காரணி களைப் பற்றி விழிப்புடன் இருக்கின்றோம். குறிப்பாக கொள் கைகளை தயாரிக்கின்றபோதும், நடைமுறைப்படுத்துகின்றபோதும் இளைஞர்கள் செயலூக்கமுள்ள பங்கு பற்றுநர்களாக இருக்கின்றபோது, பொருளாதார, சமூக, அபிவிருத்தி மிகவும் வெற்றிகரமாக அமையுமென் பதை இலங்கை ஏற்றுக்கொள்கின்றது.

அதேவேளை, இளைஞர்களாகிய நீங்கள் படைப்பாற்றல் மிக்கவர்களாக இருங்கள்.

தடை களை தகர்ப்பதற்கு எப்பொழுதும் புதிய அணுகுமுறைகளை தேடுவதற்கு முயற்சி செய்யுங் கள். மிகச் சிறந்த உலகம் ஒன்றை உருவாக்குவதற்காக உங்களுடைய சக்தியையும் சாத்தியக்கூறுகளையும் பயன் படுத்துங்கள். உலகத்திற்காக உங்கள் வசம் இருக்கும் கருவி புத்தாக்கமும், படைப் பாற்றலுமாகும். - என்றார்.

## கடைகளுக்கு முன் விழித்திருந்தவர் அதிகாலை கைது

மன்னார் பேசாலையில் அதிகாலை 2 மணியளவில் அடையாள அட்டை ஆவணங்கள் எதுவுமின்றி வியாபார நிலையங்களின் முன்னால் விழித்திருந்த ஒருவரை மன்னார் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் திங்கள் கிழமை அதிகாலை ரோந்து சென்ற பொலிஸார் குறித்த நப ரைக் கண்டு விசாரித்துள்ள னர். தான் கண்டியைச் சேர்ந்தவரென்று அந்த நபர் பொலிஸாருக்குக் கூறியுள் ளார். அவரிடம் விசாரணை மேற்கொண்ட போது அவர் முன்னுக்கு பின் முரணான தகவல் களைக் கூறியுள்ளார். அதனால் அவரைப் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டுவிட்டு மன்னார் நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். அவரிடம் விசாரணை மேற்கொண்ட பின்னர் நீதிமன்று 10 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்தது. வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (த-4-103)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகேஸ்வரி இரத்தினம்

இருபாலை குழுக்கண்டி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகேஸ்வரி இரத்தினம் நேற்று (06.05.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும், மணிவாசகன் (ஆஸ்தி ரேலியா), சந்திராதேவி (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), மாலினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கலாதேவி (ஆஸ்திரேலியா), சுபாஸ்சந்திரன் (நோர்வே), பார்த்தீபன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், Dr.றீர்நீதா (ஆஸ்திரேலியா), Dr.ஹிருத்திகா (ஆஸ்திரேலியா), Dr.துஷ்யந்தன், ஹர்சனன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிருந்தாவனம்,*
*குழுக்கண்டி ஒழுங்கை,*
*கோப்பாய் தெற்கு, கோப்பாய்.*

*தகவல்:*
**குடும்பத்தினர்**
**0771040964**

## புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் புதிய நோயாளர் விடுதி இன்று திறப்பு

முல்லைத்தீவு,மே 7

புலம்பெயர் சமூகத்தின் பங்களிப்பில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட நோயாளர் விடுதி இன்று புதன்கிழமை திறந்து வைக்கப்படுகின்றது. போரில் பெரிதும் அழிவுற்ற புதுக்குடியிருப்பு வைத்திய சாலையின் தேவையை உணர்ந்து புலம்பெயர்ந்து வாழும் மருத்துவர் சர்வேஸ்வரனின் முயற்சியால் திரட்டப்பட்ட நிதியில் அமைக்கப்பட்ட 16 படுக்கைகளைக் கொண்ட புதிய விடுதி இன்று திறந்து வைக்கப்படுகிறது.

இந்தத் திறப்புவிழாவுக்கு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் உள்ளிட்டோர் அழைக்கப்பட்டுள்ளனர். (த-101)

## சத்தியாக் கிரகப் போராட்டத்தை நேற்று கைவிட்டனர் வல்வை நகர சபையினர்

### வட மாகாண சபை முதல்வரின் கோரிக்கையால்

வடமராட்சி,மே.7

வல்வை நகரசபை சபா மண்டபத்தில் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சபையின் ஆளும் தரப்பு உறுப்பினர்கள் நான்கு பேரும், வட மாகாண சபைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் விடுத்த வேண்டுகோளின் பேரில் நேற்று மாலை 5 மணியுடன் தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் வல்வை நகர சபைக் கூட்டம் சபைத் தலைவர் ந.அனந்தராஜ் தலைமையில் ஆரம்பமானது. இதன் போது சபையின் உப தலைவர் க.சதீஸ் மற்றும் க.ஜெயராஜா, கோ.கருணானந்தராஜா, எஸ். எக்ஸ். குலநாயகம் ஆகியோர் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

வல்வை நகர சபையின் தலைவர் ந. அனந்தராஜின் நிர்வாகத்தின் கீழ் நடைபெறும் முறைகேடுகள், ஊழல்கள், நிர்வாகச் சீர்கேடுகள் என்பன தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

அண்மையில் வல்வை நகர சபையால் வழங்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர்கள் நியமனத் தின் போது லஞ்சப் பணம் பெறப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சும், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரும் விசாரணைக்கு குழு ஒன்றை நியமித்து விசாரணைகளை நடத்தி, இதில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தண்டனை வழங்க வேண்டும்.

ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட வல்வை நகரசபையில் பெரும்பாலான உறுப்பினர்களாகிய நாம் கடும் அதிருப்தி அடைந்துள்ளோம்.

மேற்கூறிய காரணங்களுக்காக வல்வை நகர சபைத் தலைவர் அனந்தராஜ் மீது நம்பிக்கையில்லை என வல்வை நகர சபை தீர்மானிக்கிறது என பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தப் பிரேரணையை சபையில் கொண்டுவர சபைத் தலைவர் மறுத்துவிட்டார். இதனை எதிர்த்து சத்தியாக்கிரகம் இருக்கப்போவதாக சம்பந்தப்பட்ட 4 உறுப்பினர்களும் அறிவித்ததுடன் நேற்றுமுன் தினம் முதல் சபா மண்டபத்தில் சத்தியாக்கிரகம் இருந்தனர்.

இதனைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளரும், வடக்கு மாகாண சபை அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் சத்தியாக்கிரகம் இருந்த 4 ஆளும் தரப்பு உறுப்பினர்களுடனும் கலந்துரையாடி சத்தியாக் கிரகத்தை விடுமாறு கோரினார். அவரது கோரிக்கையை ஏற்று, சத்தியாக் கிரகத்தை தற்காலிகமாக இடைநிறுத்த சம்மதம் தெரி வித்த 4 உறுப்பினர்களும் சத்தியாக் கிரகத்தை கைவிட்டனர். (ஜ-173)

## மரண அறிவித்தல்

### திருமதி மேரிதிரேசா சஜீவன்



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், நாவாந்துறையை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி மேரிதிரேசா சஜீவன் 04.05.2014 ஞாயிற்றுக் கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் செல்லையா சஜீவனின் பாசமிகு மனைவியும், அன்ரனி கணேஸ் - மேரிறோசா (றூபி) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், மேரி அலன் (யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்), ஆன் (ஆசிரியை - தேசிய கல்வியியற் கல்லூரி - யாழ்ப் பாணம்) ஆகியோரின் அன்பு நிறை சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.05. 2014) புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல் லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கண்ணாபுரம்,*
*நாவாந்துறை.*
*தொ.பே.:0776673760,*
*0775419806.*

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### திருமதி விஜயகுமாரி சீவரத்தினம்



கம்பர்மலை, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயகுமாரி சீவரத்தினம் நேற்று (06. 05.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேல் - தங்கம் தம்பதியினரின் அன்பு மகளும், சீவரத்தினத்தின் அன்பு மனைவியும், சுதாகர், சுகிர்தன், சுஜிதா, சுகர்ணா ஆகியோரின் பாசமிகு தாயாரும், லதா, வரதன், சுமித்திரா, குலேந்திரராசா ஆகியோரின் பாசமிகு மாமியும், சுரேஸ், சுகன்ஜா, சுவேனிஜா, சுகர்ணிஜா, சுஸ்மிதின், ஆரவிராஜ், அமிர்தவர்சினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2014) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரிக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மணற்தெரு, கம்பர்மலை.*
*வல்வெட்டித்துறை. 0778392144*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## போக்குவரத்து விதிகளை மீறிய 5 பேருக்கு தண்டம்

வடமராட்சி, மே 7

பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் போக்குவரத்து ஒழுங்கு விதிகளை மீறிய 5 பேருக்கு 22 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

போக்குவரத்துப் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கையின் போது போக்குவரத்து ஒழுங்கு விதிகளை மீறிய 5 பேர் அகப்பட்டுக் கொண்டனர்.

அவர்களுக்கு எதிராகப் பருத்தித்துறை பொலிஸார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஜே.கஜநிதிபாலன் 5 பேருக்கும் மொத்தமாக 22 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பு வழங்கினார். (வ-173)

# சாவகச்சேரி மருத்துவமனையில் இரத்த வங்கிப் பிரிவு அவசியம்

## நோயாளர்கள் தரப்பில் கோரிக்கை

தென்மராட்சி, மே 7

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இரத்த வங்கிக் கிளையொன்றை ஆரம்பிக்குமாறு நோயாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த மருத்துவமனைக்கு வரும் அவசர நோயாளர்களுக்கு குறிப்பாக கர்ப்பிணிகள், பிரசவத் தாய்மார் போன்றோருக்கு இரத்தம் தேவைப்படும் வேளைகளில் அவர்கள் யாழ். போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

> நோயாளர்களுக்கு இரத்தம் தேவைப்படும் வேளைகளில் யாழ். போதனா மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். இதனால் சில வேளைகளில் உயிரிழப்பு ஏற்படக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன.

இதனால் சில வேளைகளில் உயிரிழப்பு ஏற்படக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் சேவையை தென்மராட்சிப் பிரதேச மக்கள் மட்டுமன்றி வடமராட்சி கிழக்கு, பூநகரி, பச்சிலைப்பள்ளி போன்ற பிரதேச மக்களும் பயன்படுத்தி வருகின்றனர். அத்துடன் அனுபவம் வாய்ந்த பல மருத்துவர்களும் இங்கு கடமையாற்றுகின்றனர்.

இந்த நிலையில் குறித்த மருத்துவமனையில் யாழ். போதனா மருத்துவமனையின் இரத்த வங்கிக் கிளையைத் திறக்குமாறு சுகாதாரத் திணைக்களத்தினரை நோயாளர்கள் கோரியுள்ளனர்.

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த பல்வேறு அமைப்புக்கள் வருடந்தோறும் யாழ். போதனா மருத்துவமனை இரத்த வங்கிக்கு இரத்தம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)

## சுற்றாடலை பேணத் தவறிய மூவருக்கு அபராதம்

வடமராட்சி, மே 7

பருத்தித்துறை நகரப் பகுதியில் நுளம்பு பெருகும் வகையில் வீடு மற்றும் வளவுச் சுற்றாடல் களை வைத்திருந்த மூன்று பேருக்குப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் தலா ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

குறித்த பகுதி வீடு, வளவு சுற்றாடல்களை சோதனை இட்ட பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பிரிவு பொலிஸார், சுற்றுச் சூழலை நுளம்பு பெருகாத விதத்தில் பேணத் தவறிய மூன்று பேர் மீது பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் இந்த வழக்குகள் தனித்தனியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பிரதிவாதிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (வ-173)

## முன்னுரிமை அடிப்படையில் பயனாளிகளுக்கு மலசலகூடம்

யாழ்ப்பாணம், மே 7

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் முன்னுரிமை அடிப்படையில் மலசலகூடம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்தார்.

அரியாலை கிழக்கு ஜே/90 கிராம அலுவலர் பிரிவு பயனாளிகளுக்கு ஒவ்வொன்றும் தலா ரூபா 60 ஆயிரம் செலவில் பத்துப் பேருக்கு மலசலகூடம் அமைப்பதற்கென மீள்குடியேற்ற அமைச்சு நிதி ஒதுக்கீடுகளை வழங்கவுள்ளதாகவும் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (வ-7)



பாதுகாப்பற்ற நிலையிலுள்ள வடிகால்வாய்


## வடிகாலுக்குப் பாதுகாப்பு கட்டு அமைக்கப்படுமா?

கோப்பாய், மே 7

கோப்பாய் சந்தியில் உள்ள வடிகால்வாய்க்கு பாதுகாப்பு கட்டு அமைக்கப்படாததால் வீதியால் பயணிக்கும் பாதசாரிகள் ஆபத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

பருத்தித்துறை வீதியில் உள்ள குறித்த வடிகால்வாய் வீதி புனரமைப்பின் போது அமைக்கப்பட்டது.

இரவில் அப்பகுதி வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் பாதுகாப்பற்ற கால்வாயால் பாதிக்கப்படும் நிலைமையை எதிர்கொண்டுள்ளனர். (வ-17)



வலி.மேற்குப் பிரதேச சபையால் சங்கானை யாழ்.முதலாம் வீதியிலிருந்து ஓடக்கரை வீதியுடன் இணையும் சுமார் 300 மீற்றர் பாதை 90 லட்சம் ரூபா செலவில் கொங்கிறீற் பாதையாகப் புனரமைக்கப்படும் பணி நடை பெற்று வருகின்றது. (ஒ-29)

## எங்களுக்கும் வீடுகள் வேண்டும்

### வரணியில் படையினரால் விடுவிக்கப்பட்ட 10 அரச வீட்டுத் திட்ட உரிமையாளர்கள் கோரிக்கை

வரணிப் பிரதேசத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட 52 ஆவது பிரிகேட் தளத்தில் உள்ளடங்கி இருந்த 10 அரச வீட்டுத்திட்ட உரிமையாளர்களும் தமக்கான வீடுகளை அமைத்துத் தர வேண்டும் என்று உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாச உள்ளூராட்சி அமைச்சராக இருந்த காலகட்டத்தில் நாடளாவிய ரீதியில் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டங்களை ஆரம்பித்து அவர்களுக்கு அரச நிதியில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

அப்போது வரணிப் பிரதேசத்திலும் குறித்த பகுதியில் இருந்த அரச காணியில் 10 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தன.

கடந்த கால போர் காரணமாக அந்தப் பகுதியில் குடியிருந்த குடும்பங்கள் ஏற்கனவே இடம் பெயர்ந்து நாட்டின் பல் வேறு இடங்களிலும் குடியமர்ந்து வசித்துவரும் நிலையில் குறித்த காணியிலிருந்த குடியிருப்புக்களின் உரிமையாளர்கள் தமக்கான வீடுகளை மீண்டும் அமைத்து குடியமர முடியாத நிலையில் உள்ளதாகக் கூறப்பட்டது. (வ-122)

## மீட்கப்பட்ட சடலம்; அடையாளம் காட்டினார் மகன்

வலி.வடக்கு, மே 7

சுன்னாகம் தெற்கு மூர்த்தியன்கூடல் வயல் வெளி கிணற்றில் இருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை மீட்கப்பட்ட சடலம் இனங்காணப்பட்டுள்ளது. தெல்லிப்பழை, பளை என்னும் இடத்தில் இருந்து இடம் பெயர்ந்த உடுவில் பகுதியில் வாழ்ந்து வந்த முதியவரான வைரமுத்து வெற்றிவேலு (வயது-77) என்பவருடைய சடலமே அது என அவரது மகனால் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் இவரைக் காணவில்லையென தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது. தெல்லிப்பழை வைத்தியசாலைக்குச் செல்வதாகக் கூறிச் சென்றவர் வீடு திரும்பவில்லை என்றும் மகன் விசாரணையின்போது தெரிவித்துள்ளார்.

மல்லாகம் நீதிமன்ற நீதிபதியின் விசாரணையைத் தொடர்ந்து சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதற்காக சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. (ஒ-86)

## கந்தப்பசேகரம் வீதியில் உள்ள கழிவுவாய்க்கால் படுமோசம்

கொழும்புத்துறை, மே 7

யாழ்.நகரில் காங்கேசன்துறை வீதியையும் முனீஸ்வரன் வீதியையும் இணைக்கும் கந்தப்பசேகரம் வீதியில் உள்ள பிரதான கழிவு நீர் வாய்க்கால் மதகு மற்றும் உப கழிவு நீர் வாய்க்கால்கள் அனைத்தும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

குறித்த வீதியில் உள்ள பிரதான மதகின் மேல்தளத்தின் அரைவாசிப் பகுதி உடைந்து வீழ்ந்துள்ளமையால் அந்த வீதியூடான வாகனப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.



சேதமடைந்த நிலையில் காணப்படும் கழிவு வாய்க்கால்

ஆஸ்பத்திரி வீதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் தமது வியாபார நடவடிக்கைகளுக்காக பாரவூர்திகளில் கொண்டு வரும் பொருள்களை குறித்த வீதியில் உள்ள தமது பின்புற வழியூடாகவே களஞ்சியப்படுத்தி வருகின்றன.

குறித்த பாலம் உடைந்துள்ளமையால் மதகுக்கு அப்பால் உள்ளவர்கள் தமது பொருள்களை களஞ்சியப்படுத்துவதில் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

அதேவேளை சேதமடைந்த கால்வாய்களால் கழிவு நீர் வடிந்தோடுவது தடைப்பட்டு மிகவும் துர்நாற்றம் வீசுவதுடன் நுளம்புப் பெருக்கமும் ஏற்படுகின்றது. பொருள்களை ஏற்றி இறக்கும் வகுப்புத் தொழிலாளர்களும், அந்த வீதியால் பயணிப்போரும் இதனால் தினமும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். குறித்த பிரதான கழிவு நீர் கால்வாயில் பல இடங்களில் நீர் ஓடுவதில் உள்ள தடைகளை சீர் செய்வதால் குறித்த பகுதியில் கழிவு நீர் தேங்காது என்று அந்தப் பகுதி வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் யாழ்.மாநகர சபை உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-135)

## ரூ.25 ஆயிரம் அபராதம்

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் விற்பனைக்கென கசிப்பு வைத்திருந்த நபரொருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. நேற்று முன்தினம் நீதிமன்றம் கலையும் வரை அபராதத் தொகை செலுத்தப்படாததால், சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (வ-9)

# மன்னார் வளைகுடாவில் தீவிரமான கண்காணிப்பு

## தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுக்க தமிழக கடற்படையினர் விசேட ஏற்பாடு

சென்னை,மே 7

தீவிரவாதிகளின் அச்சுறுத்தலைத் தொடர்ந்து மன்னார் வளைகுடாவில் உள்ள தீவுகளில் தங்கி, கடலோரப் பாதுகாப்புக் குழுமப் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். சென்னை மத்திய ரயில் நிலையத்தில் நடந்த குண்டு வெடிப்பைத் தொடர்ந்து, தமிழகம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தீவிரவாதிகள் கடல்வழியாக ஊடுருவக் கூடும் என்ற எச்சரிக்கை மற்றும் ஏற்கெனவே கைது செய்யப்பட்ட ஐ.எஸ்.ஐ. உளவாளி இலங்கையில் இருந்து வந்தது போன்ற சம்பவங்களால் தமிழகம் மற்றும் இலங்கை இடையிலான மன்னார் வளைகுடா கடல் பகுதியில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

### தீவுகளில் சோதனை

தூத்துக்குடி பகுதியில் உள்ள காசுவார்தீவு, காரைச்சல்லி தீவு, வான்தீவு, முயல்தீவு ஆகிய தீவுகளில் தமிழக கடலோரப் பாதுகாப்பு குழுமப் பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை அதிரடி சோதனை நடத்தினர். சந்தேகப்படும் நபர்களின் நடமாட்டம் இருக்கிறதா, ஆயுதங்கள் பதுக்கப்பட்டுள்ளதா என்று சோதனை நடத்தப்பட்டது.

தமிழக கடலோரப் பாதுகாப்புக் குழும அதிகாரி சைலேந்திர பாபு கூறியதாவது:- தூத்துக்குடி - இராமேஸ்வரம் இடையே மன்னார் வளைகுடாவில் 21 தீவுகள் உள்ளன. இவற்றில் பொலிஸார் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளனர். இரவு நேரங்களில் கடலோரப் பாதுகாப்பு குழும பொலிஸார் தீவுகளிலேயே தங்கி கண்காணிக்கின்றனர்.

இராமேஸ்வரம் முதல் கன்னியாகுமரி வரையிலான பகுதி தான் முக்கியமான இடம். இப்பகுதியில் 24 மணி நேரமும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸாரின் தீவிர கண்காணிப்பு காரணமாகவே கடந்த பெப்ரவரி மாதம் இராமேஸ்வரத்தில் 34 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. பொலிஸாரின் ரோந்து காரணமாக தூத்துக்குடி பகுதியில் 2 மூட்டை கஞ்சாவை கடலில் போட்டுவிட்டு கடத்தியவர்கள் தப்பியோடிவிட்டனர்.

### விழிப்புணர்வு குழுக்கள்

தமிழகத்தில் 591 கடலோரக் கிராமங்கள் உள்ளன. இவற்றில் விழிப்புணர்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடல் மற்றும் கடற்கரைப் பகுதியில் அந்நியர் நடமாட்டம் இருந்தால், இக்குழுவைச் சேர்ந்தவர்கள் உடனடியாக எங்களுக்கு தகவல் தெரிவிப்பர்.

தமிழக கடல் பகுதி வழியாக எந்த தீவிரவாதியும் ஊடுருவ முடியாது. அந்த அளவுக்கு கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அப்படியே தீவிரவாதிகள் ஊடுருவினாலும் அவர்களைத் தடுத்து கைது செய்யத் தயாராக இருக்கிறோம் என்றார் அவர். (த)

## சட்டம் , ஒழுங்கை நிலைநாட்டி பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்

### தமிழக அரசிடம் ஸ்ராலின் கோரிக்கை

சென்னை,மே 7

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டி அரசு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என தி.மு.க. பொருளாளர் ஸ்ராலின் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்;

சென்னை நெசப்பாக்கத்தைச் சேர்ந்த ரேகா என்ற இளம் பெண் கடத்திக் கொலை செய்யப்பட்டுத் துண்டு துண்டாக வெட்டப்பட்டு போரூர் ஏரியில் வீசப்பட்டுள்ளார். அவரது பெற்றோர் ஏற்கெனவே தன் மகளுக்கு இருக்கும் அச்சுறுத்தல் குறித்து புகார் அளித்தும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. பொலிஸாரின் அலட்சியமே இந்தச் சம்பவத்துக்கு காரணம். சென்னையில் நிறுவனத்தில் பணியாற்றிய உமா மகேஸ்வரி என்ற பெண் கொல்லப்பட்டதற்கும் பொலிஸ் அலட்சியமே காரணமாக இருந்தது. வீட்டில் இருக்கும் பெண்களுக்கும் பாதுகாப்பு இல்லை. வீட்டை விட்டு வெளியேறும் பெண்களுக்கும் பாதுகாப்பு இல்லை.

சென்னை மத்திய ரயில் நிலையத்தில் குண்டு வெடிப்பு நிகழ்ந்தவுடன், பொலிஸ் துறை முன் எச்சரிக்கை நடவடிக்கையுடன் தான் செயற்பட்டு வருகிறது என்றும் தீவிரவாதம் தமிழகத்தில் தலை தூக்க விடாமல் இருப்பதில் தனது தலைமையிலான அரசு கண்ணும் கருத்தாக செயற்படுகிறது என தமிழக முதல்வர் அறிக்கை விடுத்தார். ஆனால் அதற்கு பிறகும் தொடர் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் நடந்து வருகின்றன. மக்கள் அச்சத்தில் உள்ளனர். இதுதான் பொலிஸ்துறை கண்ணும் கருத்துமாக செயற்படும் லட்சணமா?

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டி அரசு மக்கள் மனதில் ஏற்பட்டுள்ள அச்சத்தைப் போக்கிப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்-இவ்வாறு ஸ்ராலின் கூறியுள்ளார் .(த)



வாரணாசியில், தேர்தல் பரப்புரை செய்து வரும் ஆம் ஆத்மி கட்சி தலைவர், கெஜ்ரிவால், பரப்புரையில் ஒரு குழந்தையுடன் கை குலுக்கினார். (த)

## சுப்ரதா ராயின் பிணை மனு உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி

புதுடில்லி,மே 7

சஹாரா குழுமத்தின் அதிபர் சுப்ரதா ராயின் பிணை மனுவை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. பிணை அளிக்க ரூபா 10 ஆயிரம் கோடி செலுத்த உயர் நீதிமன்றம் நிபந்தனை விதித்து இருந்தது.

பொதுமக்களிடம் பெற்ற 20,000 கோடி ரூபா நிதியை முறைகேடு செய்ததாக புகார் எழுந்ததை அடுத்து சஹாரா நிறுவனத் தலைவரான சுப்ரதா ராய் மீது வழக்குத் தொடரப்பட்டு உள்ளது. இதன் காரணமாக தற்போது அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இதனை அடுத்து தன்னை பிணையில் விடுவிக்குமாறு உயர்நீதிமன்றத்தில் ராய் மனு தாக்குதல் செய்தார். பிணை அளிக்க ரூபா 10 ஆயிரம் கோடி செலுத்த உயர் நீதிமன்றம் நிபந்தனை விதித்து இருந்தது. அதன்படி நீதிமன்றம் குறிப்பிட்ட தொகையை பிணையாகச் செலுத்தத் தயாராக உள்ளதாகவும் ராய் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் உயர் நீதிமன்ற நீதிபதி கே.எஸ். ராதா கிருஷ்ணன் அடங்கிய அமர்வு, நேற்று சுப்ரதா ராயின் பிணை மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

மேலும் அந்த உத்தரவில், சிறப்பு விசாரணைக் குழு, மற்றும் உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் அனைத்து உத்தரவுகளையும் சஹாரா நிறுவனம் மீறியுள்ளது. எங்களது முந்தைய உத்தரவுகளையும் அவரது குழுமமும் அவமதித்துள்ள நிலையில், இந்த பிணை மனுவுக்கு எந்தத் தகுதியும் இருப்பதா[illegible] தெரியவில்லை.

இது போன்ற நடத்தை[illegible] ஏற்றுக்கொள்ள மு[illegible] சட்டத்துக்கு உட்பட்டே சுப்ரதா ராய் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரைச் சிறைக்கு அனுப்புவதற்கு முன்னர் தேவையான அனைத்துச் சட்டபூர்வ நடைமுறைகளையும் நாங்கள் பின்பற்றியுள்ளோம்.

வாடிக்கையாளர்களின் பணத்தைத் திருப்பித் தருவதற்கான புதிய திட்டத்தை சுப்ரதா ராய் அறிவிக்க வேண்டும் என்று அந்த உத்தரவில் கூற[illegible]பட்டுள்ளது. (த)

## நான் தேநீர் விற்றேனே தவிர தேசத்தை விற்கவே இல்லை

### நரேந்திர மோடி

புதுடில்லி,மே 7

உத்தரப்பிரதேச மாநிலம் தோமாரியாகஞ்சில் தேர்தல் பிரசாரம் மேற்கொண்ட பா.ஜ.க. பரப்புரை வேட்பாளர் நரேந்திர மோடி, தான் தேநீர் மட்டுமே விற்றதாகவும் தேசத்தை ஒரு போதும் விற்றதில்லை என்றும் கூறினார்.

முன்னதாக தனது டுவிட்டர் வலை பக்கத்தில் பிரியங்கா காந்திக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சில கருத்துக்களையும் அவர் பதிவு செய்திருந்தார். அதில், கடைநிலை அரசியலே இந்திய தேசத்தை தவறான ஆட்சியில் இருந்து காப்பாற்றும் என அவர் தெரிவித்திருந்தார்.

அண்மையில் அமேதியில் தனது சகோதரர் ராகுல் காந்தியை ஆதரித்துப் பரப்புரைக் கூட்டத்தில் பேசிய பிரியங்கா காந்தி, தனது தந்தையின் [illegible]தியாகத்தைக் கூட சில [illegible] கீழ்த்தரமாக அரசிய[illegible]ப் பேசியிருந்தார்.



நரேந்திரமோடி

இதற்குப் பதிலளிக்கும் வகையில் மோடி தனது டுவிட்டர் வலை பக்கத்தில்: நான் சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன். எனவே என் அரசியலும் கடைநிலை மக்களுக்கானதாகவே இருக்கும். இத்தகைய கடைநிலை அரசியல் தான், 60 ஆண்டுகளாக நடைபெறும் தவறான ஆட்சியின் பிடியில் இருந்து இந்திய தேசத்தை மீட்கும். இந்தியாவை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும். பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இந்த தேசத்தின் வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள தொண்டு பலருக்கு புரிவதில்லை என பதிவுசெய்துள்ளார். (த)

## ஊழல் அதிகாரிகளை விசாரிக்க அரச அனுமதி தேவையில்லை

### உயர்நீதிமன்றம் தீர்ப்பு

புதுடில்லி,மே 7

ஊழல் அதிகாரிகளை விசாரிக்க சி.பி.ஐ. அமைப்பு மத்திய அரசிடம் முன் அனுமதி பெறத் தேவையில்லை என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஊழல் குற்றஞ்சாட்டப்பட்ட உயர் அதிகாரிகளிடம் விசாரணை மேற்கொள்ள சி.பி.ஐ. போன்ற அமைப்புகள் அரசு முன் அனுமதி பெற வேண்டும் என்ற டில்லி சிறப்பு பொலிஸ் சட்டப் பிரிவு 6-ஏயை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. பா.ஜ.கவின் சுப்ரமணீய சுவாமி மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனம் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு வந்தது.

நீதிபதிகள் ஆர்.எம்.லோதா, ஏ.கே.பட்நாயக், எஸ்.கே.முகோபாத்யாயா, தீபக் மிஸ்ரா, இப்ரஹிம் கலிபுல்லா அடங்கிய அரசியல் சாசன அமர்வு முன்பு மனு விசாரணைக்கு வந்தது.

மனுவை விசாரித்த அரசியல் சாசன அமர்வு: இந்த சட்டப் பிரிவு செல்லத்தக்கதல்ல. இச் சட்டம் இணைச் செயலாளர் மற்றும் அதற்கும் மேல் உள்ள பதவிகளை வகிக்கும் உயர் அதிகாரிகள் ஊழல் செய்திருந்தாலும் அவர்களைப் பாதுகாக்கும் வகையில் உள்ளது. உயர் அதிகாரிகள் என்ற ஒரே காரணத்துக்காக அவர்களுக்கு இத்தகைய பாதுகாப்பு தேவையில்லை.

குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் உயர் அதிகாரிகள், கடை நிலை அதிகாரிகள் என பேதம் பார்க்கத் தேவையில்லை.

எனவே அதிகாரிகளை விசாரிக்க அரசு அனுமதி தேவையில்லை. மத்திய அரசின் அனுமதியின்றி சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரிக்கலாம் இவ்வாறு உயர் நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தெரிவித்துள்ளது. (த)

## ராம் தேவின் தலையை கொண்டுவந்தால் 1 கோடி

புதுடில்லி,மே 7

*ராம்தேவின் தலையைக் கொண்டு வருபவர்களுக்கு ஒரு கோடி ரூபா வழங்கப்படும் என்று பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் அறிவித்துள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.*

*தலித் மக்களின் வீடுகளுக்கு ராகுல் செல்வது, ராகுல் ஹனிமூன் செல்வது போல் உள்ளதாக ராம்தேவ் கருத்து தெரிவித்திருந்தார். இது நாடு முழுவதும் உள்ள தலித் மக்களிடம் பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியது.*

*இதனால், அவர் மீது தீண்டாமை வன் கொடுமைச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டதுடன், அவரது தேர்தல் பரப்புரைக்கும் தேர்தல் ஆணையம் தடை விதித்திருந்தது.*

*இந்நிலையில் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள ஹோசியார்பூர் தொகுதியில் பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளரான பகவான் சிங் சோஹன், ராம்தேவின் தலையைக் கொண்டு வருபவருக்கு ஒரு கோடி ரூபா பரிசு வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.*


*முன்னதாக ஹோசியார்பூர் பஸ் நிலையத்தில் ராம்தேவின் உருவப் பொம்மையை அவர் தீ வைத்து எரித்ததுடன், அவருக்கு எதிராக கடுமையான கோஷங்களையும் எழுப்பியுள்ளார். மேலும், ராம்தேவைப் பற்றிய தனது முடிவில் தான் உறுதியாக உள்ளதாகவும் அவர் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார். (த)*

## ஹொங்கொங் படகு விபத்தில் 11 பேர் சாவு

ஹொங்கொங்.மே 7
ஹொங்கொங் நாட்டு எல்லையிலுள்ள போ டோய் தீவின் கடற்பகுதியில் சீன சரக்கு கப்பல் ஒன்று மற்று மொரு கப்பலில் மோதியதில் 11 பேர் உயிரிழந்ததாகச் சர்வ தேசத் தகவல்கள் தெரிவிக் கின்றன.
மிகவும் சிக்கலான போக்கு வரத்து வலையமைப்பைக் கொண்ட இந்த கடற்பகுதியில் தினமும் அதிகளவான கப்பல் போக்குவரத்து இடம்பெற்று வரும் நிலையில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.
இந்த விபத்தில் கடலில் மூழ்கி யவர்களை மீட்கும்பணிகளில் சீனா மற்றும் ஹொங்கொங் நாடுகளின் 4 விமானங்களும் 20 க்கும் அதிகமான படகு களும் ஈடுபடுத்தப்பட்டுள்ள தாக அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். (த)

# மீண்டும் பரவுகிறது போலியோ

## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை



லண்டன்.மே 7
உலகின் பெரும்பாலான நாடு களில் முற்றாக ஒழிக்கப்பட்ட தாகக் கருதப்படும் போலியோ ( இளம்பிள்ளை வாதம்) நோய், மீண்டும் பரவுவதாகக் கூறும் உலக சுகாதார நிறு வனம் இதை ஒரு பொதுச் சுகாதார அவசர நிலை என்று அறிவித்திருக்கிறது.
பாகிஸ்தான் , சிரியா மற்றும் கமரூன் ஆகிய மூன்று நாடு களும் போலியோ தொற்று வைரஸை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டி ருப்பதாகக் கூறும் உலக சுகாதார நிறுவனம், இந்த நாடு களிலிருந்து வெளிநாடுகளுக் குச் செல்லும் பிரசைகள், போலியோ தடுப்பு மருந்தை உட்கொண்டிருக்கிறார்கள் என்ற அத்தாட்சிப் பத்திரத்து டன் பயணம் செய்யவேண் டும் என்றும் பரிந்துரைத் திருக்கிறது. உலக சுகாதார நிறுவனத்தின் வரலாற்றில் இது போன்ற ஒரு பிரகடனம் வெளியாவது இது இரண் டாவது முறைதான்.
முதலில் 2009ஆம் ஆண்டில் பன்றிக்காய்ச்சல் பரவியபோது இது போன்ற பிரகடனம் வெளி யிடப்பட்டது.
கடந்த ஆண்டு முழுவதுமே, 417 போலியோ நோய் தாக் கிய சம்பவங்கள் பதிவு செய்யப் பட்டதாகக் கூறும் இந்த அமைப்பு, இந்த ஆண்டு ஏப் ரல் 30ஆம் திகதி வரையி லுமே, 68 போலியோ தொற்று சம்பவங்கள் பதிவு செய்யப்பட் டிருப்பதாகக் கூறுகிறது. இதே காலகட்டத்தில் கடந்த ஆண்டு 24 சம்பவங்கள்தான் பதி வாகியிருந்தன.
பாகிஸ்தான், சிரியா மற்றும் கமரூனைத் தவிர, ஆப் கானிஸ்தான், ஈக்குவடோ ரியல் கினியா, எத்தியோப் பியா, ஈராக், இஸ்ரேல் ,சோமா லியா மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளும் புதிய வகை போலியோ வைரஸை பரப்பும் ஆபத்தைத் தோற்றுவிக்கும் நாடுகள் என்று உலக சுகா தார நிறுவனம் பட்டியலிட்டி ருக்கிறது.
பாகிஸ்தானில் போலியோ தடுப்பு மருந்து தரும் சுகா தாரப் பணியாளர்கள் மீது இஸ்லாமியவாதிகள் நடத்திய தாக்குதல்களால், இந்த வைரஸ் வெளிநாடுகளுக்கும் பரவும் நிலை ஏற்பட்டிருக்கிறது.
சுமார் 14 ஆண்டுகளாக போலியோ தொற்று ஏற்படா மல் இருந்த சிரியாவில் இப் போது பாகிஸ்தானிலிருந்து வைரஸ் பரவியதால் இந்தத் தொற்று மீண்டும் பீடித்திருக் கிறது.
இந்த சர்வதேச அவசர நிலையை சமாளிக்க ஒருங் கிணைக்கப்பட்ட ஒரு பதில் நடவடிக்கை அவசியம் என்று உலக சுகாதார நிறுவனத் தின் அறிக்கை ஒன்று கூறு கிறது. (த)

## தென்கொரிய கப்பல் விபத்து; மீட்புப் பணிச் சுழியோடி சாவு



சியோல்.மே 7
கடலில் மூழ்கிய தென் கொரிய கப்பலின் மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த சுழியோடி ஒருவர் உயிரிழந்துள்ளார்.
53 வயதான இவர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த நிலை யில் மயக்கமுற்றுள்ளதாகவும் பின்னர் நினைவிழந்து வைத் தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.
மீட்புப் பணிகளில் இடம்பெற்று வரும் நிலையில் அங்கு சம்பவித்த முதல் மரணம் இதுவென்பது குறிப்பிடத்தக் கது. (த)



தாய்லாந்தில் நேற்று முன்தினம் காலை ஏற்பட்ட சக்தி வாய்ந்த நில நடுக்கத்தால் பல்வேறு சேதங்கள் ஏற்பட்டன. அங்குள்ள பிரதான வீதி ஒன்று நில நடுக்கத்தால் திடீரென இரண்டாகப் பிளந்தது. (த)


## நைஜீரியப் பாடசாலை மாணவிகள் பணயம்

அபுஜா.மே 7
நைஜீரியாவின் இஸ்லாமிய கிளர்ச்சியாளர்கள் 200 க்கும் அதிகமான பாடசாலை மாண விகளைப் பணயமாகப் பிடித்து வைத்துள்ளதாக அமெரிக்கா அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.
அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்துமாறு அமெ ரிக்கா கோரியுள்ளது.
இந்தநிலையில் நைஜீரியா வில் ஏற்பட்டுள்ள முன்னேற் றங்கள் குறித்து ஆராய்வதற் காக ஜனாதிபதி பெரக் ஒபாமா வின் குழுவொன்று நியமிக் கப்பட்டுள்ளதாகவும், வெள்ளை மாளிகை பேச்சாளர் ஜே கானே தெரிவித்தார்

## அமெரிக்காவில் விமான விபத்து அதிர்ஷ்டவசமாக தப்பிய விமானி



கொலராடோ.மே 7
அமெரிக்காவில் சிறிய ரக விமானம் ஒன்று கொலராடோ வில் உள்ள வீடு ஒன்றின் மீது மோதியது. ஆனால் இந்த விபத்தில் அதிர்ஷ்டவசமாக விமானி உட்பட அனைவரும் காயமின்றித் தப்பியுள்ளனர்.
பைப்பர் பிஏ -25 பாவ்னி என்ற சிறிய ரக விமானம் ஒன்று கொலராடோ பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது எதிர் பாராத விதமாக மோதியது. விமானம் மோதி கீழே விழு வதற்கு முன் பரசூட் மூலம் விமானி உடனடியாக பத்திர மாகத் தரையிறங்கினார்.
விமானம் மோதிய போது வீட்டிலும் யாரும் இல்லை என்று வடக்கு மெட்ரோ தீ அணைப்பு வீரர்கள் தெரிவித் தனர். எனினும் விமானிக்குச் சிறிய காயம் ஏற்பட்டுள்ளதால் மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (த)



## தலைகீழாக அமைந்துள்ள வீடு பார்க்க அலை மோதும் மக்கள்

பீஜிங்,மே 7
தலைகீழாக அமைக்கப்பட்டிருக்கும் விசித்திர வீட்டின் மீது சீன மக்களின் கவ்னம் திரும்பி யுள்ளது. சீனாவின் சங்காய் நகரில் அமைந் துள்ள இவ்வீடானது தலைகீழாக (கூரை கீழாகவும், அத்திபாரம் மேலே உள்ள வாறும்) அமைக்கப்பட்டுள்ளது.
இவ்வீட்டின் விசேடம் என்னவெனின் வீட்டின் அறைகள், பொருள்கள் அனைத்துமே தலைகீழாகவே அமைக்கப்பட்டுள்ளன.
தளபாடங்கள், அழகு பொருள்கள், பொம் மைகள் என அனைத்துமே தலைகீழாகவே காட்சியளிக்கின்றன. இவ்வீட்டை பார்வை யிட தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் வந்து செல்வதாக சீனச் செய்திகள் தெரி விக்கின்றன. (த)

## சீன ரயில் நிலையத்தில் வாள் வெட்டுத் தாக்குதல்

பீஜிங்.மே 7
சீனாவின் குவான்ஸ்கோ நகரிலுள்ள ரயில் நிலைய மொன்றில் இன்று காலை திடீரென புகுந்த கும்பல் ஒன்று வாள் வெட்டு தாக்குதல் நடத் தியதில் 6 பேர் படுகாய மடைந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.
இந்தத் தாக்குதலுக்கு இலக் கான மூன்று பெண்கள் உட்பட 6 பேர் மிகவும் ஆபத் தான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர். இந்தத் தாக்கு தலை மேற்கொண்டவர்களில் ஒருவரைச் சுட்டுப் பிடித்துள்ள தாகப் பொலிஸார் தெரிவித் துள்ளனர். முன்னதாக கடந்த மார்ச் மாதம் குங்மிங் ரயில் நிலையத்தில் கும்பல் ஒன்று மேற்கொண்ட வாள் தாக்குத லில் 29 பேர் சம்பவ இடத்தில் பலியாகியமை குறிப்பிடத் தக்கது. (த)

# முதல் முறையாக 3D தொழில்நுட்பத்தில் யாழ் திரையரங்கில்




**MAJESTIC CINEMA - CARGILLS SQUARE**
(Opposite Jaffna Teaching Hospital)
**Platinum 3D**
**9.30am, 12.00noon, 2.30pm, 5.00pm 7.30pm**
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com 021-2227712


## பேசாலையில் கடலுக்கு ஆசீர்வாதம்



தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மன்னார் பேசாலை பகுதி மீனவ சமூகம் கடற்கரைப் பகுதியில் பேசாலை பங்குத் தந்தை அருட்பணி எஸ்.வி. அவுதப்பா அடிகளார் தலைமையில் அருட்பணி ஜெயசீலன் அடிகளாருடன் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்து திருச்சபையின் தொழிலாளர்களின் பாதுகாவலராம் புனித சூசையப்பர் திருச்சொரூப ஆசீர் வழங்கப்பட்டது. அருட்பணி எஸ்.வி. அவுதப்பா அடிகளாரால் கடலை திருச்சொரூபம் கொண்டு ஆசீர்வதிக்கப்படுவதையும் கடல் பகுதியில் நடந்த வழிபாட்டில் கலந்துகொண்ட பக்தர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (ஓ)


**தவறவிடப்பட்டது**
நடராசா நவராஜ் ஜக்ஷன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (851770275V) சாரதி அனுமதிப் பத்திரம் என்பன ஓமந்தை-வவுனியா இடையே யாழ்ப்பாணம் தனியார் பேருந்தில் (12.04.2014) தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் அடையாள அட்டையிலுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அல்லது கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (43288)(5.6)
தொடர்பு: 076 767 6772 / 076 778 8949

**SPOKEN ENGLISH**
புதிய பிரிவு ஆரம்பம்
**10.05.2014 காலை 7.30**
இப்பாடநெறியானது சனி/ஞாயிறு தினங்களில் காலை 7.30 - 9.30 வரை நடைபெறும்
20% கட்டணக்கழிவினைப் பெற்றிடுங்கள்
**A1/B1/B2/IELTS**
**E-CITY COLLEGE OF ENGLISH**
372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(வீரகாளி அம்மன் கோவில் அருகில்)
**0212217106/0773400418**


## கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம்

யாழ். மாவட்ட கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மேலதிக அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (க)

## மத்தியஸ்த சபை இனி சனிக்கிழமைகளில்

யாழ். நகரில் வைத்தீஸ்வராக் கல்லூரியில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்று வந்த யாழ்ப்பாண மத்தியஸ்தர் சபை எதிர்வரும் 10ஆம் திகதி முதல் கிறிஸ்தவ மக்களின் நன்மை கருதி பிரதி சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் 12.30 மணிவரை நடைபெறும் என்று சபையின் தவிசாளர் அறிவித்துள்ளார். (ஓ)


**உணவக உரிமையாளர்களுக்கு விசேட விலைக் கழிவு**
கிறனைட் மேசை 2½×4 அடி கல் ரூபாய் 13000/=, சில்வர் காலுடன் மேசையின் விலை 28000/=
கட்டட ஒப்பந்தக்காரர்களுக்கு விசேட விலைக் கழிவு
கிறனைட் ரைல்ஸ் 1'×2' துண்டு 900/= ரூபா (சதுர அடி 450/=)
தொடர்பு : 077 340 5396
டெலிவரி கட்டணம் மேலதிகம் (43289) (7.6)

**Key Board விற்பனைக்கு**
நல்ல நிலையிலுள்ள Korg Triton Work Statian Sampler Key Board
விலை -1,05,000
P.S.R YAMAHA 700 - 95,000
தொடர்பு: 077 698 0573 (47677) (7.6)

**விற்பனைக்கு**
TATA, LPT-1109 மொடல், NPLI-xxxx இலக்கமுடைய லொறி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 377 9242, 077 670 3234 (43287) (7.6)

**மலிவு**
கட்டடப்பொருள்கள் ஆன்லைன் ஸ்ரோரில்.
077 278 8899 (47540) (6.4)
www.ammatraders.com

**வாகனம் விற்பனைக்கு**
நல்ல நிலையிலுள்ள England Model JCB மலிவாக விற்பனைக்குண்டு.
விலை பேசித்தீர்மானித்துக் கொள்ளலாம்.
தொடர்பு: 077 538 4992, 077 411 5605 (47676) (7.6)

**வீடு விற்பனை**
மானிப்பாய், சங்குவேலி தெற்கில் மூன்று பரப்பு 02.92 குழி சகல வசதிகளுடன் மூன்று அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 312 3772 (47503)(6.4)

**மணமகள் தேவை**
- 07.07.1982இல் பிறந்த 5'-8" உயரம், உத்தராடம் முதலாம் பாதம், கிரக பாவம் 41¼, பிரான்ஸ் PR உள்ள (இந்தியா வரமுடியும்) க.பொ.த. உயர்தரத்தில் சித்தியுடைய மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.
- 10.10.1983இல் பிறந்த 5'-10" உயரம், அனுசம் முதலாம் பாதம், கிரக பாவம் 36¼, பிரான்ஸ் PR உள்ள (இந்தியா வரமுடியும்) க.பொ.த. உயர் தரத்தில் சித்தியும், முன்பு கொழும்பில் தனியார் நிறுவனத்தில் Hard Ware Technician ஆக வேலை செய்தவருக்கு பொருத்தமான மணமகள் தேவை.

தொடர்பு: 077 905 9523 (43635) (7.6)

**மணிவிழா நாயகனைப் பாராட்டுகின்றோம்**



உயர்திரு
**செல்லையா ஆனந்தீஸ்வரன்**
(உப அதிபர், SLTS -I, யா/இளவாலை மெய்கண்டான் ம.வி.
(2004.01.01 - 2014.05.06)

சேவை விவரம்

| | |
|---|---|
| 1. யா/சில்லாலை றோ.க.த.க.பாடசாலை | 1976.06.23 - |
| 2. பலாலி ஆசிரியர் கலாசாலை | 1980.01.21 |
| 3 இ/பலாங்கொடை த.ம.வி | 1983.01.01 |
| 4. கிளி/கிளிநொச்சி ம.ம.வி | 1987. 05.25 |
| 5. யா/கீரிமலை நகுலேஸ்வரா வி. | 1990.06.25 |
| 6. யா/மந்துவில் அ.த.க.பாடசாலை | 1994 01.01 |
| 7. யா/குடமியன் அ.த.க.பாடசாலை | 1995.02.01 |
| 8. யா/நாவற்குழி ம.வி. | 1999. 05.03 |
| 9. யா/மயிலணி சைவ ம.வி. | 1999.06.29 |
| 10. யா/மாதகல் சென்ஜோசப் ம.வி. | 2000.01.01 |
| 11. யா/இளவாலை மெய்கண்டான் ம.வி. | 2004.01.01 |

ஓய்வுபெறுகின்ற உப அதிபர் அவர்கள் நீண்ட ஆயுளும் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்
யா/இளவாலை மெய்கண்டான் ம.வி

**குறைந்த விலையில் உன்னதமான பயணம்**



உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச்சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். *Conditions apply
**ஹேலீஸ் ட்ரவல்ஸ் & டூர்ஸ்**
உங்கள் உல்லாச பயணத்திற்கு ஒரே தெரிவு!
(C/13790)
யாழ்ப்பாணக்கிளை: 275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1878 மனோ : 077 773 0818
Skyline

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




**கந்தையா கமலநாதன் (B.Com)**
யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரும் எமது சங்கத்தின் முன்னாள் கூட்டுறவு உத்தியோகத்தருமான கந்தையா கமலநாதன் அவர்கள் யாழ். பல்கலைக் கழகத்தில் 27.04.2014 இல் நடைபெற்ற வெளிவாரிபட்டமளிப்பு விழாவில்
**வணிகமாணி**
பட்டம் பெற்றதை வாழ்த்துவதுடன், மேன் மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.




ஊழியர் நலன்புரி சங்கம்
அச்சுவேலி பனை தென்னை வ.கூ.சங்கம்,
அச்சுவேலி

## மழையால் பாதிக்கப்பட்ட எமக்கு எவ்வித உதவியுமில்லை

### கன்னாட்டி மக்கள் கவலை

வவுனியா, மே 7

அண்மையில் பெய்த மழையினால் வவுனியா மாவட்ட வெண்கலச் செட்டிகுள பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 57 குடும்பங்கள் உதவிகள் எதுவும் கிடைக்காததால் பெரிதும் பாதிக்கப்பட்டன.

வவுனியா மாவட்டத்தின் வெண்கலச் செட்டிகுளத்தில் மீள்குடியேற்றக் கிராமமான கன்னாட்டியில் 108 குடும்பங்களைச் சேர்ந்த 337 பேர் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தற்காலிக கொட்டகைகளில் மலசலகூட, மின்சார வசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர். அதனால் அவர்கள் மழை காலங்களில் பெரும் துயரங்களை அனுபவிக்க நேர்ந்துள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் வீசிய சுழற்காற்று, அடை மழையால் இவர்களில் 57 குடும்பங்கள் பொது நோக்கு மண்டபத்தில் வாழ்வைக் கழித்து வருகின்றனர்.

இந்திய வீட்டுத்திட்டம் உட்பட பல்வேறு வீட்டுத் திட்டங்களிலும் கன்னாட்டி மக்கள் புறக்கணிப்பு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அவர்களை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். அவர்கள் தமக்கு எதுவித உதவிகளும் கிடைக்கவில்லை என்று சிவசக்தி ஆனந்தனிடம் முறையீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-402)

## மாற்றுத்திறனாளி பெண்ணை வன்புணர்வுக்கு உட்படுத்தியவர் கைது

வவுனியா, மே 7

மாற்றுத்திறனாளிப்பெண்ணை வாகனச் சாரதியொருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தியமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் அவரை வவுனியா பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியுள்ளனர்.

மாற்றுத்திறனாளிகள் நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனத்தின் சாரதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கிராமங்களிலிருந்து மாற்றுத்திறனாளிகளை வாகனமொன்றில் ஏற்றி மாற்றுத்திறனாளிகள் நிகழ்வொன்றுக்காக அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

இந்த நிகழ்வு முடிந்த பின்னர் அவர்களது வீடுகளுக்கு குறித்த வாகனத்தில் ஏற்றிச் சென்று இறக்கி விடப்பட்ட சமயம் இறுதியாக வாகனத்தில் இந்த மாற்றுத்திறனாளிப் பெண் ஒருவரை அவரின் வீட்டுக்கு கொண்டு சென்றவேளை அவர் வாகனத்தில் வைத்து சாரதியால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தையடுத்து பிரதேசவாசிகள் ஒன்றுதிரண்டு சந்தேக நபரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்த நபரை வவுனியா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதையடுத்து அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-402)

## தன்னிச்சையாகச் செயற்படும் மன்னார் தனியார் பஸ் சங்கம்

### நேர அட்டவணையில் சிக்கல் என்கிறார் கெங்காதரன்

யாழ்ப்பாணம், மே 7

மன்னார் மாவட்ட தனியார் பஸ் சங்கம் தன்னிச்சையாக செயற்படுவதால் யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாருக்கான பஸ் சேவையில் ஈடுபடும் பஸ் உரிமையாளர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்று வட இலங்கை தனியார் பஸ் சங்கத்தின் உரிமையாளர் சங்கத்தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பஸ் சங்கத்தால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மூன்று மாவட்டங்களில் இருந்தும் சங்குப்பிட்டி ஊடாக சேவையில் ஈடுபடும் பஸ் உரிமையாளர்களுடன் கலந்துரையாடி நேர அட்டவணை தயாரிக்கப்பட்டது.

> “யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாருக்கான சேவையில் ஈடுபடும் பஸ் உரிமையாளர்கள் அந்த நேர அட்டவணையை ஏற்றுக்கொள்ளவில்லை.

எனினும் மன்னார் மாவட்ட தனியார் பஸ் சங்கம் தன்னிச்சையாக வேறு நேர அட்டவணையைத் தயாரித்து அதனை நடைமுறைப்படுத்துமாறு கோரியுள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாருக்கான சேவையில் ஈடுபடும் பஸ் உரிமையாளர்கள் அந்த நேர அட்டவணையை ஏற்றுக்கொள்ளவில்லை.

தொடர்ந்து மன்னார் மாவட்ட பஸ் சங்கத்தினர் தன்னிச்சையான நேர அட்டவணையில் சேவையில் ஈடுபடுவதைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாருக்கான சேவையில் ஈடுபடும் பஸ் உரிமையாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

அதனையடுத்து மன்னார் மாவட்ட அரச அதிபருடன் யாழ். மாவட்ட அரச அதிபர் கலந்துரையாடி வட இலங்கை தனியார் பஸ் சங்கத்தின் உரிமையாளர் சங்கத்தால் தயாரிக்கப்பட்ட நேர அட்டவணைக்கமைய சேவையில் ஈடுபடுமாறு தெரிவிக்கப்பட்டது.

எனினும் மன்னார் பஸ் சங்கத்தினர் தொடர்ந்தும் தன்னிச்சையாக யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் பஸ்களுக்கு போட்டியாக மன்னாரில் இருந்து முழங்காவில் வரை பஸ் சேவைகளை நடத்தி வருகின்றனர்.

மன்னார் மாவட்ட பஸ் சங்கத்தினர் தன்னிச்சையாக சேவையில் ஈடுபடுவதால் சீரான பஸ் சேவையை மக்களுக்கு வழங்க முடியாதுள்ளது-என்றார். (ச-14)

## வறட்சியை அடுத்து வன்னியில் மழை

கிளிநொச்சி, மே 7

வன்னியில் பல்வேறு பகுதிகளிலும் நீண்ட கால வறட்சியின் பின்னர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் மழை பெய்து வருகிறது.

கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து வன்னியில் பல்வேறு பகுதிகளிலும் கடும் வறட்சி நிலவி வந்துள்ளது. அதனால் குளங்களின் நீர் மட்டம் மிக வேகமாக குறைவடைந்து சில குளங்கள் நீர் வற்றி வறண்டு காணப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரியாலை, நாகபடுவான் குளம் நீர் வற்றி அதன் கீழ் மேற்கொள்ளப்பட்டு வந்த காலபோகச் செய்கை முற்றாக அழிவடைந்துள்ளது. இதனால் 340 விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இந்தக் குளத்தின் நன்னீர் மீன்பிடியை நம்பி வாழும் 85 வரையான குடும்பங்களும் பாதிக்கப்பட்டன.

முல்லைத்தீவு, மல்லாவிக் குளம், பனங்காமம் குளம் போன்ற குளங்களின் நீர் மட்டமும் குறைவடைந்து நீர் வற்றிக் காணப்பட்டன.

வன்னியில் பல்வேறு இடங்களிலும் குடிதண்ணீருக்கான தட்டுப்பாடும் நிலவி வந்தது.

குடிதண்ணீர் பெறுவதில் பல குடும்பங்கள் சிரமங்களை எதிர்கொண்டு வந்தன.

இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை முதல் வன்னியில் பல பகுதிகளிலும் ஓரளவு கடும் மழை பெய்து வருவது குறிப்பிடத்தக்கது. (ச-55)

## பட்டதாரிகளுக்கான பரீசீலனை இரத்து

### மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் அறிவிப்பு

மன்னார், மே 7

மன்னாரில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டிருந்த பட்டதாரிகளின் மேன்முறையீட்டு ஆவண பரிசீலனை ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமேல் தெரிவித்தார்.

அரச சேவையில் பட்டதாரிகளை உள்வாங்கும் பொருட்டு 30.03.2012 இற்கு முன் பட்டம் பெற்றவர்களின் ஆவணங்களைப் பரிசீலனை செய்யும் நடவடிக்கை நேற்று இடம்பெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த ஆவண பரிசீலனை ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலரால் தெரிவிக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமையவே குறித்த ஆவண பரிசீலனை ரத்து செய்யப்பட்டுள்ளது.

அது தொடர்பிலான விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-56)

## வட்டக்கச்சி பொதுச் சந்தைக்கு மலசலகூடங்கள் கையளிப்பு



கையளிக்கப்பட்ட மலசலகூடங்கள்

கிளிநொச்சி, வட்டக்கச்சி பொதுச் சந்தையில் உலக தரிசனம் நிறுவனத்தினால் இரு மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு சந்தை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலப் போரால் சேதமடைந்த வட்டக்கச்சி, பொது நூலகம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டபோதும், அங்கு கழிப்பறை வசதிகள் எவையும் ஏற்படுத்தப்படாத நிலை காணப்பட்டது.

இதனையடுத்து அரச சார்பற்ற ... உலக தரிசனம் நிறுவனத்தால் இரு மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு சந்தை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ச-55)

## பாடசாலையில் திருட்டு



கோப்புப்படம்

வவுனியா, மே 7

வவுனியா, செட்டிகுளம் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் கடந்த ஞாயிறு இரவு திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

கற்காரங்குளம் இளங்கோ வித்தியாலய பாடசாலையின் அலுவலக கதவுகள் உடைக்கப்பட்டு உலக உணவுத் திட்டப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன. பாடசாலையில் பொருத்தப்பட்டிருந்த தண்ணீர் இறைக்கும் இயந்திரமும் திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து சம்பவம் தொடர்பாக அவர்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-402)

## மாட்டிறைச்சி விற்பனைக்கு மன்னாரில் தொடர்ந்து தடை

### மிருக வைத்திய அதிகாரியின் அசமந்தப் போக்கே காரணம் என்கின்றனர் விற்பனையாளர்கள்

மன்னார், மே 7

நாட்டின் பல மாவட்டங்களில் மாட்டு இறைச்சி விற்பனை செய்வதற்கான அனுமதி தற்போது மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் மன்னார் மாவட்டத்தில் மாட்டு இறைச்சி விற்பனை செய்வதற்கான அனுமதி தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றது. அதனால் தாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக மாட்டு இறைச்சி விற்பனை நிலைய உரிமையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

மன்னார் மாவட்டத்தில் நகர சபை மற்றும் பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட மாட்டு இறைச்சி விற்பனை நிலைய உரிமையாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் கேள்விப்பத்திர கோரல்களுக்கு அமைவாக பல லட்சம் ரூபா பணத்தைச் செலுத்தி மாட்டிறைச்சி விற்பனை நிலையத்தை நடத்தி வருகின்றனர். எனினும் இந்தத் தடை குறித்து நகர சபையோ அல்லது பிரதேச சபைகளோ எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்று மாட்டிறைச்சிவிற்பனை நிலைய உரிமையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

பல மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் மாட்டு இறைச்சி விற்பனைக்கு தடை செய்யப்பட்டிருந்த நிலையில், தற்போது வவுனியா உட்பட ஏனைய மாவட்டங்களில் மாட்டிறைச்சி விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மன்னாரில் மாட்டிறைச்சியை விற்பனை செய்ய இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என்று அவர்கள் கூறினர்.

இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் தொடர்ந்தும் மௌனம் காத்து வருகின்றனர் என்று அவர்கள்விசனம்தெரிவித்தனர்.

இதேவேளை மாடுகளுக்கு ஒரு வகை நோய் ஏற்பட்டுள்ளதன் காரணத்தினால் நாட்டில் பல மாவட்டங்களில் மாட்டு இறைச்சி விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்று மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

தற்போது பல மாவட்டங்களில் தடை நீக்கப்பட்டு மாட்டு இறைச்சி விற்பனை செய்யப்பட்டு வருவதாக நான் அறிகின்றேன். ஆனால் மன்னாரில் அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

இந்த அனுமதி வழங்கலுக்கும் மன்னார் நகரசபைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இதற்கு உரிய மிருக வைத்திய அதிகாரியே பொறுப்புக்கூற வேண்டும் என்று மேலும் அவர் தெரிவித்ததுடன் இது தொடர்பாக நான் குறித்த வைத்திய அதிகாரியுடன் பல தடவைகள் தொடர்பு கொண்ட போதும் அவர் இதற்கான உரியபதிலை தெரிவிப்பதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-56)

# சம்பூரின் பெயரை அழிக்கத் திட்டம்

## ஆங்கில ஊடகம் தகவல்

**திருகோணமலை,மூதூர் கிழக்கில் உள்ள சம்பூரில் இருந்து பொது மக்கள் இடம் பெயர்ந்து 9 வருடங்கள் நிறை வடைந்துள்ளன.**

கொழும்பு,மே 7
சம்பூர் என்ற கிராமத்தின் பெயரை அரச ஆவணாங் களில் இருந்து அழிப்பதற்கு திட்ட மிடப்பட்டுள்ளது என்று ஆங் கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

திருகோணமலை - மூதூர் கிழக்கில் உள்ள சம்பூரில் இருந்து பொது மக்கள் இடம் பெயர்ந்து 9 வருடங்கள் நிறை வடைந்துள்ளன.

எனினும் அந்த மக்களை அவர்களது சொந்த இடங் களில் குடியேற்ற அனுமதிக் காமல் இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து தடையாக இருந்து வருகின்றனர்.

அங்கு 9,000 ஏக்கர் காணிப் பரப்பு இருந்த போதும், தற் போது புதிதாக வெளியிடப் பட்டுள்ள வர்த்தமானியின் படி, 1,458 ஏக்கர் காணிப் பரப்பே சம்பூர் பகுதிக்கென இருப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதில் அனல் மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ள 500 ஏக்கர் காணிப் பரப்பும் உள்ளடங்கும்.

ஏனைய பிரதேசங்கள் முழு வதையும் கடற்படையினர் தமது கட்டுப்பாட்டில் வைத்துள் ளனர்.

இந்த நிலையில் அரசு சம்பூர் என்ற கிராமம் ஒன்று இருந்த தற்கான சான்றுகள் எதுவும் இல்லை என நிறுவ அதற்கான சகல ஆவணங்களையும் அழித்துவிடத் திட்டமிட்டுள்ள தாக ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ச)

# ஆசிரியர் இடமாற்றம்; மாணவர்கள் பாதிப்பு

திருகோணமலை,மே 7
திருகோணமலை, அன்பு வழி புரம் கலைமகள் மகாவித்தியா லயத்தில் இடம்பெற்ற ஆசிரியர், இடமாற்றத்தால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பாடசாலைக்கான ஆங் கில ஆசிரியர் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவல கத்தால் இடமாற்றம் செய் யப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக ஆசிரியர் ஒருவரை நியமிக்காமல் அவர் இடமாற் றம் செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு ஆசிரியரைத் திடீ ரென இடமாற்றியதால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது என்று பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர். இந்த விடயம் குறித்து மாகாண கல்விப் பணிப்பாளர் கவனம் செலுத்த வேண்டும் என்று பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆசிரியர் பற்றாக்குறை தொடரு மானால் கிழக்கு மாகாணம் கல்வியில் தொடர்ச்சியாக பின் தங்க நேரிடும் என்று பெற் றோர் எச்சரிக்கை விடுத்துள்ள னர். (ச-40)


# ரூ. 5,000 அபராதம்

அம்பாறை, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகு தியில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய் யப்பட்டு அக்கரைப்பற்று நீதி வான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்ட நப ரொருவருக்கு 5,000 ரூபா அப ராதம் விதித்து நீதிவான் எச். எம்.எம்.பசீல் தீர்ப்பளித்துள்ளார்.

இந்த நபரை, அட்டாளைச் சேனை, தைக்கா நகர் பிர தேசத்தில் ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் கைது செய்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தொடரும் யானைத் தொல்லை

## கச்சைக்கொடி கிராமத்தில் அட்டகாசம்


யானைகள் துவம்சப்படுத்திய தென்னை மரம்

மட்டக்களப்பு,மே 7
மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச சபைக்கு உட்பட்ட கச்சைக்கொடி கிரா மத்திற்குள் புகுந்த காட்டுயானை களால் இரண்டு வீடுகள், தோட் டங்கள் என்பன சேதமாக்கப் பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை இக் கிராமத்துக்குள் உட்புகுந்த காட்டு யானைகள் வீடுகளை உடைத்து நாசமாக் கியதுடன் அவர்களது உடைமை களுக்கும் சேதம் விளைவித் திருக்கின்றன.

யானைகளின் தாக்குதல்க ளுக்கு உள்ளாகி இதுவரை காலமும் உயிரிழந்தவர்களுக் கும், உடைமைகள் சேதமாக்கப் பட்டவர்களுக்கும் உரிய நட்ட ஈடுகளை வழங்க வேண்டும் என்று கோரியபோது, அமைச் சர்கள் அதற்கான வாக்குறு திகளைப் பலமுறை வழங்கி யும் இதுவரைக்கும் எந்தவித மான நடவடிக்கைகளும் எடுக் கப்படவில்லை என்று மக்கள் தெரிவித்தனர். இதேவேளை நேற்று முன்தினம் யானை களின் தாக்குதல்களுக்கு உள் ளாகிய மக்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக் களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத் திரன் நேரில் சென்று பார்வை யிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

# கொக்கட்டிச்சோலையில் தனியார் பஸ் நிலையம்

## 4 மில்லியன் ரூபா செலவில்

மட்டக்களப்பு,மே 7
மட்டக்களப்பு , கொக்கட்டிச்சோலையில் புதிதாக பிரதான தனியார் பஸ்தரிப்பு நிலையம் நிர்மாணிக் கப்படவுள்ளது என்று கிழக்கு மாகாண வீதிப் போக்கு வரத்து அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் ருத்திரமூர்த்தி யுவநாதன் தெரிவித் தார். இதற்காக கிழக்கு மாகாண வீதிப் போக்குவரத்து அமைச்சு 4 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதுடன், பஸ் தரிப்பு நிலையம் அமைப் பதற்கான காணியைப் பட்டிப்பளைப் பிரதேச செயலகம் வழங்கியுள்ளது என்று அவர் கூறினார்.

கொக்கட்டிச்சோலையில் இதுவரை காலமும் தனியார் பஸ் தரிப்பு நிலையம் இல்லை. அதனையடுத்தே தனியார் பஸ் தரிப்பு நிலையம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதன் நிர்மாணப்பணிகள் மிக விரை வில் ஆரம்பிக்கப்படும் என்று அவர் குறிப் பிட்டார். மண்முனைப் பாலம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டதை அடுத்து மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலையூடாகத் தனியார் போக்கு வரத்துச் சேவைகள் இடம்பெற்று வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)


# 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



அன்னை மடியில் 29.03.1935 அம்பிகை அடியில் 07.04.2014

கடந்த 07.04.2014 திங்கட்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## திருமதி பொன்னம்மா தம்பிராசா

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (07.05.2014) புதன்கிழமை காலை 6.30 மணியளவில் நயினாதீவு கங்காதரணி புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவி இயற்கை எய்திய செய்தி கேட்டு நேரில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தொலைபேசி, தந்தி, இணையத்தளம் மூலம் அனுதாபச் செய்தி வழங்கியவர்களுக் கும், துண்டு பிரசுரங்கள், மலர்வளையம், அஞ்சலி திரைச்சீலை மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோர், இறுதி நிகழ்வில் பங்கு பற்றியவர்களுக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

5ஆம் வட்டாரம், நயினாதீவு.
T.P: 075 415 4633

குடும்பத்தினர்.

(47653)(10)

# மின்சார சபை ஊழியர்கள் கொழும்பில் இன்று போராட்டம்

## 11 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து

கொழும்பு,மே 7

இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் 11 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இன்று புதன்கிழமை கொழும்பிலுள்ள இலங்கை மின்சாரசபை தலைமையகத்துக்கு முன்பாக மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளனர் என்று ஏற்பாட்டுக்குழு உறுப்பினர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார்.

கொழும்பு, கொம்பனித்தெரு, நிப்பொன் ஹோட்டலில் நேற்று முன்தினம்திங்கட்கிழமைநடைபெற்ற இலங்கை மின்சார சபை இணைந்த தொழிற் சங்கமுன்னணியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர்மேற்கண்டவாறுகூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு எமது கோரிக்கைகளை நிறைவேற்றாதுவிட்டால் நாடு முழுவதும் தொடர் வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடைபெறும்.

2012 ஆம் ஆண்டு நூற்றுக்கு 45 வீத சம்பள உயர்வு கோரினோம். ஆனால், அரசு 25 வீத உயர்வை வழங்கியது. எஞ்சிய அதிகரிப்பை ஒரு வருடத்துக்குள் வழங்குவதாக உறுதி வழங்கியும் இதுவரையில் அது வழங்கப்படவில்லை. அதேபோன்று சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கும் எதுவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. 2015 ஆம் ஆண்டில் திருத்தப்படும் சம்பள உயர்வோடு சம்பள முரண்பாட்டுக்கும் தீர்வை ஏற்படுத்தி அது தொடர்பாக தொழிற்சங்கங்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் எமது சம்பள முரண்பாடுகள் நீக்கப்பட வேண்டும். தற்போது தனியார் நிறுவனமொன்றினூடாக 4,000 பேரின் சேவை மின்சார சபைக்கு பெற்றுக் கொள்ளப்படுகிறது.

பல வருடங்களாகச் சேவைசெய்யும் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும்.

மின்சார சபை இன்று அரசியல்வாதிகளின் கூடாரமாகி விட்டது. அனைத்திலும் அரசியல் தலையீடுகள் தலைதூக்கியுள்ளன. இடமாற்றங்களிலும் அரசியல் தலையீடுகள் தலைதூக்கியுள்ளன.

அரசு எமது பிரச்சினைகளைத் தீர்க்காது விட்டால், அனைத்துத் தொழிற் சங்கங்களும் இணைந்து கொழும்பில் மாபெரும் மாநாட்டை நடத்தி, நாடு தழுவிய ரீதியில் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. இன்று அந்த எல்லை தாண்டிவிட்டது- என்றார். (ச)

## குற்றச் செயல்கள் நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு,மே 7

இலங்கையில் கொலை உட்பட்ட குற்றச்செயல்களின் எண்ணிக்கை தீவிரமாக அதிகரித்து வருகிறது என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் 20 கொலைச்சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்தக் கொலைச் சம்பவங்கள் கிரியுல்ல, குருநாகல், மொனராகலை, எல்பிட்டிய, மகாஓயா, புத்தள, வெல்லம்பிட்டிய, கிளிநொச்சி, அத்துருகிரிய போன்ற இடங்களில் இடம்பெற்றுள்ளன.

குறித்த கொலைகளில் பெரும்பாலானவை குடும்பப் பிரச்சினைகள் காரணமாகவே இடம்பெற்றுள்ளன. (ச)

## பயங்கரவாதச் செயற்பாடுகளை தடுக்க ஆஸியிடம் உதவி கேட்கிறது இலங்கை

கொழும்பு,மே 7



ஆஸி. வெளிவிவகார அமைச்சரை சந்தித்தார் பீரிஸ்

இலங்கையில் பயங்கரவாதச் செயற்பாடுகளை உருவாக்கும் முயற்சிகளைத் தடுக்க முழுமையான உதவிகளை வழங்குமாறு ஆஸ்திரேலியாவிடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

பயங்கரவாதத்துக்கு நிதி சேகரித்தல், பயங்கரவாதத்தை மீண்டும் தலைதூக்க வைக்கும் விதத்தில் அதற்கு உயிரூட்டல் உட்பட பிராந்தியத்தில் இடம்பெறும் ஏனைய செயற்பாடுகளைத் தடுக்க முழுமையான உதவியை வழங்குமாறு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற இருதரப்பு பேச்சின்போதே, அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 . 08 . 1995

உதிர்வு 18 . 04 . 2013



செல்வி யதுஷிகா சூரியகுமார் (சபா)

எங்கள் கண்மணியே
கண்மணி போல் காத்த
எம்மை கண் கலங்க விட்டு
எங்கு சென்றாய்
ஆறவில்லை எம்மனமே
ஆண்டு ஒன்றாகியும்
உன் பிரிவால்
வாடுதம்மா உன் உறவுகள்



இன்று (07.05.2014) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

25/1, தாமரை வீதி,
ஆறுகால்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(47650)(12.6)

# இலங்கை இராணுவத் தளபதியின் கூற்றில் எந்த உண்மையுமில்லை

## அமெரிக்கா மறுப்பு

> அமெரிக்கா போன்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கைப் படையினருக்கு மிகச் சிறப்பான பராமரிப்பு வழங்கப்படுகிறது.

கொழும்பு,மே 7

போர்களில் பங்கேற்ற மற்றும் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற அமெரிக்கப் படையினரின் நலன்களில் அந்த நாட்டு அரசு உரிய அக்கறை செலுத்துவதில்லை என்று இலங்கை இராணுவத் தளபதி தெரிவித்திருந்த கருத்தை இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முற்று முழுதாக நிராகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பு, நாரஹேன்பிட்டியவிலுள்ள புதிய இராணுவ மருத்துவமனையைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றிய இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்னாயக்க, அமெரிக்கா போன்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கைப் படையினருக்கு அரசு மிகச் சிறப்பான பராமரிப்பை வழங்குவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்கா போருக்காகப் பெருமளவு நிதியைச் செலவிடுகின்றபோதிலும், போர்களில் பங்கேற்ற படையினரின் நிலை மற்றும் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற படையினரின் நிலையைப் பார்க்கும்போது கவலைக்கிடமாகவுள்ளது என்று தெரிவித்திருந்தார்.

தாம் அமெரிக்காவில் வைத்து அந்த நாட்டுப் படையினர் சிலரை அண்மையில் சந்தித்தபோது இலங்கை எவ்வாறு அதன் படையினரின் நலன்களைக் கவனிக்கின்றதென அவர்களுக்கு விளக்கிக்கூறியபோது, தமது அடுத்த பிறப்பில் இலங்கையில் பிறக்க வேண்டும் என்று அமெரிக்கப் படையினர் தெரிவித்திருந்தனர் எனவும் லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்னாயக்க சுட்டிக்காட்டியிருந்தார்.

இதுதொடர்பாக வினவியபோது அதற்குப் பதிலளித்த கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பேச்சாளரும் பொதுசனத் தொடர்பு அதிகாரியுமான கிறிஸ்டோபர் ரீல், இலங்கை இராணுவத்தளபதி தயா ரத்னாயக்கவின் கூற்றை முற்றாக மறுத்ததுடன், அமெரிக்கப் படையினர் உலகில் கடமையில் மிகச்சிறந்த படையினராகத் திகழ்வதுடன் தமது நாடு வழங்கக்கூடிய அதி உயர் கௌரவத்தையும் படைநலப் பராமரிப்பையும் பெறுவதாகக் குறிப்பிட்டார்.

இதனைவிடுத்து வேறுவிதமாகக் கருத்துகளைக் கூறுவது தவறானது. இராணுவத் தளபதியின் கருத்து அவர்களது சேவையை அவமதிப்புக்கு உட்படுத்துவதாகவும் அமைந்துள்ளது என்று அமெரிக்கத்தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார்.

படையினரின் நலன்களில் அதிக அக்கறை கொண்டு செயற்பட்டு வருவது மட்டுமன்றி, அவர்களது நலன்களைக் கவனிப்பதற்காக அமெரிக்க மத்திய அரசின் கீழ் அமைச்சரவை அந்தஸ்தைக் கொண்ட தனிச்சிறப்பான படைநல விவகாரத் திணைக்களம் இயங்கி வருகிறது என்றும் அவர் கூறினார்.

இந்தத் திணைக்களம் 1930 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், மூன்று லட்சத்துக்கும் அதிகமான்வர்கள் இதில் பணியாற்றி வருகின்றனர். கடந்தாண்டில் இந்தத் திணைக்களத்துக்காக மாத்திரம் 78 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமான நிதி ஒதுக்கப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

மறைந்தது நாற்பது ஆண்டுகள் நினைவுகள் என்றென்றும்

அமரர் கிருஷ்ணபிள்ளை கந்தசாமி

(முன்னாள் உடற்பயிற்சி ஆசிரியர், விளையாட்டு அதிகாரி, Man School, உடுவில். சமூகசேவையாளர்)



தோற்றம் 10.10.1926

மறைவு 01.05.1974

"இதயபவனம்"
உடுவில் சுன்னாகம்.

திருமதி வனஜா நிமலகுாா்
சூரிச் (சுவிஸ்)

(47569)(45.6.3)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உரிமையை மறுத்து சிவப்பு 'மே'யை மேலும் செந்நிறமாக்காதீர்கள்

1983 கறுப்பு ஜூலையைப் போன்றே 2009 சிவப்பு மே மாதமும் தமிழர்கள் வரலாற்றில் துயரத்தின் வடுவாகப் ஆழப் பதிந்து போய்விட்டது.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி உண்மையில் தமிழர்களில் பலர் கொல்லப்பட்டிருக்கவில்லை என்றா லும், போர் முடிந்த கடந்த 5 ஆண்டுகளில் அந்த நாளே இறுதிப் போரில் கொல்லப்பட்டவர்களுக்காக அஞ்சலிப்பதற்கான நாளாக நிலைபெற்றுவிட்டது. அதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் உண்டு.

மனித குலத்திற்கு எதிரான குற்றங்களைப் புரிந்தபடியே மனித உரிமைகளை நசுக்கிக் கொண்டு இலங்கை அரசு, தனது படைகளைப் பயன்படுத்தி நடத்திய கொடூரப் போர் முடிவடைந் தது என்று அறிவிக்கப்பட்ட திகதியை, பின் வந்த வருடங்களில் கொழும்பு வெற்றி விழாவாகக் கொண் டாடத் தொடங்கிமை முதற்காரணம். அதேநேரத்தில் போரில் கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்துவ தற்கோ, நினைவிடம் ஒன்றை அமைப்பதற்கோ அனுமதி வழங்க கொழும்பு அரசு மறுப்பது இரண்டாவது காரணம்.

மே 18 (அதனையே இங்கு சிவப்பு மே என்று குறிப்பிடுகி றோம்- வன்னியில் குருதியாறு ஓடிய மாதம் அது), தமிழர் களைப் பொறுத்தவரையில் அரச பயங்கரவாதத்தால் கொல் லப்பட்ட அப்பாவி மக்களுக்கான நினைவு நாள், போர்க் குற் றங்களால் பல நூறு மக்கள் மாண்டு மடிந்துபோனதைக் குறிக் கும் நாள், மனிதனை மனிதனே மதிக்காமல் அவனது உரி மைகளை மிருகத்தனமாக மீறியதன் அடையாள நாள், ஆயுத வன்முறைகள் முடிவுக்கு வந்த பின்னரும் அடக்கும் வெறி அடங்காத வெற்றிக் கொண்டாட்டங்களைக் குறிக்கும் நாள், இவை எல்லாவற்றுக்குமான அடையாள எதிர்ப்பைத் தமிழர் கள் பதிவு செய்யும் நாள்.

ஆனால், அந்த நாளைத் தமிழர்களால் ஒரு பொது நினை வஞ் சலி நிகழ்வாக இன்றுவரை பகிரங்கமாக நடத்த முடிய வில்லை. இராணுவத்தினரும் மற்றைய படையினரும் திட்ட மிட்டு அதைத் தடுக்கின்றனர். அவர்கள் அப்படிச் செயற்படு வதற்கான முழுமையான ஆசிர்வாதம் அரச அதி காரபீடத்தில் இருந்து வழங்கப்பட்டிருக்கிறது.

இலங்கை நாட்டில் எல்லோரும் சமமானவர்களே என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தொடர்ந்து மேடைகள் எங்கும் முழுங்கி வருகிறார். ஆனால், போரில் வெற்றி பெற்ற சிங்கள மக்கள் அதனை வெற்றிக்கொண்டாட்டமாக நடத் துவதற்கு இலங்கை நாட்டில் வழங்கப்பட்டுள்ள உரிமை, உயிரிழந்த தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்குத் தமிழ் மக்களுக்கு வழங்கப்படவில்லை. இதுதான் அனைத்து இன மக்களுக்குமான சமத்துவமா?

மே 18 நாளுக்கு இன்னும் 10 நாள்களுக்கு மேல் இருக்கை யிலேயே இப்போது யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தை இழுத்து மூடிவிட்டார்கள். இதற்கான காரணத்தை நிர்வா கம் பகிரங்கப்படுத்தவில்லை என்றாலும், சிவப்பு மே மாதத் தில் அங்கு அஞ்சலி நிகழ்வுகள் ஏதாவது நிகழ்ந்துவிடக் கூடும் என்ற அச்சமே இதற்கான காரணம் என்ற எதிர்வுகூறல் ஏற்றுக் கொள்ளக்கூடியதே.

போரில் உயிரிழந்த தமது உறவுகளுக்கு ஒரு நாளில் நினைவஞ்சலி செலுத்துவதற்குக்கூடவா இலங்கை என் கிற நாட்டில் தமிழர்களுக்கு உரிமையில்லை? அவர்களின் அந்த உரிமையைத் தடுத்து நிறுத்துவதற்காக 10 நாள் களுக்கு முன்னரே, கல்வி பாழானாலும் பரவாயில்லை என்று பல் கலைக்கழகத்தை இழுத்து மூடும் அளவிற்கா மே 18ஆம் நாள் அரசையும் படைகளையும் அச்சுறுத்துகிறது? ஒரு வேளை சாஸ்திர சம்பிரதாயங்களில் அதிக நம்பிக்கை கொண்ட ஆட்சியாளர்கள், இப்படி அஞ்சிப்புத் தினங்களை அனுமதித் தால் இறந்தவர்களின் ஆவிகள் வந்து தமக்குக் கெடுதல் செய்துவிடும் என்று அஞ்சுகிறார்களோ?

இந்த மாதத்தின் பூரணை தினத்தில்தான் சிங்கள பௌத்தர் களின் கடவுளான புத்தர் பிறந்தார், ஞானம் பெற்றார், இறந் தார் என்று நம்புகிறார்கள். அதற்கான கொண்டாட்டங்களும் பெருமெடுப்பில் மேற்கொள்ளப்படுகின்றன. ஒருபுறத்தில் சிறு பான்மையினரின் உரிமைகளை மறுத்துக் கொண்டும், நசுக்கிக் கொண்டும் மறுபுறத்தில், புத்தரின் அகிம்சைத் தத்து வங்களையும் ஒருசேர எப்படி இவர்களால் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாட முடிகிறது என்பது ஆச்சரியமளிக் கிறது.

வெசாக், புத்தரின் இறப்பு தினத்தையும்தான் குறிக்கிறது என்கிறார்கள். 2600 வருடங்களாக அதை நினைவுகூரும் போது, தமிழர்கள் மட்டும் தமது சொந்தங்களை நினைவு கூரும் உரிமையை இலங்கை அரசு ஏன் மறுக்க வேண்டும். அதைச் செய்து சிவப்பு மேயை மேலும் செந்நிறமாக்காமல் இருக்க வெசாக் தினத்தில் அரசும் படைகளும் திடசங்கற்பம் கொண்டால் நன்றாக இருக்கும்.

# கசினோ சூதாட்ட சட்டம் ஆட்டம் காணும் அரசு

சிங்கள மூலம் : மவ்பிம
தமிழில் : வீஎஸ்ரீ

இறுதிப் போரின் பின்னர் நாட்டில் தொழிற்றுறை மற்றும் வர்த்தகத் துறையில் தனித் தரப்பொன்று உருவாகியுள் ளது. இது தனது நலனுக்காக எதையும் செய்யத் தயாராயுள்ளதொரு தரப் பாகும். அந்தத் தரப்பின் முக்கிய குறிக் கோள் பணம் ஈட்டுதலே. பணத் துடனான அதிகாரமே அந்தத் தரப்பி னரின் இன்றைய முக்கிய தேவை. முதலாளித்துவ அடிப்படையிலான அரசியல் அதிகாரம் மற்றும் பண ஈட்டம் என்பவற்றுக்கிடையேயான தொடர்பு அவர்களால் தெளிவாகப் புரிந்துணரப் பட்டுள்ளது. அதன் காரணமாக அவர் கள் பண ஈட்டம் தொடர்பான தமது குறிக்கோளுக்கு அரசியல் அதிகா ரத்தை முடிந்தவரை பயன் படுத்திக் கொள்கின்றனர். அந்த வகை யில்தமது முக்கிய குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்காக, அந்தத் தரப்பினர் அரசியல் தரப்புகளுக்கான தமது ஆதரவு நிலைப்பாட்டை சந்தர்ப்பத் துக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்கின் றனர். தற்போது அந்தத் தரப்பினர் முதலாளிகள் என்ற விதத்தில் அடையா ளப்படுத்தப்படுகின்றனர்.



சிறிமாவோ பண்டாரநாயகாவின் கூட்டு முன்னணி அரசும், கூட்டு முன்னணியும் பிளவுபட முக்கிய காரணம், அரசுக்கு எதிரான ஜே.வி. பியினரின் கிளர்ச்சி வேளை முதல் சிறிமாவோவின் அரசியல் அதிகா ரத்தின் மீது இத்தகைய முதலாளிமார் தரப்பு செலுத்திய அழுத்தமேயாகும். அதேவேளை சிறிமாவோவின் சட்டப் படியான அதிகார அமைப்பினுள்ளும் அதற்கு வெளியிலும் மற்றொரு அதிகார மையம் உருவாகியிருந்தது. இதனால் சிறிமாவோவை அதிகாரத்தில் இருத் திய நாட்டு மக்களது எதிர்பார்ப்பை சிறிமாவோ நிறைவேற்றி வைக்க இய லாது போயிற்று. அதே சமயம் முன் னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர். டி.பண்டாரநாயகாவின் நிர்வாகத்தில் அவருக்கு நெருக்கமாக, உதவியாகச் செயற்பட்ட தரப்பினர் அரசியல் ரீதியில் அவரது கொள்கை, கோட்பாடுகளுக்கு அமையவே செயற்பட்டு வந்திருந் தனர். ஆனால் சிறிமாவோவின் நிர்வாகத்தில் அவ்விரு முன்னாள் பிரத மர்களது மகனான அனுரபண்டா ரநாயகா கூட ஒரு கால கட்டத்தில் தமது தாயாரான சிறிமாவோவின் நிர்வாகத் துக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத் தில் செயற்பட்டமையும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய முக்கியமானதொரு அம் சமாகும்.

1975 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18 ஆம் திகதி, அவ்வேளையில் சிறிமா வோவின் தலைமையிலான அரசில் அமைச்சரொருவராகச் செயற்பட்ட இடதுசாரித் தலைவர் கொல்வின் ஆர்.டி.சில்வர், நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டிய முக்கிய அம்சங்கள் யாவும் இன்று கசினோவை உள்ளடக் கிய பொருளாதார மூலோபாய அபி விருத்திச் சட்டமூலத்துக்கு எதிராக அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் சம் பிக்க ரணவக்க மற்றும் அதுரலியே ரத்ன தேரர் ஆகியோர் தெரிவிக்கும் கருத்துக்களை கேட்கும்போது நினை வுக்கு வருகிறது.

எதிர்காலத்தில் நாட்டின் சமூக, பொரு ளாதார நிலைமை இந்தக் கசினோ சூதாட்டத்தின் மூலம் நலிவடைய நேரப் போகிறது. எதிர்காலத்தில் இதன்மூலம் அரசியலில் மாற்றம் ஏற்படப் போகிறது என அதுரலியே ரத்னதேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அன்று 1975 ஆம் ஆண்டில் முத லாளிமார் அரசுக்குள் ஊடுருவி அரசை நாசப்படுத்தி வருவதாக கொல்வின் ஆர்.டி.சில்வா குற்றஞ்சாட்டியிருந்தார். இன்று கசினோ சூதாட்ட அனுமதி மூலம் அரசு வீழ்ச்சியுறப் போவதாக அதுரலியே ரத்ன தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தாம் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப் பினராக இருந்த வேளையில், இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கூட நாடாளுமன்றத்தில் ரத்ன தேரரின் கருத்தையொத்த கருத்தையே வெளிப் படுத்தியிருந்தார்.

கடந்த காலத்தில் தாய்லாந்தைச் சேர்ந்த ஜோசிம் போன்ற கசினோ வர்த்தகர் களை நாட்டுக்குள் அனுமதித்ததன் மூலம் சகல கல்வித் துறைகள், கலை, கலாசாரத் துறைகள், விவசாயத்துறை போன்றவற்றின் ஒரு பகுதி பொழுது போக்கு அம்சங்களாக மாறி யுள்ளன. கடந்த காலத்தில் ஜோசிம் என்ற தாய் லாந்து கசினோ வர்த்தகர், அரசின் உயர் மட்டத் தரப்பினருடன் தமக்கு நெருங்கிய தொடர்பிருப்பதாகக் காட்டிக் கொள்ள முற்பட்டார். ஜோசி முடன் தொடர்பு களைப் பேணி வந்த தரப்பினர் குறித்த பட்டியல் என்னிடம் உள்ளது. இத் தகைய செயற்பாடுகளை நாம் அனும தித்தால் நாட்டின் தேசிய உற்பத்தி வீழ்ச்சி காண நேரிடும். இதனால் நாட்டுக்கு நாசம் மிஞ்சுமே யொழிய அபிவிருத்தி ஏற்படப்போவதில்லை.

பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில் கசினோ சூதாட்டத்தை அனுமதிக்க அரசு மேற்கொண்ட முயற்சிகளை கடுமை யாகக் கண்டித்து அன்று மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் இவ் விதம் கடுமையாக விமர்சித்திருந்தார்.

நாட்டின் இன்றைய அரசியல் நிலையை நோக்கும் போது ஆஸ்திரேலியாவின் கசினோ வர்த்தகர் ஜேம்ஸ் பாக்கர் காரணமாக மஹிந்தவின் அரசுக்கும் மஹிந்த அன்று 1975 ஆம் ஆண்டில் கூறிய அதே நிலைதான் ஏற்பட்டுள்ளது. மஹிந்த அரசைப் பெரும் சிக்கலொன் றுக்குள் மாட்டிவிட்டே ஜேம்ஸ் பாக்கர் சென்றுள்ளார்.

கசினோவை உள்ளடக்கிய பொருளா தார மூலோபாய அபிவிருத்திச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப் புக்கு விடப்பட்ட தினத்தன்று அமைச் சர்கள் உட்பட ஆளும் தரப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்கள் 48 பேர் சபை நிகழ்வுகளில் கலந்து கொள்ளவில்லை. இவர்களில் சிலர் சபையில் பிரசன்ன மாயிருந்த போதிலும் சட்ட மூலம் மீதான வாக்கெடுப்பு இடம்பெற்ற வேளை வெளியேறிச் சென்றிருந்தனர். அமைச் சர் சம்பிக்க ரணவக்கவும் அதுரலியே ரத்ன தேரரும் சட்டமூலத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

அந்த வகையில் நோக்கும்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசில் பிளவொன்று உருவாகியிருப் பதை உணர முடிகிறது. அப்படியா னால், குறிப்பிட்ட சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வர வைப்பதன் மூலம் ஜேம்ஸ் பாக்கர் அரசுக்குள் பிரிவினையொன்றை ஏற் படுத்தி வைத்துள்ளாரா? என்ற கேள் விக்கு உறுதியான பதில் எதனையும் கூற முடியவில்லை.

ஜேம்ஸ் பாக்கர் வெறுமனே கசினோ சூதாட்ட வர்த்தகரல்லர். ஆஸ்திரேலிய அரசையே உருவாக்கிய, வழி நடத்திய அரசியல் சூதாட்டக்காரர் அவர். ஜேம்ஸ் பாக்கரின் தந்தையார் கேரி பாக்கர் ஆஸ்திரேலிய ஊடகத் துறையூடாக அந்த நாட்டின் அரசியலைத் தீர்மானித்த ஒருவராவார். ஜேம்ஸ் பாக்கரும் காலப் போக்கில் தமது தந்தையாரின் அரசியல் விளையாட்டுக்கள் குறித்து அனுபவம் பெற்றுக் கொண்டார். ஆஸ்திரேலிய அரசு கசினோ சூதாட்ட அனுமதியை வழங்கப் பின்னடித்ததொரு சந்தர்ப்பத்தில் அர சையே கவிழ்த்துவிடத் தம்மால் இயலு மென ஜேம்ஸ் பாக்கர் மிரட்டியதாகவும் கதையொன்று உண்டு. அது அவர்களது இயற்கையான சுபாவம். இலங்கை யிலும் கசினோ சூதாட்ட அனுமதியைப் பெற்றுக் கொள்ள மஹிந்த அரசுக்கு ஜேம்ஸ் பாக்கர் பல வழிகளிலும் வலை போட்டார். பொது நலவாய நாடுகளின் உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்த ஆஸ்திரேலிய அரசைச் சம்மதிக்க வைப்பிக்கவும், ஆஸ்திரேலியப் பிரதமரை மாநாட்டில் பங்குகொள்ள வைப்பிப்பதிலும் ஜேம்ஸ் பாக்கர் முன்னின்று செயற்பட்டார். பொதுநலவாய நாடுகளின் வர்த்தகர் மாநாட்டில் கலந்து கொண்ட பாக்கர் அச்சமின்றி இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு அந்த நாடுகளின் பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொண்டார்.

ஜேம்ஸ் பாக்கர், ஆஸ்திரேலிய பிரதமர் அபர்ட்டைப் பயன்படுத்தி பொதுநலவாய் நாடுகளின் அமைப்பினூடாக இலங்கை அரசுக்கும் சிக்கலை ஏற்படுத்த முயன்ற போதும் அந்த முயற்சி கைகூடவில்லை. இந்த நிலையில் ஜேம்ஸ் பாக்கர் அர சுக்குள் குழப்பத்தை ஏற்படுத்த முயலக் கூடுமா என்ற கேள்வியும் எழாமலில்லை. பொருளாதார மூலோபாய சட்டமூலம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட சமயம் அரச தரப்பின் 48 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்க ளிப்பில் கலந்து கொள்ளாததை நோக்கும் போது ஜேம்ஸ் பாக்கர், மஹிந்த அரசுக்கு சிக்கலை ஏற்படுத்த முயல்வார் என்றே கருதத் தோன்றுகிறது.

அப்படியானால் 1975 ஆம் ஆண்டின் நிகழ்வு போன்று கசினோவை அனு மதிக்கும் சட்டமூலத்தால் மஹிந்தவின் கூட்டணி ஆட்டம் காணுமா?

இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இந்த 48 நாடாளுமன்ற உறுப்பினர் களும் மஹிந்தவின் காலை வாரிவிட முயல்வார்களானால், தத்தமது மாவட் டங்களில் மஹிந்தவின் வெற்றிக்காக உழைப்பதைத் தவிர்த்துக்கொள்வார்க ளானால் மஹிந்தவின் வெற்றி கேள்விக் குறியாக மாற நேரிடலாம். அது குறித்து தற் போது எதனையும் உறுதியாகக் கூறிவிட இயலாது.

மொத்தத்தில் வெளியேறிச் செல்லும் பிசாசு, தண்டித் துவிட்டுச் செல்லுமாம் என் பதற்கொப்ப, ஜேம்ஸ் பாக்கரும் அர சின் இருப்பை ஆட்டம் காண வைத்து விட்டுச் சென்றுள்ளார் என்றே கருத முடியும்.

# கொல்களமாக மாறும் புனிதபூமி




சேரலாதன்

அச்சுவேலி கதிரிப்பாயில் இடம் பெற்ற அந்தச் சம்பவம் யாழ்ப் பாணத்தின் இன்றைய நிலையை தெளிவாக எடுத்துக்காட்டிவிட்டது. ஒரு காலத்தில் பண்பாடு, கலாசாரம், மனிதாபி மானம், இரக்க சிந்தனை ஆகியவற்றின் கலவையாகக் காணப்பட்ட இந்த மண் கொல்களமாக மாறி அச்சுறுத்தும் வகையில் தோற்றமளிக்கின்றது.

மனிதர்களிடையே பிணக்குகள், பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பானதுதான். ஆனால் இந்த அளவுக்கு மனிதனை மனிதனே வெட்டிச் சாய்க்கும் நிலைக்கு இந்த மண் மாறியுள்ளமை எதிர்காலத்தில் நிகழப் போகும் அவலங்களுக்கும், அனர்த்தங்களுக்கும் கட்டியம் கூறுவதாக உள்ளது.

முன்னைய அரசர் காலத்தில் போர்களின் போது முக்கியமான ஆயுதமாக வாள் விளங்கியது. எதிரிகளின் தலைகளையும், வேறு அங்கங்களையும் வெட்டிச் சாய்ப்பதில் இந்த வாள் போர் வீரர்களின் கரங்களில் முக்கிய பங்கை வகித்தன. 'வெட்டு ஒன்று, துண்டு இரண்டு' என்பதை நிறைவேற்றக் கூடிய வல்லமையும் இந்த வாள்களிடத்தில் காணப் பட்டன. காலப்போக்கில் நவீன போர் ஆயுதங்கள் அறிமுகமானபோது வாள் போன்ற ஆயுதங்கள் ஒய்வு பெற்று மூலைக் குள் முடங்கிக் கொண்டன.

வாள் கலாசாரம் முளைவிடத் தொடங்கியுள்ளது. சத்தம் கேட்காது காரியத்தை முடிப்பதற்கு இதுதான் பொருத்தமானது என்பதை எம்மவர்கள் நன்கு புரிந்து கொண்டதால் வாள்களின் மீதான மதிப்பு வெகுவாக உயர்ந்து விட்டது. இங்கு எந்த இடத்திலாவது தாக்குதல் சம்பவம் ஒன்று இடம் பெறுமாயின், அங்கு கதாநாயகன் பாத்திரத்தை வகிப்பது இந்த வாள்களாகவே காணப்படுகின்றன.



ஆனால் இன்று மீண்டும் வாள் கலாசாரம் முளைவிடத் தொடங்கியுள்ளது. சத்தம் கேட்காது காரியத்தை முடிப்பதற்கு இதுதான் பொருத்தமானது என்பதை எம்மவர்கள் நன்கு புரிந்து கொண்டதால், வாள்களின் மீதான மதிப்பு வெகுவாக உயர்ந்து விட்டது. இங்கு எந்த இடத்திலாவது தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெறுமாயின், அங்கு கதாநாயகன் பாத்திரத்தை வகிப்பது இந்த வாள்களாகவே காணப்படுகின்றன. ஆனால் இவற்றைத் தயாரித்து வழங்குபவர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படாமை சந்தேகங்களை எழுப்பி வருகின்றது.

ஓர் உயிரின் பெறுமதி மதிப்பிட முடியாதது. ஓர் உயிரை எவராலும் உருவாக்க முடியாது. அதனை அழிப்பதற்கும் எவருக்கும் உரிமை கிடையாது. விரோதமும், பகையும் இருந்தால் அதனைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். அல்லது வேறு எவரது உதவியுடன் சமரசம் செய்துகொள்ளலாம்.

இதனைவிடுத்து. தமது வஞ்சினத்தைத் தீர்த்துக்கொள்வதற்கு வாளைக் கையில் எடுப்பதென்பது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது. அதிலும் மிகப் பழைய பாரம்பரியத்தைக் கொண்ட யாழ்ப்பாண மண்ணில் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றமை ஒருபோதுமே ஏற்றுக்கொள்ள முடியாதது. கல்வியில் சிறந்த சமூகமொன்று இங்கு உள்ளதாகக் கூறி நாம் பெருமிதம் கொள்கின்றோம்.

நாகரிகமான மனிதர்களாக உலா வருகின்றோம். இங்கு இடம்பெற்ற போர் காரணமாக எல்லாமே சிதைவடைந்து விட்டதாகவும், அவற்றைச் சீர் செய்வதற்குப் பலகாலம் பிடிக்கும் என்றும் கூறி வருகின்றோம். ஆனால் போர்க் காலத்தில் இடம் பெறாத பல தீய செயல்கள் இங்கு பரவலாக இடம் பெற்று வருகின்றன. கட்டுப்படுத்துபவர்கள் இல்லாததால் கட்டுக்கடங்காத நிலையில அலைந்து திரியும் குழுக்களின் அட்டகாசம் அமைதியை விரும்பும் மக்களை அச்சுறுத்தி வருகின்றது. அருகருகே காவல் நிலையங்கள் அமைந்துள்ள நிலையில் இத்தகைய குழுக்கள் அச்சமின்றித் திரிகின்றமை வியப்பையும் அதேநேரத்தில் பயத்தையும் மக்களிடையே ஏற்படுத்தியுள்ளன.

ஆனால் இங்கு வாழும் அனைவரும் வன்முறைக் கலாசாரத்தினுள் மூழ்கிவிட்டதாகக் கூறிவிட முடியாது. ஒரு மிகச் சிறிய தொகையினரின் செயல்கள் ஒட்டு மொத்தமான சமுதாயத்துக்கும் களங்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இதனைக் களைவதற்கு இங்கு வாழ்பவர்கள் துணிவுடன் செயற்பட வேண்டிய தருணம் தற்போது ஏற்பட்டுள்ளது என்று கூற வேண்டும். இதனைவிடுத்து எனது குடும்பம், சுய கௌரவம் என்று கூறிக்கொண்டு நாம் வாளா விருப்போமானால் வெள்ளம் தலைக்கு மேல் சென்று விடுவதை எவராலும் தடுக்கவே முடியாது.

பெண்கள் மீதான தவறான பார்வை இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துச் செல்வதற்கு தகவல் தொழில்நுட்ப வசதிகளின் பெருக்கம் முக்கிய காரணமாக அமைந்துவிட்டது. சிறு வயதிலேயே இவற்றின் தாக்கங்களுக்கு உள்ளாகும் சிறுவர்கள், இளைஞர்களானதும் தறிகெட்டு அலையத் தொடங்குகின்றனர். இது எமது மண்ணில் மட்டுமே நடப்பதல்ல. உலகளாவிய ரீதியில் நடந்து வருகின்றது. ஆனால் வேறுபாடானதொரு கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்துள்ள எமது மண்ணில் இதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

இன்று எமது நாட்டிலுள்ள ஒரு சாரார் மிருகபலி தொடர்பாக அதிக அக்கறையுடன் குரல்கொடுத்து வருகின்றனர். இதுவொரு வரவேற்கத்தக்க விடயம்தான். ஆனால் மிருகங்களின் மீது காட்டும் அக்கறையில் ஒரு சிறிய அளவேனும் மனிதர்களிடத்தில் காண்பிக்கப்படாமை வேதனையைத் தருகின்றது. மனிதர்களுடன் ஒப்பிடும் போது மிருகங்கள் இரண்டாம் பட்சமானவைதான். மனிதர்களை அழித்துக் கொண்டு மிருகங்களின் மீது கருணை காட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே வன் செயல்களின் பின்னணியில் இருக்கும் ஆயுதங்களுக்கு முதலில் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். ஒருவன் கோபம் அடையும்போது அவனது கையில் ஆயுதமும் இருந்துவிட்டால் அதனால் ஏற்படும் விளைவுகள் பயங்கரமானதாகவே அமைந்துவிடும். எனவே கொடிய ஆயுதங்களின் பாவனைக்கு உடனடியாகவே முற்றுப்புள்ளி இட வேண்டும்.

எமது மண்ணைப் பொறுத்த வரையில் போரின்போது இங்கு வேலையற்று இருந்த இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்புக்கள் காணப் பட்டன. இதனால் வெறுமனே காலத்தைக் கழித்துக் கொண்டு சுற்றித் திரிபவர்களின் தொகை குறைவாகவே காணப்பட்டது. ஆனால் இன்றோ நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்புக்கள் அடைபட்டுள்ளதால் படித்துவிட்டு வேலையற்று இருக்கும் இளைஞர்களின் தொகை பல்கிப் பெருகியுள்ளது. வெறுமனே பொழுதைக் கழிக்கும் இவர்கள் மது அருந்துதல், பெண்கள் மீதான துஷ்பிரயோகம், அடிதடி, வன் செயல்கள் ஆகியவற்றில் ஈடுபட்டு வருகின்றனர். பெற்றோருக்கும் தாம் சார்ந்த சமுதாயத்துக்கும் இவர்கள் ஒருபோதுமே அஞ்சுவதில்லை.

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது எதிர்காலம் தொடர்பான அச்சம் மனதில் தோன்றுகின்றது. இங்கு தொடர்ந்து வாழ முடியுமா? முடியாது எனச் சிலர் நினைக்கும் அளவுக்கு நிலைமை கைமீறிச் சென்றுவிட்டது. இனிமேலும் இங்கு நடப்பதையெல்லாம் வெறுமனே பார்த்துக்கொண்டு வாளா விருக்கும் நிலை தொடருமேயானால் அந்த இறைவனால் கூட இந்த மண்ணைக் காப்பாற்ற முடியாது.

## பாதுகாப்பு ஊழியர் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

வாசகர் திருமுகம்

இன்று வட பகுதியில் அரச துறையிலும் சரி, தனியார் துறையிலும் சரி தனியார் மயப்பட்ட பாதுகாப்பு ஊழியர் சேவையே வழங்கப்படுகின்றது. இந்தச் சேவையை நடத்தும் நிறுவனங்கள், ஊழியர்களின் வேலை நேரம், அவர்கள் பெறும் சம்பளம் தொடர்பாகச் சிந்திப்பதில்லை. ஓர் ஊழியருக்கு அண்ணளவாக 12 மணித்தியாலம் கடமை புரியுமாறு பணிக்கப்படுகின்றது. ஒரு நாற்காலி மட்டுமே பெரும்பாலானவர்களுக்கு வழங்கப்படுகின்றது. அவர்களின் பாதுகாப்பு, உணவு, காலநிலை தொடர்பாக ஒருவருமே சிந்திப்பதில்லை. பாதுகாப்புச் சேவையை நடத்துபவர்கள் தாம் சேவை வழங்குபவர்களிடமிருந்து அதிக பணத்தைப் பெற்றுவிட்டு தம் கீழ் பணிபுரியும் ஊழியர்களுக்கு குறைந்த வேதனத்தையே வழங்குகின்றனர். சில இடங்களில் ஊழியர்களின் நலன்களும் கேள்விக்குரியதாகவுள்ளன. பல இடங்களில் வழமையான பணியுடன் வேறு சில வேலைகளையும் புரியுமாறு பணிக்கப்படுகின்றது. மேலதிகக் கொடுப்பனவும் மிகவும் குறைவாக வழங்கப்படுகின்றது. இதனால் பாதுகாப்பு ஊழியர் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டு அவர்களின் நலன்கள், பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். மேலும் இத்துறையை வடமாகாண சபையின் அமைச்சுக்குள் இணைக்கப்பட முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே பாதுகாப்பு ஊழி யரின் சேவைக்கும் வடமாகாண சபை உதவ முன்வர வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

*ச. சுதன்*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: குடும்பத்தில் நிலவி வந்த பிரச்சினைகள் மறையும். சிலருக்குத் திருமணம் மற்றும் சுபநிகழ்ச்சிகள் நடப்பதில் தாமதம் ஏற்படும். எவருக்கும் வாக்குக் கொடுக்க முன்னர் ஆலோசனை செய்து கொள்ளவும்.



**இடபம்**: உங்களது உடைமைகள் மீது கண்ணும், கருத்துமாக இருக்க வேண்டும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். அறிமுகம் இல்லாதவர்களின் வீட்டில் எதையும் உண்ணவோ அருந்தவோ வேண்டாம்.



**மிதுனம்**: நீங்கள் அமைதியாக இருந்தாலும் வீண் சண்டைகள் மற்றும் வீணான குழப்பங்கள் உங்களைத் தேடி வர வாய்ப்பு இருக்கிறது. தகுந்த வரன் கிடைத்து திருமணம் ஏற்பாடு இனிதே நடந்தேறும்.



**கடகம்**: கட்டடத்துறை சம்பந்தப்பட்ட துறைகளைச் சார்ந்தவர்களுக்கு இலாபம் கிடைக்கும். ஆனாலும் கவனத்துடன் நடந்து கொள்ளுங்கள். போட்டித் தேர்வுகள் சாதகமாக அமையும். சிலர் கல்வி பயில வெளியூர்களுக்குச் செல்ல வேண்டி வரும்.



**சிங்கம்**: நல்ல பெயர் வாங்குவீர்கள். மூலதனத்துக்குத் தேவையான பணம் வந்து குவியும். எதிரிகள் வகையில் சற்று கவனத்துடன் செயற்படவும். அதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவும்.



**கன்னி**: கலைத்துறைகளைச் சார்ந்த துறைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பர். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கப் பெறுவீர்கள். பிறமொழி பேசுபவர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.



**துலாம்**: வியாபாரிகள் மனைவி பெயரில் புதிய தொழில் தொடங்கலாம். பதிப்பகம், புத்தக நிலையம், பெயிண்ட் விற்பனையாளர்களுக்கு நல்ல இலாபம் கிடைக்கும்.



**விருச்சிகம்**: உங்கள் நிலைமை மாறும். நீங்கள் விரும்பியதைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். கல்லூரிகளில் பணிபுரிபவர்களும் நற்பயன்கள் கிடைக்கப் பெறுவார்கள். பதவி உயர்வு கிடைக்கும்.



**தனுசு**: அலைச்சல் இருக்கும். சிலர் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாட வேண்டிய நிலை ஏற்படலாம். உங்கள் குழந்தைகளால் சிற்சில பிரச்சினைகள் வரலாம். உத்தியோகத்தர்கள் தமது தொழிலில் வரும் கஷ்டங்களைத் தாங்கிக் கொள்ளுங்கள்.



**மகரம்**: கருத்துக்களைப் பரிமாறும் முன்னர் பொறுமை மற்றும் நிதானம் அவசியம் என்பதை உணருங்கள். திருமணமாகாமல் அதற்குண்டான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு திருமணம் இனிதே நடந்தேறும். புதிதாக வீடு. மனை வாங்க வேண்டும் என்று யோசனை செய்தவர்களின் எண்ணம் ஈடேறும்.



**கும்பம்**: மிகவும் விரும்பிய நண்பர்களை விட்டுப்பிரிய வேண்டிய நிலை வரலாம். உங்களது பொருள்களை மிகவும் கவனமாகப் பார்த்துக் கொள்ளவும். யோகா போன்ற பயிற்சிகளைச் செய்வது நன்மையைத் தரும்.



**மீனம்**: தாய்மாமனிடம் கருத்து மோதல்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருப்பதால் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகமான உழைப்பை வழங்க வேண்டி வரலாம். வேலையில் கவனத்துடன் இருப்பது நல்லது.

## நாளை

**சித்திரை-25 வியாழக்கிழமை | 08.05.2014**

திதி: நவமி மு.இ.11.09 வரை
நட்சத்திரம்: மகம்
பி.இ.01.50 வரை

சுபநேரம்:07.25-08.55 வரை
இராகுகாலம்: 01.25-02.55 வரை




## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...

## எல்லாம் இறைவன் மயம்

'பார்ப்பதற்கு உலகம் எப்படித் தென்படுகிறதோ, அப்படியே அதை எடுத்துக் கொள்ள வேண்டும்' என்று லௌகீக மக்கள் கூறுவதுபோல் செய்தால், தீமையைத் தவிர வேறு எதுவுமே உலகத்தில் இருக்காது' என்று சகல மதங்களும் கூறுகின்றன. "இந்த உலகத்துக்கு அப்பால், ஏதோ ஒன்று இருக்கிறது" என்று எல்லா மதங்களும் வற்புறுத்துகின்றன.
உலகில் காணப்படும் ஐம்புல வாழ்க்கையிலேயே எல்லாம் முடிந்துவிடுகிறது என்பது சரியல்ல. ஐம்புல வாழ்க்கை மிகவும் துச்சமானது. வாழ்க்கையில் இதற்கு மிகவும் குறைவான முக்கியத்துவமே கொடுக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் அப்பால், தீமையே இல்லாத எல்லையற்ற பரம்பொருள் இருக்கிறது. சிலர் அதைக் கடவுள் என்றும், சிலர் சிவன் என்றும்; திருமால் என்றும், சிலர் அம்பிகை என்றும் சிலர் அல்லா என்றும், சிலர் ஜெஹோவா என்றும்,சிலர் யோவான் என்றும் பல விதமாக வழங்குகிறார்கள். ஆனால் வேதாந்தியோ அதைப் பிரம்மம் என்று சொல்கிறான்.
மதங்களின் போதனைகளைப் பார்க்கும்போது முதலில் [illegible]குத் தோன்றும் கருத்து [illegible] வாழ்க்கைக்கு முடி[illegible]டுவதே மேல் என்பது[illegible] வாழ்க்கையின் தீமைகளுக்கு எப்படிப் பரிகாரம் காண்பது என்ற கேள்விக்கு, வாழ்க்கையையே முடித்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் பதிலாக இருக்கிறது.

# தோலின் மூலமும் கூட விந்து உருவாக்கலாம்



மலட்டுத்தன்மையுடன்வாழும் ஆண்களுக்கு மகிழ்ச்சியான நற்செய்தியாக, அவர்களது தோலைப் பயன்படுத்தியே, விந்தை உற்பத்தி செய்யலாம் என்று சமீபத்திய மருத்துவ ஆய்வறிக்கை கூறியுள்ளது.
2012 ஆம் ஆண்டில், அமெரிக்காவிலுள்ள PITTSBURGH பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆராய்ச்சியின் பயனாக இந்த மருத்துவ ஆய்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
இந்த ஆராய்ச்சியின்படி, மலட்டுத்தன்மையுடன்வாழும் ஆண்களின் தோலைப் பயன்படுத்தி, அவர்களுக்கு விந்து உற்பத்தி செய்து அதன்மூலம் அவர்களுக்கு குழந்தைப் பிறப்பை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.
பிரிட்டன் மருத்துவத்துறை நிபுணர்கள் இந்த ஆய்வை மிகவும் பாராட்டியுள்ளனர்.
தோலின் மூலம் உற்பத்தி செய்யப்படும் விந்தை சோதனைச்சாலையில் வளரச் செய்து அதை அவர்களது சந்ததிகளின் பிறப்புக்கு வழி செய்யும் வகையில் இது உள்ளது என்று கூறியுள்ளனர்.
அமெரிக்க PITTSBURGH பல்கலைக்கழக ஆராய்ச்சி, பரம்பரையாக மலட்டுத் தன்மையுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஆண் மக்களுக்கு கிடைக்கப் பெற்ற மிகப்பெரிய பரிசாகக் கருதலாம் என்று மருத்துவத்துறை நிபுணர்கள் கூறியுள்ளனர்.
இந்த ஆய்வின்பொழுது, சோதனை முறையில், மூன்று ஆண்களின் தோல் திசுக்களின் மரபணுக்கள், ஸ்டெம் செல்கள் பண்டிகளைக் கொண்டு சோதனைச் சாலையில் பதப்படுத்தப்பட்டு, அவற்றை விந்துக்களாக மாற்றி, அவர்களது விந்துக்கள் கருத்தரிக்கும் வகையில் செயற்றிறன்கொண்டதாக மாற்றப்படுகின்றன.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

[illegible]க்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு[illegible]ல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை [illegible]குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் [illegible] 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. [illegible]ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் [illegible]ண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்[illegible]குதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த [illegible]வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், [illegible]டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட[illegible]டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்[illegible]ம் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் [illegible]ண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் [illegible]ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சு[illegible]க்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என[illegible]தாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உ[illegible] அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | | | | 5 | 7 | | |
| | | 3 | | 9 | | | | 2 |
| 8 | 7 | | | | | 1 | | |
| 7 | 3 | | 8 | | 2 | | 4 | |
| 9 | 4 | | | 3 | | | 8 | 7 |
| | 2 | | 4 | | 9 | | 5 | 1 |
| | | 9 | | | | | 7 | 6 |
| 1 | | | | 5 | | 8 | | |
| | | 2 | 6 | | | | 1 | 3 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 9 | 3 | 5 | 6 | 1 | 4 | 8 |
| 4 | 8 | 5 | 1 | 9 | 7 | 2 | 6 | 3 |
| 3 | 6 | 1 | 2 | 4 | 8 | 9 | 7 | 5 |
| 9 | 1 | 2 | 4 | 8 | 3 | 6 | 5 | 7 |
| 6 | 5 | 4 | 9 | 7 | 2 | 3 | 8 | 1 |
| 8 | 7 | 3 | 6 | 1 | 5 | 4 | 2 | 9 |
| 1 | 9 | 8 | 5 | 6 | 4 | 7 | 3 | 2 |
| 5 | 3 | 6 | 7 | 2 | 1 | 8 | 9 | 4 |
| 2 | 4 | 7 | 8 | 3 | 9 | 5 | 1 | 6 |



# கவலையை மறக்க தூக்கம் அவசியம்





**தூங்கும் முன் ஒரு குளியல்**
இரவு தூங்கும் முன் சுடு தண்ணீர் அல்லது குளிர்ந்த நீரில் குளியுங்கள். இதனால் மனம் அமைதியடைந்து, உடலுக்கு மசாஜ் செய்தது போல் இருக்கும். இதன் மூலம் இரவில் நல்ல தூக்கத்தைப் பெறலாம்.

**சுத்தமான காற்றை சுவாசியுங்கள்**
எப்போதும் குளிரூட்டப்பட்ட அறையிலேயே இல்லாமல், சற்று காற்றோட்டமாக வெளியே சிறிது தூரம் நடந்து வாருங்கள். இதனால் நல்ல சுத்தமான காற்றைச் சுவாசிக்க முடிவதுடன், அந்தச் சுத்தமான காற்று மூளையை அமைதிப்படுத்தும்.

காலை ஆரம்பித்ததிலிருந்து இரவு படுக்கைக்குச் செல்லும் வரை மனிதன் ஏராளமான பிரச்சினைகளை அன்றைய நாளில் எதிர்கொள்கிறான். இந்த கவலைகளையெல்லாம் எம்மை மறக்கச் செய்வது இரவு நேரத் தூக்கம் மட்டுமே. ஆனால் இந்தத் தூக்கத்தைக் கூட பெரும்பாலோனோர் தொலைத்துவிட்டுத் தேடி அலைகின்றனர். இப்படித் தூக்கத்தை தொலைத்து அதைத் தேடுவதற்கு முக்கிய காரணம், மன அழுத்தம்தான். இதனால் இரவில்கூட நிம்மதியான தூக்கத்தைப் பெற முடியாது போய்விடுகிறது. மன அழுத்தத்தைப் போக்கி, இரவில் நிம்மதியான தூக்கத்தைப் பெறுவதற்கான வழி வகைகளைத் தேட வேண்டும். இங்கு ஒருசில வழிவகைகள் கொடுக்கப்பட்டுள்ளன.





**2 மணி நேரத்துக்கு முன்னரே சாப்பிடுங்கள்**
மன அழுத்தத்தில் இருக்கும்போது இரவில் தூங்குவதற்கு 2 மணி நேரத்துக்கு முன்பே சாப்பிடுங்கள். ஏனெனில் தூங்குவதற்கு 5 நிமிடங்களுக்கு முன்பு சாப்பிடுவதாக இருந்தால், அவசரமாகச் சாப்பிடுவோம். இதனால் நாம் உண்ணும் உணவு சமிபாடடையாமல், தூக்கத்தைக் கெடுக்கும். எனவே முன்பே சாப்பிட்டுவிடுங்கள்.



**தொலைக்காட்சி பார்ப்பதை குறையுங்கள்**
மன அழுத்தத்தில் இருக்கும் போது தொலைக்காட்சி பார்த்தால் மட்டும் அழுத்தம் குறைந்து விடப் போவதில்லை. ஒருவேளை பார்த்தால் சரியாவது போல் இருந்தால், அது தற்காலிகமாகதான் இருக்குமே தவிர, தொலைக்காட்சியை அணைத்த பின்னர் மீண்டும் மனம் அழுத்தத்துக்கு உள்ளாகும். எனவே மன அழுத்தத்தில் இருக்கும் போது தூங்குவதற்கு முயலுங்கள்.

**மனம் விட்டுப் பேசுங்கள்**
மனம் கஷ்டமாக ஒருவித அழுத்தத்தில் இருக்கும் போது, மனதுக்குப் பிடித்தவர்களுடன் மனம் விட்டுப் பேசுங்கள். இதனால் உங்களின் மனம் இதமாகி, பின் இரவில் நல்ல நிம்மதியானதூக்கத்தைப்பெறலாம்.

**வேலையை படுக்கை அறைக்கு கொண்டு செல்லாதீர்கள்**
எந்தக் காரணம் கொண்டும் படுக்கை அறைவரை வேலையை எடுத்துச் செல்ல வேண்டாம். படுக்கை அறை, ஓய்வு எடுப்பதற்காகவே தவிர வேலை செய்வதற்காக அல்ல.




# ஐரோப்பாவில் வாழும் சாம்பல் மனிதன்



ஐரோப்பா நாட்டில் லுட்விக் டொலெசல் என்ற நபர் கையில் கிடைக்கும் அனைத்துப் பொருள்களையும் எரித்து விட்டு சாம்பலையே தனது படுக்கையாக மாற்றி அதன் மீது படுத்து உறங்குகிறார்.





ஐரோப்பாவில் நபர் ஒருவர் அனைத்துப் பொருள்களையும் எரித்து விட்டு சாம்பல் மீது படுத்து உறங்குவது விநோதமாக உள்ளது. ஐரோப்பா நாட்டில் லுட்விக் டொலெசல் என்ற நபர் கையில் கிடைக்கும் அனைத்துப் பொருள்களையும் எரித்து விட்டு சாம்பல்களையே தனது படுக்கையாக மாற்றி அதன் மீது படுத்து உறங்குகிறார். மேலும், இவர் தனது படுக்கை மற்றும் தலையணை ஆகியவற்றையும் எரித்து உள்ளார். இதனால் இவரை ஐரோப்பாவின் அசிங்கமான மனிதன் என்று அனைவரும் குறிப்பிட்டுள்ளனர்.

இதுகுறித்து டொலெசல் கூறுகையில்:
தான் ஒரு வருடத்துக்கு முன்பு தனது வேலையை விட்டு விட்டதாகவும், அதன் பிறகு இங்கு நெருப்புடன் வாழ்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் தினமும் சூடான சாம்பலில் படுத்து உறங்குவதால் அது குளிருக்கு இதமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
இராஜேஸ்வரி
வீரசிங்கம்



தோற்றம் 05.10.1954 மறைவு 18.04.2013

எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டு ஒன்று சென்றதம்மா
ஒரு நாள் சென்றது போல்
உள்ளதம்மா உம்
திருமுகத்தைக் காணாதது
போல் மனம் துடிக்குதம்மா
எங்களை தனியே தவிக்கவிட்டு
ஏன்தான் தனி வழியே சென்றாயம்மா
காலமெல்லாம் உமக்காக
கண்களில் நீர் நிரம்பி வழியுதம்மா

விடத்தற்பளை,
மிருசுவில்.

தகவல்: கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மணவாளக் கோலம்

சங்கானை அரசடி வைரவ ஆலயத்தில் எதிர் வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கும்பாபிஷேக தின மணவாளக்கோலமும், சங்காபிஷேகமும் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வை வழக் கம்பரை முத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஸ்ரீரங்க நாதக் குருக்கள் நடத்தி வைப்பார். அன்றைய தினம் மகேஸ்வர பூசை யும் இடம்பெறும். (க-29)

## அளவைகள், நிறுவை கருவிகளுக்கு முத்திரையிடல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட மருதனார்மடம், சுன்னாகம் ஆகிய உப அலுவலகங்களில் நிறுவைகள், அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது எதிர்வரும் 20 ஆம் திகதி வரை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை இடம்பெறுமென யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் 8,9 ஆகிய திகதிகளில் மருதனார் மடத்திலும், 13,16,19,20 ஆகிய திகதிகளில் சுன்னாகத் திலும் இந்தப் பணிகள் இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (க)



## பனை அபிவிருத்திச் சபை
## கூறுவிலை கோரல்

எமது சபையின் பாவனைக்கு கொள்வனவு செய்யப்பட வேண்டிய பொருள்கள் தொடர்பான கூறுவிலை கோரல் தவிர்க்க முடியாத காரணத்தால் 16.05.2014 வரை பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். தகுதி வாய்ந்தவர்கள் தங்களின் ஆகக் குறைந்த கூறுவிலையினை எமது சபையின் தலைமை அலுவலகத்துக்குப் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

Procurement of Equipments for Enterprise Village Development Project

| No | EQUIPMENTS | SPECIFICATION | QUANTITY |
|---|---|---|---|
| 01 | Pan for jaggery preparation | 18G,stainless steel 6'x2'x9' | 1 |
| 02 | Settling tank -(sweet sap) | 18G, Sample is available in office | 1 |
| 03 | Stainless steel containers for sweet sap and treacle storage | 10L | 4 |
| 04 | Jaggery mould (made by jack timber) | Sample in office | 5 |
| 05 | Boiling vessels for pulp with lid | 14G,100L | 2 |
| 06 | Thermometer | 0-200 C | 1 |
| 07 | Plastic storage can | 5L(50), 10L(50) | 100 |
| 08 | Silver buckets | 10L(3), 20L(2) | 5 |
| 09 | Jam bottles | glass | 1000 |
| 10 | Soft drink bottles | 190ml glass | 2000 |
| 11 | Apron with cap | for food processing industry | 10 |
| 12 | Gloves | for food processing industry | 10 |
| 13 | Vaccum packing machinary | to wrap jaggery box with thin polyethene film | 1 |
| 14 | Plastic storage can | 20lit | 5 |
| 15 | Dee freezer | Medium | 1 |
| 16 | Blender | Industrial | 1 |
| 17 | Industrial burner | 4 Line | 1 |
| 18 | gas cylinder | 40Kg | |
| 19 | Bottling Machinery | Bottle sealer -cork | 1 |
| 20 | office Table | Fly wood(4'x2') | 1 |
| 21 | Office chair | high back arm chair | 2 |
| 22 | Plastic arm chairs | | 50 |
| 23 | plywood Almyrah | Show case with glass fitting | 2 |
| 24 | Palmyrah fiber Extraction machinery with necessary accessories | Sample is available in fiber center-sarasalai, Jaffna | 2 |
| 25 | Leaf Sizing tools | Model in office | 175 |
| 26 | Curved Knife - Steel | Model in office | 450 |
| 27 | Pan - தாச்சி | 23" diameter | 100 |
| 28 | Pan - தாச்சி | 18" | 75 |
| 29 | Pan - தாச்சி | 16" | 100 |
| 30 | Scissors -Plastic handle | 8" | 125 |
| 31 | Knife - Steel | Model in office | 275 |
| 32 | Measuring Tape | 60" | 125 |
| 33 | Small table (Mago) | 1½' X 1½' X 5' | 125 |
| 34 | Chair (Mago) | Lecture Hall Chairs | 125 |
| 35 | Plastic arm Chair | Standard Size | 175 |
| 36 | Name Board | 6' X 3' digital Colour | 6 |

குறிப்பு: மாதிரிகள்(Model) அலுவலகத்தில் அலுவலக நேரதில் பார்வையிட முடியும்

முகவரி:
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலக கட்டடம்,
கண்டிவீதி, யாழ்ப்பாணம்.


## கைதடி சமுர்த்திச் சங்கம் சாதனை

தென்மராட்சி, மே 7

யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட சித்திரை புத்தாண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட புத்தாண்டுச் சேமிப்புத் திட்டத்தில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த கைதடி சமுர்த்தி சங்கம் ஒரு கோடியே ஐந்து லட்சம் ரூபாவை அங்கீகரிக்கப்பட்ட வைப்பாகப் பெற்று யாழ்.மாவட்டத்தில் சாதனை படைத்துள்ளது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 34 சமுர்த்திச் சங்கங்களிடையே நடத்தப்பட்ட சித்திரைப் புத்தாண்டு சேமிப்புத் திட்டத்தில் அதிகளவான வைப்புப் பணத்தை சேகரித்து இந்தச் சங்கம் சாதனை படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையால் நடத்தப்படும் சமுர்த்தி பயனாளிகளிடமிருந்து சேமிப்பு ஊக்குவிப்பு செயற்றிட்டங்களின் போது கைதடி சமுர்த்திச் சங்கம் வருடாவருடம் முதல் மூன்று இடங்களுக்குள் தெரிவானமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## அதிபர் நியமனம்

அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையின் புதிய அதிபராக க.மோகன ராஜன் பதவியேற்றுள்ளார்.

அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையின் அதிபராக கடமையாற்றி வந்த எஸ். வேலழகன் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டதை அடுத்தே அவர் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ-11)

## முதலாம் வருட நினைவுதின அழைப்பு



தோற்றம்
12.08.1940

மறைவு
18.04.2013

கடந்த 18.04.2013 வியாழக்கிழமை இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர் **கனகசபை சுப்பிரமணியம்**
[ஆச்சாரியார், சிறுவிளான்]

அவர்களின் முதலாவது சிரார்த்ததின பிரார்த்தனை இன்று (07.05.2014)புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புக் கரம் கொண்டு அழைக்கின்றோம்.

பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

(47078)(5.6)

## மரண அறிவித்தல்கள்

### தம்பிப்பிள்ளை பசுபதி



யாழ். புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஓமந்தை விளாத்திக்குளத்தை வசிப்பிடமாகவும், வவுனியா குருமன்காடு முதலாம் ஒழுங்கையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை பசுபதி (04.05.2014) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை -தங்கம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-சின்னப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், சிவநாதன் (பிரான்ஸ்), யோகநாதன் (ஜேர்மனி), சந்திரகலா (ஆசிரியை-வ/புதுக்குளம் மகா வித்தியாலயம்), ஜெகநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பொன்னம்மா (இலங்கை) மற்றும் இரத்தினம் (இலங்கை), கண்ணம்மா (இலங்கை) ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற தனலெட்சுமி (பிரான்ஸ்) மற்றும் செல்வராணி (மாலா-ஜேர்மனி), பலேந்திரன் (அதிபர்-வ/தரணிக்குளம் கணேஷ வித்தியாலயம்), மதி (சுவிஸ்) ஆகியோரின் அருமை மாமனும், ரூபதர்ஷா-வர்ணன், சிவசஜிதா-பிறேம், சிவனுஜன், சிவோதஜன், யோகதீபன், ரதீபன், பிரதிகா, துஷாந், லோஜிதன், தரண்யா, சுவிஷன், லதுர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஜவிஷானின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2014) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப. 11 மணியளவில் தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

முதலாம் ஒழுங்கை,
குருமன்காடு, வவுனியா,
024 222 3880

(43266)
(10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

### சின்னத்தம்பி சிவராசா



[illegible] நுணாவில [illegible] பிறப்பிடமாகவும், நுணாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவராசா 05.05.2014 திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி- கனகம்மா தம்பதியரின் புதல்வனும், செல்லத்துரை -பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும், ரஞ்சிதா தேவியின் அன்புக் கணவரும், தயாபரன், பிரசாத், திவ்வியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், குணமணி, விஜயராசா, தங்கராசா, ஜெயராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2014) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

(43636)(5.6)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## பல்கலைக் கழக அனுமதி – 2013/2014
## உளச்சார்புப் பரீட்சை (Aptitude Test)
## மொழி பெயர்ப்பு கற்கை நெறி

மேற்படி நான்கு வருட பட்டப்படிப்புக் கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 23.05.2014 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

அனுமதிக்கான பொது நிபந்தனைகள்

அனுமதிக்கான தகைமைகள்

மொழிபெயர்ப்பு கற்கை நெறியைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2013/2014 கைநூல் 3.2.1 3.2.2 8.1.9 க்கு அமைய தகுதி பெற்றிருத்தல் வேண்டும்

தகுதிகாண் பரீட்சை

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் உளச்சார்பு பரீட்சைக்கு (AptitudeTest) தோற்றுதல் வேண்டும்.

விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை A4 தாளில் தயாரித்தோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் பெற்றோ அல்லது www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்தோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா150 ஐ ஏதாவதொரு மக்கள் வங்கிக் கிளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளைக்கணக்கு இல. 162100160000880 இல் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுடன் பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதிவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ.த) பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் அனுப்பப்படல் வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதி செய்யப்பட வேண்டும்.
விண்ணப்பதாரிகள் சுய விலாசம் இடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட 23x10ச.மீ அளவுள்ள கடித உறையை இணைத்து அனுப்புதல் வேண்டும்.
பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 23.05.2014 ஆம் திகதிக்கு முன்னதாக உதவிப்பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
அனுமதிக்குரிய ஆகக் குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச் சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்று பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவு திகதிக்குள் கிடைக்கப் பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்.
மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 021 222 6714.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

06.05.2014

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
கலைப்பீடம்
பல்கலைக் கழக அனுமதி–2013/2014
மொழி பெயர்ப்பு கற்கை நெறி
தகுதி காண் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம் (Aptitude Test)

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர்:-
(தமிழிலும் ஆங்கிலத்திலும்)

முதல் எழுத்துக் குறிக்கும் பெயர்:-

தேசிய அடையாளஅட்டை இலக்கம்:-

நிரந்தர முகவரி
(ஆங்கிலத்தில்):-

தொலைபேசி இலக்கம்:- மின்னஞ்சல் முகவரி:-

க.பொ.த (உ.த)பரீட்சைப் பெறுபேறு 2013:-

சுட்டிலக்கம்: Z புள்ளி: பொதுச் சாதாரண பரீட்சைப் புள்ளி:

| பாடம் | தரம் | மொழி மூலம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

2. பெற்றோர்/பாதுகாவலர் பெயர்:
(முகவரி: (ஆங்கிலத்தில்):-

சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:

1. பணம் செலுத்தியபற்றுச்சீட்டு
2. உறுதிப்படுத்திய 2013க.பொ.த (உ.த)பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் (Z புள்ளி/மாவட்டம் உள்ளடங்கலாக)
3. பெயர் மாற்றம் செய்யின் அதனை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணம்

என்னால் தரப்பட்ட மேற்படி விபரங்கள் யாவும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.

.......................
திகதி

.......................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி பதவிமுத்திரை பாடசாலைஅதிபர் / சமாதானநீதிவான் கையொப்பம்.

(C/14187)(10.6)

# ஆசிரியர்களுக்கு தகுதிச் சான்றிதழ்

## 2015 முதல் நடைமுறை


கொழும்பு,மே 7
பொதுப் பரீட்சைகளில் குறிப்பாக இடைநிலை தரங்களில் கணிசமான எண்ணிக்கையில் தொடர்ந்தும் மாணவர்கள் சித்தியடையத் தவறிவருகிறார்கள்.
இதற்கு ஆசிரியத் தரங்களில் தகுதியின்மை காரணமாக இருக்கலாம் என்பதால் ஆசிரியர்களுக்கு உரிமங்கள் (தகுதிச் சான்றிதழ்) வழங்கும் நடைமுறையொன்றைக் கொண்டுவர அரசு முடிவு செய்துள்ளது. அதனால் 2015 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியர்கள் தம் தொழிலைத் தொடர்ந்து செய்வதற்கான தகுதியை நிரூபிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.
இவ்வாறு கல்வி அமைச்சின் செயலாளர் அனுரா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
மாணவர் பெறுபேறுகளைப் பார்த்தால்கல்வித்துறைஅமைப்பில் ஏதோ குறை இருப்பது புலனாகின்றது.
இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் வகையில் ஆசிரியர்களுக்கு உரிமங்கள் (அனுமதிப்பத்திரம்) வழங்குவதற்குத் தீர்மானித்திருக்கிறோம்.
இதன்மூலம் கற்பிக்கும் தொழிலின் தகுதியைப் பராமரிக்க முடியும் என்று கருதுகிறோம் என்று கூறினார் அவர்.
கடந்த ஆண்டு 43 வீதமான பரீட்சார்த்திகள் கணித பாடத்திலும் 52 வீதமானவர்கள் ஆங்கிலத்திலும் 14 வீதமானவர்கள் சிங்கள மொழியிலும், இலக்கியத்திலும் தோல்வி கண்டுள்ளார்கள் என்று தெரிவித்த திஸாநாயக்க, எனவே தான் அரச பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் சிறப்பாகப் பயிற்சியளிக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காக இந்த நடவடிக்கையை எடுக்க உத்தேசித்துள்ளோம் என்றார்.

> 2015 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியர்கள் தம் தொழிலை தொடர்ந்து செய்வதற்கான தகுதியை நிரூபிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

ஆசிரியர் உள்ளீர்ப்பு செயற்பாடுகள் பதவி உயர்வுகள் மற்றும் தொழில் அபிவிருத்தி போன்றவை மதிப்பீடு செய்யப்படுவதான ஆசிரிய சேவைகள் பிரிவானது இப்போது மறு சீரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.
கல்வி முறையில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதைக் கண்டறிய கல்வித்துறை தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடல்கள் நடத்திவருகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.
சங்கங்கள் கோரி வரும் முக்கிய விடயம் என்னவென்றால் சம்பள உயர்வு மற்றும் கல்வித்துறையைத் தனியாக செயற்படும் வகையில் பொதுச் சேவையிலிருந்து பிரிக்கும் படியும் கோரி வருகிறார்கள்.
ஆசிரிய தொழிலில் பட்டதாரிகளை ஈர்க்கும் வகையில் இதனைச் செய்யும்படி கோருகிறார்கள். இவைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.
ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், தமிழ் ஆகிய துறைகளில் ஆசிரியர் பற்றாக்குறை இருக்கிறது.
கலைத்துறையில் ஆசிரியர்கள் அதிகம் காணப்படுவதால் மாணவர், ஆசிரியர் விகிதம் 1:17 என்ற வகையில் காணப்படுகின்றது. மேலும் ஆசிரியத் தொழிலில் நாட்டில் இன்று 2,25,000 பேர் காணப்படுகிறார்கள்.
இவர்களில் 80 வீதமானவர்கள் பெண்கள். இவர்களிலும் அனேகர் கிராமப் பகுதிகளில் பணியாற்ற விரும்புவதில்லை. சிலர் திருமணமாகித் தொழிலைவிட்டுச் சென்று விடுகின்றார்கள் என்றார்.
கற்பிக்க ஆசையுள்ளவர்களைத் தான் நாம் உள்ளீர்க்க வேண்டும். விஞ்ஞான ஆசிரியர்களும் அதிகமாகவே தேவைப்படுகிறார்கள்.
இவை எல்லாவற்றையும் ஆராய்ந்து முறையாகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு மட்டுமே உரிமங்கள் வழங்கப்படும்.
அமைச்சு எதிர்பார்க்கும் தகுதிகளையெல்லாம் ஆசிரியர்கள் பூர்த்தி செய்யவேண்டும்.
இப்போது பதவியிலிருப்பவர்களுக்குத் தகுதிபெற கால அவகாசம் வழங்கப்படும். புதியவர்கள் நடைமுறைகளை எதிர்கொள்ளவேண்டும்.
2015 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தையடுத்து இந்த புதிய செயற்பாடு நடைமுறைக்கு வரும் என்றும் கல்வித்துறைச் செயலாளர் கூறினார். (ப)

# ஹஜ் யாத்திரிகர்களுக்கு கட்டுப்பாடுகள் அதிகரிப்பு

## சிறுவர்கள், அறுபது வயதுக்கு மேற்பட்டோருக்கு விசாக்கள் இல்லை



கொழும்பு,மே 7
சவூதி அரேபியாவில் தீவிரமடைந்து வரும் மேர்ஸ் வைரஸ் நோயைக் கட்டுப்படுத்தும் பொருட்டு ஹஜ் கடமைகளுக்கு சிறுவர்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டோரை அனுமதிப்பதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இது தவிர ஏனைய வகை நோய்களுக்கான தடுப்பு மருந்தை பெறாதவர்களுக்கும் விசாக்களை வழங்குவதில்லை என்று மக்கா தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்தின் ஹஜ் குழுவின் தலைவர் சாத் அல்குரைஸி தெரிவித்தார்.
சவூதி அரேபியா வில் தீவிரமடைந் திருக்கும் மேர்ஸ் வைரஸைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையின் ஓர் அங்கமாக பல்வேறு ஹஜ் முகவர்களும், சிறுவர்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட யாத்திரிகர்களின் விசா விண்ணப்பங்களை ஏற் பதை நிறுத்தியுள்ளனர். புனித ரம்ழான் மாதத்துக்கு இன்னும் இரண்டு மாதங்களே உள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## செல்லத்துரை பரமலிங்கம்

(ஸ்ரீ விநாயகர் வெதுப்பக உரிமையாளர், மீசாலை மேற்கு)

மனம் மகிழ 13.11.1952 | மனம் நெகிழ 18.04.2013

**திதி: 07.05.2014**

**எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்
குல தெய்வமாய், எமது இல்லத்திலும்
உள்ளங்களிலும் நீங்கா நினைவாக
நின்று நிலைத்துவிட்ட உங்களின்
நாமம் என்றென்றும் நின்று நிலைத்திடவும்
உங்கள் ஆத்மா சாந்தியடையவும்
எல்லாம்வல்ல எம்பெருமானைப்
பிரார்த்திக்கின்றோம்**

கேணியடி வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.
தொ.பே. 077 995 0000

என்றென்றும் நீங்கா நினைவுகளுடன்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.


மனைவி : திருமதி சா.பரமலிங்கம்,
மகன்மார் : ப.இங்கிதன், ப.மதுராங்கன்.

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

எமக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த எம் குல தெய்வத்துக்கு எமது இதய அஞ்சலி

அமரர்

## அரியகுட்டி துரைராஜா



திதி: அட்டமி

தோற்றம் 10.06.1931 | மறைவு 02.05.2009

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் பாசநிழல் தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய்ப் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
ஐந்து ஆண்டுகள் பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் அவர் பாசம் போற்றியே பணிந்திடுவோம்.

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

கோண்டாவில் வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.
தொ.பே: 077 583 4858

## கொடுப்பனவுகளை பெறுவதில்லை என புதிய நெறியாளர் குழு தீர்மானம்

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நெறியாளர் குழு. தமக்குரிய கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வதில்லை என தீர்மானித்துள்ளது. மேற்படி தீர்மானம் தொடர்பாக சங்கத்தின் தலைவர் இ.சந்திரன் தகவல் தெரிவிக்கையில்;

"நெறியாளர் குழுவின் தலைவருக்கு மாதாந்த கொடுப்பனவும், உறுப்பினர்களுக்கு கூட்டம் நடைபெறுவதை அடிப்படையாகக் கொண்டு மாதாந்தம் இரண்டு கூட்டங்களுக்கு மேற்படாத நிலையில் பெற்றுக் கொள்ளக் கூடிய கொடுப்பனவு எதனையும் குழுவின் உறுப்பினர்கள் எவரும் பெற்றுக் கொள்வதில்லை என ஒரு மனதாக தீர்மானித்துள்ளோம். மேற்படி கொடுப்பனவுத் தொகை சங்கத்தின் கல்வி அபிவிருத்திப் பணிகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளது"- என்றார். (ஒ-11)

## Words of Peace அமைதியின் சொற்கள்

வாழ்வில் நிறைவை அடையுங்கள். ஆனந்தத்தைப் பெறுங்கள். மற்ற எல்லா ஆனந்தங்களுக்கும் எல்லை உண்டு. ஆனால் உள்ளே உள்ள ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. நாம் அந்த ஆனந்தத்திற்காகத் தான் இங்கிருக்கிறோம். வெளி ஆனந்தம் வரும் போகும். ஆனால் இதயத்தின் ஆனந்தம் நிலையானது. அது உங்கள் உள்ளே உள்ளது. நிகழ்ந்து கொண்டிருக்கிறது. மேலும் அது உங்கள் இறுதி மூச்சு வரை உங்களுடன் இருக்கும்.

**பிரேம் ராவத்**

மேலதிக தொடர்புகளுக்கு :011 725 0001 www.wopg.org
பி.ப. 3.00 மணி - 10.00 மணி வரை
இலவச டிவிடி உண்டு. (47587) (7.6)

## கிரவல் மண்ணால் கேடுகள்

வீதிகளின் புனரமைப்புக்கென அகழப்படும் கிரவல் மண் குடிமனைகளுக்கு நடுவே சேகரித்து வைக்கப்படுவதால் மக்கள் சுகாதாரச் சீர் கேடுகளுக்கு ஆளாகி வருகின்றனர்.

தற்போது ஒட்டுசுட்டான்- புதுக்குடியிருப்பு வீதியின் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன. அதற்குத் தேவையான கிரவல் மண் அகழப்பட்டுக் குடிமனைகளுக்கு நடுவே கொட்டப்பட்டுச் சேகரிக்கப்படுவதால் அதிலிருந்து கிளம்பும் தூசி, வீடுகள் மற்றும் கிணறுகளில் படிவதால் சுகாதாரக் கேடுகள் தோன்றியுள்ளன. எனவே மக்களின் வாழ்விடங்கள் இல்லாத இடங்களில் இதனைச் சேகரித்து வைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

## கட்டார் நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு

கட்டார் நாட்டில் பிரபல்யமான Regency முகாமைத்துவ கம்பனியில் கீழ்வரும் வெற்றிடங்கள் உண்டு.

* AC Technician - 10 பேர் (1400-1600+OT QR). * சட்டரிங் Carpender - 10 பேர் (1200+200+OT QR). * டைல் மேசன் -15 பேர் (1300+200+OT QR). * பிளம்பர்ஸ் - 05 பேர் (1200+200+OT QR). * கம்பி கட்டுபவர் -05 பேர் (1200+200+OT QR). * எலக்ரீசியன் -10 பேர் (1200+200+OT QR). * மேசன் -10 பேர் (1200+200+OT QR). * உதவியாளர்கள் -10 பேர் (800+OT ).

உணவு, தங்குமிடம், மருத்துவம் இலவசம். 19-35 வயது. 12.05.2014 திங்கட் கிழமை கொழும்பில் நேர்முகத் தேர்வு Skype இல் தமிழில் இடம்பெறும். இரண்டே வாரத்தில் பயணம்.
கட்டணங்கள் 45000/= மட்டும் அறவிடப்படும்.

தொடர்புகளுக்கு: 077 788 1239, 072 471 4036 (43290) (10.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01.10.1937

மறைவு 18.04.2013

**கந்தையா தம்பித்துரை**

திதி: அட்டமி

ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவு
எங்கள் நெஞ்சை விட்டு அகலவில்லை
உங்கள் புன் சிரிப்பை நினைக்கும்போது
எங்கள் உள்ளம் புண்படுகிறது
எம் குடும்ப குலவிளக்கே உங்கள்
நினைவு என்றுமே எம் நெஞ்சங்களில் வாழும்

என்றும் உங்கள் நினைவுகளுடன்

பாப்பாத்தோட்ட வீதி,
இணுவில் மேற்கு, இணுவில். குடும்பத்தினர். (47692)(10.6)

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்பவர்களை யும் நான் மன்னிக்க அருள்புரிவரே. என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறிக் துதிக்கிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் என்றென்றும் உம்மிலிருந்து விலகாமல் உம்மீது நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன்.

- ஆமென்

அடியாள் (47366)(7.6)

## கணினிக் கல்வி நிலைய உபகரணங்கள் விற்பனைக்கு

முல்லை வீதி, விசுவமடுவில் இயங்கிக் கொண்டிருக்கும் கணினி நிறுவனம் சகல உபகரணங்களுடனும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 888 5449 (47694) (10)

## தவறிவிட்டது

யசோதா-இராசையா என்பவரது (887901015V) இலக்கமுடைய தே.அ.அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், வாகன பதிவுப் புத்தகம் (RB-5346) என்பன நெல்லியடிக்கும் குடத்தனைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (47691) (10)

077 262 7581, 071 494 0021

## வேலையாள் தேவை

1. அலுவலக உதவியாளர் (கணினி அறிவு)
2. விற்பனை பிரதிநிதி
3. வாகன ஓட்டுநர்

போன்ற வெற்றிடங்கள் உள்ளன. (F/11151) (10)
தகுதியுடையோர் தொடர்பு கொள்ளவும்

T.P: 021 224 0514, 077 386 7696

## மூதாட்டியை மோதியது ஹைஏஸ்

சாவகச்சேரிக்குச் செல்வதற்காக வீதியில் பஸ்ஸுக்காகக் காத்திருந்த மூதாட்டியை வேகமாக வந்த ஹைஏஸ் வாகனத்தின் பக்கக் கண்ணாடிக் கம்பி இடித்ததால் மூதாட்டிக்கு நெற்றியில் பலத்த காயம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் கைதடியில் இடம்பெற்றது. வீதியில் வீழ்ந்து இரத்தம் தோய்ந்த நிலையில் காணப்பட்ட அந்த மூதாட்டியை அவ் வழியே வந்த படையினர் அவர்களின் வாகனத்தில் ஏற்றிக் கொண்டு வந்து சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்த்தனர். கைதடி தெற்கைச் சேர்ந்த புண்டாரி ஈச்சி (வயது- 70) என்ற மூதாட்டியே இவ் விதம் காயமடைந்தவராவர்.

அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர் வி.ஜெயராஜா அவர்களின் அன்புத் தங்கை

**செல்வி விக்னேஸ்வரன் துஸ்யந்தி**

அவர்கள் 02.05.2014 அன்று இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். (47684) (7.6)

ஆசிரியர் நல்லுறவு மன்றம் யா/செங்குந்த இந்துக் கல்லூரி

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் வணிகப்பிரிவு (2014)

மாணவன் **ச.ராஜ்கரன்**

அவர்கள் அகாலமரணமடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை நலன்புரி சங்கம்

யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (47080) (7.6)




- செல்போனில் பகல்கொள்ளை
- உலகின் அதிவே சாதனைக்காக...

### இரண்டாவது அரசாங்கம்


.....அவர்கள் இடையிடையே அரசாங்கத்தைக் கவிழ்க்கப்போவதாகவும் சவால் விடுவார்கள். ஆயினும் அமைச்சர்களோ ஜனாதிபதியோ அவர்களுக்கு எதிராக வாயே திறப்பதில்லை. 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த அனுராதபுரம் தர்க்காவை உடைத்து தரைமட்டமாக்கியதுடன் இவர்களின் ஆட்சியதிகாரம் ஆரம்பமானது. அதன் பின்பு 60 ஆண்டுகளாக இயங்கி வந்த தம்புள்ள பள்ளிவாசல் தகர்க்கப்பட்டது. மதவழிபாட்டுத் தலங்கள் பட்டப்பகலில் மக்கள் முன்னிலையில் உடைக்கப்பட்டாலும் கூட உடைத்தவர்கள் மேல் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஒரு வழிபாட்டு மையத்தையோ குடியிருப்பையோ இடிக்க ......

## மிருக வதை; இருவருக்கு பிணை

இம்சைப்படுத்தும் வகையில் உரிய வசதிகள் வழங்கப்படாது மாடுகளை வாகனத்தில் ஏற்றி வந்ததாகத் தெரிவித்து இருவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இவ்விருவரையும் தலா 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டது. மிருக வதை சட்டத்தின் கீழ் பொலிஸாரால் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு நேற்று முன் தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குற்றஞ்சாட்டப்பட்ட இருவரையும் தலா 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல உத்தரவிடப்பட்டது. (வ-9)

## மரண அறிவித்தல்

**முத்துதம்பி மகாதேவா**



கரிப்பட்ட முறிப்பு மாங்குளத்தைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட முத்துதம்பி மகாதேவா 06.05.2014 செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துதம்பி-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், தவமணி, ஆரியமாலா, இந்திராணி, விஜயலட்சுமி, ராஜேஸ்வரி, நாகமணி, காந்திமதி, மயில்வாகனம், கிருஷ்ணசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிறேமினி (லதா, சமுர்த்தி உத்தியோகத்தர்), சங்கீதா (கீதா-சுவிஸ்), புவிகரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றொகான் (T.V.S கம்பனி), சசிக்குமார் (சுவிஸ்), சத்தியப்பிரியா (ஜேர்மனி) ஆகியோரின் பாச மிகு மாமனும், கம்சிகா, மதுசன், சாரா, சமீரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.05.2014) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாளம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
T.P: 077 691 3192 (43637) (10.6)

தகவல்: குடும்பத்தினர்.

# படையினரை கொலைக்களம் அனுப்புவதற்குத் தயாரில்லை

## ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துடன் ஒத்துழைக்க முடியாது என்கிறார் ஜனாதிபதி மஹிந்த



மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு,மே7

நாட்டின் இறைமையை விட்டுக் கொடுக்கவோ, படையினரை கொலைக்களத்துக்கு அனுப்பவோ நான் தயாராக இல்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஐ.நாமனிதஉரிமைகள்ஆணையாளர் அலுவலகத்துடன் ஒத்துழைக்குமாறு இலங்கை அரசுடன் நெருக்கமான உறவை வைத்துள்ள சில அமைப்புகள் விடுத்த வேண்டுகோளையும் அவர் நிராகரித்துள்ளார்.

இந்தத் தகவல் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றில் வெளியிடப்பட்டள்ளது.

கடந்தவாரம், ஜனாதிபதியை தனித்தனியாகச் சந்தித்துள்ள இந்த அமைப்புகள், ஜெனீவாத் தீர்மானத்தின் விளைவாக எழக்கூடிய சூழ்நிலைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடியுள்ளன.

இதன்போதே, அனைத்துலக விசாரணை அழுத்தங்களைக் குறைப்பதற்கு, ஐ.நா. மனித உரிமைகள்ஆணையாளர் அலுவலகத்துடன் ஒத்துழைக்குமாறு இந்த அமைப்புகள் கோரியிருந்தன.

நாம் எதற்கு ஒத்துழைக்க வேண்டும்? எம்மால் வெல்ல முடியாது என்று எல்லோருமே கூறிய போரை நாம் வென்றுள்ளோம் என்று ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பல தியாகங்களைச் செய்தே போரில் வெற்றி பெற்றுள்ளோம். போரை வழிநடத்தியவர்களை அனைத்துலக விசாரணை நீதிமன்றில் நான் நிறுத்துவது எளிதானது. ஆனால் அதற்கு நான் தயாரில்லை என்று அவர் தெரிவித்தார்.

அதிகாரப்பகிர்வு தொடர்பாக பேச்சுக்களை நடத்தி, கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளத் தயா ராகவே இருக்கிறேன். ஆனால், அதிகாரப் பகிர்வு தொடர்பான முடிவுகள் நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலமாகவே எடுக்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

நாட்டின் இறைமையை விட்டுக் கொடுக்கவோ, படையினரை கொலைக்களத்துக்கு அனுப்பவோ நான் தயாராக இல்லை என்று அவர் கூறியுள்ளார் என ஆங்கில ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. (ச)

## பிழையான தீர்மானமே பிரச்சினைக்கு காரணம்

கொழும்பு,மே 7

அரசின் சில பிழையான தீர்மானங்களே சுகாதாரத்துறையில் பிரச்சினைகள் ஏற்படக் காரணம் என்று ஜே.வி.பி கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இதுகுறித்து ஜே.வி.பி கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சுகாதாரத்துறையில் நிலவிய சில முரண்பாடுகள் பிரச்சினையாக மாறுவதற்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும்.

சுகாதாரத்துறையில் நிலவி வரும் பிரச்சினைகளுக்கு அரசு உடனடித் தீர்வு வழங்க வேண்டும்.

சுகாதாரத்துறையில் நிலவும் பிரச்சினைகளால் நோயாளிகள் நெருக்கடி களை எதிர்நோக்கி வருகின் றனர்.

அரசின் கொள்கைகள் காரணமாக ஒவ்வொரு துறையிலும் இவ்வாறான பிரச்சினைகள் நிலவி வருகின்றன-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சுற்றிவளைப்பு மூலம் அதிக வருமானம்"


கொழும்பு,மே 7

நுகர்வோர் அதிகாரசபை மேற் கொண்ட சுற்றி வளைப் புகளின் மூலம் இந்த வரு டத்தின் முதல் காலாண்டுப் பகுதியில் 2,23, 14,850 ரூபா வருமானமாகக் கிடைத் துள்ளது என்று அதன் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்தார்.

இந்தக் காலப் பகுதியில் நாடு முழுவதும் 21 ஆயிரம் சுற்றி வளைப்புகள் முன்னெடுக்கப்பட்டன.

அதில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டங்களை மீறிய 8 ஆயிரத்து 340 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட் டன என்று அவர் கூறினார்.

நுகர்வோரை பாதுகாக்கும் பொருட்டு பண்டிகைக் காலத் தில் கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சர் ஜோன் ஸ்டன் பெர்னாண்டோவின் உத்தரவின் பேரில் நாடு முழு வதும் விசேட வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



ஜப்பான் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஹிரோயுது தலைமையிலான ஜப்பான் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் குழுவொன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை அவரது அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடியது. (ச)

## பொதுபல சேனா உறுப்பினர்களுக்கு கிடைத்தது பிணை

கொழும்பு,மே 7

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலபொட அத்தே ஞானசார தேரர் உட்பட ஆறு பேர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஜாதிக பல சேனா அமைப்புடன் ஏற்பட்ட முறுகல் நிலை தொடர்பில் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவர்கள் அறுவரும் ஒரு லட்சம் ரூபா தனிநபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

ஜாதிகபல சேனா நிப்பொன் ஹோட்டலில் நடத்திய ஊடக சந்திப்பின்போது அத்துமீறி உள்நுழைந்து இடையூறு ஏற்படுத்தியமை, வட்டருக்க தேரருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தமை மற்றும் அல் குர்ஆன் தொடர்பில் தவறான கருத்து வெளியிட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்த தேரர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தன.

இதுதொடர்பான வழக்கு கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஞானசாரதேரர் உள்ளிட்ட அறுவர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

அதனையடுத்தே கோட்டை நீதிவான் திலினி கமகே சந்தேக நபர்களைப் பிணையில் செல்ல அனுமதித்துள்ளனர். (ச)

## அறிக்கை கிடைத்ததும் ஒழுக்காற்று நடவடிக்கை

### ரயில் விபத்தில் ரூ. 168 மில்லியன் நட்டம்

கொழும்பு,மே 7

பொத்துஹெர ரயில் விபத்து தொடர்பிலான இறுதி விசா ரணை அறிக்கை கிடைத்த வுடன் குற்றமிழைத்தவர் களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரயில்வே திணைக் களம் தெரிவித்துள்ளது. இந்த விபத்து தொடர்பிலான விசாரணைகளுக்காக இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டுள் ளன என்று ரயில்வே பொது முகாமையாளர் பி.ஏ.பி. ஆரியரத்ன தெரிவித்தார். முதலாவது குழு பொத்தஹெர பகுதிக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என் றும் அவர் கூறினார்.

இரண்டு ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ரயில்வே திணைக் களத்திற்கு 168 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 05 ரயில்வே ஊழியர்கள் பணியிலிருந்து இடைநிறுத் தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

வேலைக்கு ஆள் தேவை
முன் அனுபவம் உள்ள விற்பனைப் பிரதிநிதி, A தர சாரதி, கணக்குப் பதியுநர்.
தொடர்பு 0766805661

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 07.04.2014
திங்கட்கிழமை
சிவபதமடைந்த
எமது
குடும்பத் தலைவி

அமரர் அன்னம்மா முருகேசு

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (07.05.2014) புதன் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந்நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இல, 25/16E, முதலாம் ஒழுங்கை,
குட்செட் வீதி, தோணிக்கல், வவுனியா.
குடும்பத்தினர்.

(47705)(10)

வேலை தேடும் பட்டதாரிகளுக்கு Starts on 10-05-2014
"Graduate Boot Camp"from KU
ஆளுமை விருத்தி .தகவல் தொழில்நுட்ப விருத்தி . வர்த்தக முகாமைத்துவ வழிகாட்டல் என்பவற்றில் முன்னணி நிறுவனமாகிய கே.யு யாழ் கலைப்பட்டதாரிகளின் வினைத்திறனை அதிகரிக்கச்செய்யவும் தொழிற் சந்தைக்கு அவர்களை தயார்படுத்தவும் வழங்கும் பயிற்சி நெறி. இரண்டு வாரங்கள் மட்டுமே. இன்ரநெற், ஈமெயில், வர்த்தக ஆங்கிலம்,தொடர்பாடல் திறன்,ஆளுமை விருத்தி, ஆகியன உள்ளடங்கிய அதிவேக பயிற்சி நெறி ஆளுமைமிக்க பயிற்சியாளர்களால் வழங்கப்படும்.
Visit :http://edu.kugroup.info/skills
Learn from MBAs



"கலைப்பட்டதாரிகள் தொழிலுக்கு உரிய தகுதிகளைக் கொண்டிருக்காத காரணத்தால் அவர்களுக்கு தொழில் வழங்க முடியாதுள்ளது"
-கல்வி அமைச்சின் செயலாளர்(29-04-2014 உதயன் செய்தி)
UEC NIGHTINGALE INTERNATIONAL COLLEGE SDP Aspire
Supported by : Universal Education Council
Knowledge Universe® No 626,1/1,K.K.S Rd,Jaffna.
College of Professional Studies Tel: 021-3208342/ 0777302882
Jaffna's first Soft Skills Centre by UK-MBA professionals.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### திருமலையில்

லைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் 7 பேர் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், இராணுவத்தினரும் பல பிரதேசங்களிலும் குவிக்கப்பட்டுள்ளதால் மக்களின் இயல்பான செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பதற்றமான சூழ்நிலை நிலவுவதாகவும் வெருகல் பிரதேச சபை உறுப்பினர் ரி.ஜெயகாந்தன் குறிப்பிட்டார்.

தப்பியோட்டம்

ஈச்சிலம்பத்தை பகுதியிலுள்ள கடற்படை முகாமில் கடற்படையினர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை உடற்பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இதன்போது முகாமுக்கு அண்மையாகச் சந்தேகத்துக்கிடமான இருவர் நடமாடுவதை அவதானித்த கடற்படையினர் அவர்கள் இருவரையும் விசாரணை செய்ய முற்பட்டுள்ளனர். இதன்போது சந்தேகநபர்கள் இருவரும் தாம் கொண்டு வந்த உரப்பையை போட்டுவிட்டுக் கடற்கரைப் பக்கமாக தப்பியோடியுள்ளனர். இதனையடுத்துக் கடற்படையினர் குறித்த உரப்பையைச் சோதனை செய்துள்ளனர். ...தில் புதிய ரி-56 ரகத் துப்பாக்கி, பிளாஸ்ரிக்கிலான மகஸின்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. இதனை இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய உறுதிப்படுத்தினார்.

அதிகாலையிலேயே சுற்றிவளைப்பு

இதனையடுத்து, வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஈச்சிலம்பத்தை, கல்லடி, புன்னையடி, கறுக்காமுனை ஆகிய கிராமங்கள் நேற்று அதிகாலை 2 மணி முதல் கடற்படையினர், இராணுவம், பொலிஸாரால் சுற்றிவளைப்புக்குள்ளாக்கப்பட்டன. இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த, கடற்றொழிலுக்குச் சென்று ...ரை திரும்பியவர்களும் அவர்களது வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. அத்துடன் ஒலிபெருக்கி மூலம், 15 வயதுக்கு மேற்பட்டவர்களை விசாரணை செய்ய வேண்டியுள்ளதாக அறிவித்த இராணுவத்தினர், அவர்கள் அனைவரையும் கல்லடியிலுள்ள மனுநீதியம்மன் கோயிலடியில் ஒன்றுகூடுமாறு தெரிவித்தனர். அதன் பின்னர் நேற்றுக் காலை குறித்த 4 கிராமங்களினுள்ளும் வீடு வீடாகச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது 15 வயதுக்கு மேற்பட்ட சகலரும் இராணுவத்தினரால் குறித்த கோயிலடிப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மோப்ப நாய் கொண்டு சோதனை

கோயிலடிக்கு கொண்டு செல்லப்பட்ட அனைவரும் இராணுவத்தினரால் தீவிரமான விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். மோப்ப நாய்களைக் கொண்டு மக்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த இராணுவத்தினர், சந்தேகத்துக்கிடமானவர்கள் இருவர் ஆயுதங்களைப் போட்டுவிட்டுத் தப்பியோடி விட்டனர் என்றும் அறிமுகமில்லாதவர்கள் கிராமத்தினுள் பிரவேசித்தால் தமக்கு அறிவிக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குத் துணை புரிய வேண்டாம் என்று எச்சரித்ததுடன், இவ்வாறான நிலைமைகள் தொடர்ந்தால் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டி வரும் என்றும் எச்சரித்துள்ளனர்.

சுமார் இரு மணி நேரம் வரை இராணுவத்தினர் மக்களைத் தடுத்து வைத்திருந்துவிட்டு அதன் பின்னர் விடுத்துள்ளனர். இதன்போது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் 7 பேர் மாத்திரம் நீண்ட நேரம் வரை தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு அவர்களும் நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி

இருப்பினும் குறித்த நான்கு கிராமங்களின் பிரதான வீதிகள், உள்ளுர் வீதிகள் யாவற்றிலும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதுடன் சோதனை நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப் பட்டுள்ளது. இதனால் மக்கள் வீதிகளில் நடமாடாமல் பெருமளவில் வீடுகளுக்குள்ளேயே முடங்கி கிடப்பதாகவும் ஒட்டுமொத்தத்தில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த ஈச்சிலம்பத்தை அதனுடன் இணைந்த பிரதேசங்கள் யாவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள்ளேயே 2006 ஆம் ஆண்டு வரையில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(த-5)

### தாய்

வத்தையடுத்து அதனுடன் தொடர்புபட்டிருந்த நபர் ஒருவரை தனது வீட்டில் தங்க வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஜெயக்குமாரி (வயது - 50) அவரது மகள் விபூசிகா (வயது - 13) இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் 14 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியபோது சிறுமி விபூசிகாவை சிறுவர் நன்னடத்தை அதிகாரி ஊடாக சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்குமாறும் தாயார் ஜெயக்குமாரியை பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.ஐ. வஹாப் தீன், சிறுமி விபூசிகா தனது தாயாரை சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு அனு மதியளித்ததோடு அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும் பணித்திருந்தார்.

இந்தப் பணிப்புக்கமைய நேற்று முன்தினம் கண்டாவளைப் பிரதேச சிறுவர் நன்னடத்தை அதிகாரி திருமதி விஜயகுமாரி சுரேஷ் மற்றும் பூநகரி பிரதேச சிறுவர் நன்னடத்தை அதிகாரி எஸ்.சிவபாதசுந்தரம் ஆகியோருடன் சிறுமி விபூசிகா பொலிஸ் பாதுகாப்புடன் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

தாயாரைப் பார்த்து இரண்டு மாதங்கள் ஆகும் நிலையில் விபூசிகா கதறியழுது கட்டி அணைத்த காட்சி அங்கு நின்ற சிறைச்சாலை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் ஆகியோரின் மனங்களை தூக்கிவாரிப் போட்டது. தாயார் ஜெயக்குமாரியும் மகளைக் கட்டியணைத்து கதறி அழுதார்.

அங்கு நின்ற பெண் பொலிஸ் அதிகாரி ஒருவரின் காலில் விழுந்த விபூசிகா தனது தாயாரை விடுதலை செய்யுமாறு கெஞ்சி அழுதார். இதனால் மனம்பொறுக்கமுடியாத பெண் பொலிஸ் அதிகாரி கண்களில் நீர்வடிய விபூசிகாவிடம் இருந்து விடுபட்டு தனது கண்களை துடைத்துவிட்டு மீண்டும் வந்து தாயாரை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக ஆறுதல் கூறினார்.

விபூசிகா - ஜெயக்குமாரியின் பாசப்பிணைப்பை கண்ட சிறைச்சாலை சோகமயமானதை அவதானிக்க முடிந்தது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

பூப்பெய்தி சில நாள்களேயான விபூசிகா தாயிடம் இருந்து பிரிக்கப்பட்டு சிறுவர் இல்லம் ஒன்றில் பராமரிக்கப்பட்டு வரும் நிலையில் நேற்றுமுன்தினம் தாயாரைச் சென்று பார்வையிட அனுமதிக்கப்பட்டார். (உ)

### முள்ளிவாய்க்கால்

குப் பல்கலைக்கழக நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதியிலிருந்து 20 ஆம் திகதி வரை யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்விச் செயற்பாடுகள் இடம்பெறாது. விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்கள் இந்தக் காலப்பகுதியில் விடுதிகளை விட்டு வெளியேறவேண்டும். 20 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்குப் பின்னர் விடுதிகளில் உள்ள மாணவர்கள் தமது விடுதிகளுக்குத் திரும்பலாம். எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் கல்விச் செயற்பாடுகள் மீளத் தொடங்கும் என்று யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் வி.காண்டீபன் ஒப்பமிடப்பட்டு அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகம் மூடப்படுவதற்கான காரணம் எதுவும் அதில் தெரிவிக்கப்படவில்லை. இவை குறித்து யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் பதிவாளர் ஆகியோருக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோதும் அவர்களின் பதிலைப் பெற முடியவில்லை.

(த-4-104)

### யாழ்ப்பாண

பயங்கரவாத நடவடிக்கைகளுக்குத் தூபமிடுதலும் அவர்களின் கொள்கைகளைப்பின் பற்றியும் வருகின்றமை எமக்கு வேதனை அளிக்கிறது. இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அழிக்கப்பட்ட விடுதலைப்புலிகளால் நாமும் நம் தேசமும் எத்தனையோ கொடுரங்களைச் சந்தித்தது என்று இந்த உலகமுமே நன்றாக அறியும். எனவே பல்கலைக்கழகத்தில் மீண்டும் புலிகளைப் புதுப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிய முடிகிறது.

அவ்வாறான செயற்பாடுகளைத் தூண்டும் பேராசிரியர்கள், மாணவர் ஒன்றியத் தலைவர்களை நாங்கள் நீண்டகாலமாக அவதானித்து வந்ததுடன் அவர்களுக்கு நேரடியாக எச்சரிக்கையும் செய்தோம். ஆனால் அது பயனளிக்கவில்லை என்று தான் கூறவேண்டும். ஏனெனில் அவர்களின் நடவடிக்கைகள் அதிகரித்துக் கொண்டு தான் செல்கின்றன.

பேராசிரியர்களின் வழிநடத்தலின் கீழ் தான் மாணவர் ஒன்றியங்கள் பயங்கரவாத நடவடிக்கைக்குத் துணைபோவதாக நாங்கள் அறிகிறோம். அவர்களுக்கு நாங்கள் இறுதியாக எச்சரிக்கை ஒன்றை விடுக்கிறோம்.

இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மூவின மக்களும் கல்வி கற்று வரும் நிலையில் இவ்வாறான செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுக்க ஒருபோதும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

எனவே பேராசிரியர்களே மாணவர் ஒன்றியத் தலைவர்களே உங்களுக்கு நாங்கள் வழங்கும் இறுதி எச்சரிக்கையாக இதை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் உங்கள் உயிருக்கு நாங்கள் உத்தரவாதம் வழங்க முடியாது. ஒரே நாடு ஒரே மக்கள்-என்றுள்ளது.

இந்தத் துண்டுப் பிரசுரம் ஒட்டப்பட்டதை அடுத்து யாழ். பல்கலைக்கழக வளா கத்துக்குள் நேற்றுப் பரபரப்பான நிலைமை காணப்பட்டது. மாணவர்கள் சிலர் அந் தத் துண்டுப் பிரசுரங்களைக் கிழித்து வீசியதாகவும் தெரிவிக்கப்பட்டது (த-4)

### ராணுவ

அவரது சகோதரன் 6 மாதங்களுக்கு முன்னர் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது ஓட்டோ மோதியமையால் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்தார். அவரது வீட்டுக்குச் சென்றுவிட்டுத் திரும்பி நடந்துவந்தபோதே இராணுவ வாகனம் மோதியதாக உறவினர்கள் தெரிவித்தனர். அவரை இராணுவத்தினர் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றனர். பின்னர் அவர் யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

(த-4)

### படைத்

வர் பிரதிநிதிகள் ஆகியோரையே படைத் தளபதி சந்திப்புக்கு அழைத்துள்ளார்.

பல்கலைக்கழகத்தில் இராணுவத்தினரின் தலையீடுகளை உடன்நிறுத்துமாறு மாணவர்கள் அண்மையில் துணைவேந்தரிடம் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெறுகிறது.

(த-4)

### தென்னாபிரிக்க

அமைவாக, தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் ஷுமோவினால் இலங்கை விவகாரங்களைக் கையாளும் சிறப்புத் தூதுவராக சிறில் ரமபோஷா நியமிக்கப்பட்டிருந்தார். இதன் பின்னர் அவர் இலங்கை அரச குழுவைக் கடந்த பெப்ரவரி மாதம் தென்னாபிரிக்காவுக்கு அழைத்து கலந்துரையாடியிருந்ததுடன் ஏப்ரல் மாதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அழைத்துப் பேசியிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பின்போது, எதிர்வரும் மே மாத இறுதியில் அல்லது ஜூன் மாதம் முதல் வாரத்தில் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டு வடக்கு - கிழக்குப் பகுதிகளைப் பார்வையிடுவதாக சிறில் ரமபோஷா தெரிவித்திருந்தார்.

இருப்பினும் ரமபோஷாவின் பயணம் முன்னரே திட்டமிட்டவாறு இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாதத்தின் முதல் வாரத்தில் இடம்பெறுமா என்பது சந்தேகத்துக்கிடமாகியுள்ளதாகக் கொழும்பு இராஜதந்திரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாமதத்துக்குத் தென்னாபிரிக்காவில் இன்று நடைபெறும் தேர்தல் மட்டும் காரணமல்ல என்றும், இந்தத் தேர்தலை அடுத்து சிறில் ரமபோஷா அமைச்சரவையில் இடம்பெறக் கூடும் என்று ஊகங்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், தென்சூடானில் ஏற்பட்டுள்ள நெருக்கடியும், ரமபோஷாவின் பயணத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது. தென்சூடானுக்கான சிறப்புத் தூதுவராகவும் சிறில் ரமபோஷா செயற்படுகிறார். அங்கு தற்போது, உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ளதுடன் இனப்படுகொலை குறித்த அச்சமும் எழுந்துள்ளது.

இந்த நிலையில், அவசரமாகத் தென்சூடான் விவகாரத்தில் சிறில் ரமபோஷா தலையிட வேண்டிய நிலை இருப்பதாலும், அவரது கொழும்புப் பயணம் தாமதமடையக் கூடும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

'ரமபோஷாவின் பயணம் தாமதமடைவது தொடர்பில் எமக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எங்களுடனான சந்திப்பில் இந்த மாத இறுதியில் (மே) அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் இலங்கை வருவதாக அவர் தெரிவித்திருந்தார். பயணத் திகதி குறித்து எதுவுமே தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை' என்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான க.சுரேஷ்பிரேமச்சந்திரன். (த-5)

### 10 இலங்கை

பேரும் சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் தனுஷ்கோடி பொலிஸார், கியூ பிரிவு மற்றும் உளவுத்துறையினர் விசாரணை மேற்கொண்டனர். இதனையடுத்து கடவுச் சீட்டு இல்லாமலும் உரிய ஆவணங்கள் இன்றியும் இந்தியாவுக்குள் நுழைந்ததாக இவர்கள் மீது வழக்கு பதிவு செய்த பொலிஸார் நேற்று இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

10 பேரிடமும் விசாரணை மேற்கொண்ட நீதிபதி சரவணகுமார் எதிர்வரும் 19ஆம் திகதி வரை அவர்களைச் சென்னை புழல் சிறையில் அடைக்க உத்தரவிட்டார். இதனையடுத்து சிறுவர்கள் உட்பட 10 பேரும் சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இலங்கை இராணுவத்தின் தொந்தரவால் உயிருக்குப் பயந்து அகதிகளாக வந்த தமிழர்களை இந்திய அரசு கடவுச் சீட்டு இல்லாமல் வந்ததாகக் கைது செய்து சிறையில் அடைத்தமைக்கு இராமநாதபுரத்தில் உள்ள தமிழ் அமைப்புக்களும், சமூக ஆர்வலர்களும் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

2 பெண்கள், 5 சிறுவர்கள் உட்படப் 10 பேர் படகு மூலம் நேற்று முன்தினம் காலை 6.30 மணியளவில் தமிழகத்தின் கரையோர மாவட்டமான தனுஷ்கோடியைச் சென்றடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு மற்றும் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

மன்னாரில் இருந்து படகில் புறப்பட்ட இந்தப் 10 பேரும் நேற்று முன்தினம் காலை தனுஷ்கோடியைச் சென்றடைந்துள்ளனர். (த-5-10)

### அகதிகளாக

தலைவர் பழ.நெடுமாறன் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

இலங்கையில் இராணுவத்தினரின் உயிர் அச்சுறுத்தலுக்குப் பயந்து 10 பேர் தமிழகத்தின் கரையோர மாவட்டமான தனுஷ்கோடிக்கு நேற்று முன்தினம் அகதிகளாகச் சென்றிருந்தனர். அகதிகளாகச் சென்ற அவர்களைக் கடவுச்சீட்டு இல்லாமல் நாட்டுக்குள் அத்துமீறிப் பிரவேசித்த குற்றச்சாட்டில் எதிர்வரும் 19 ஆம் திகதி வரையில் புழல் சிறையில் அடைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பழ.நெடுமாறன், அடைக்கலம் தேடி எம்மிடம் வந்த அகதிகளைச் சிறையில் அடைத்தது கண்டனத்துக்குரியது.

இலங்கை அரசு ஈழத் தமிழர்களை உள்ளூர் சிறைகளிலும், அகதி முகாம்களிலும் அடைத்து வைத்திருப்பதைக் கண்டித்து அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிய தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா, தமிழகத்துக்கு வந்த அகதிகளை இவ்வாறு சிறையில் அடைத்தமை மகா தவறாகும்.

அவர்களை உடனடியாக விடுதலை செய்வதற்குத் தமிழக அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(த-5)

### இளைஞர்

மையில் அம்பாந்தோட்டை மாஹம் றுகுணுபுர சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

ஐ.நா.பொதுச்சபையின் தலைவர் கலாநிதி ஜோர்ஜ் வில்லியம், ஐ.நா. செயலாளர் நாயகத்தின் இளைஞர் விவகாரத்திற்கான விசேடத் தூதுவர் அஹமட் அல்ஹந்தாவி, பன்னாட்டு இளைஞர் விவகார அமைச்சர்கள் உட்பட மேலும் பல பிரமுகர்கள் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்றனர்.

பிரதமர் டி.எம். ஜயரட்ன, இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப் பெரும உள்ளிட்ட அரச பிரமுகர்களும் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

காலை 9.30 மணிமுதல் 12.30 மணிவரை மாநாட்டு மண்டபத்தின் பிரதான வாயிலில் வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது. தமிழ் மற்றும் சிங்கள பாரம்பரியங்களுக்கமைய பிரமுகர்கள் வரவேற்கப்பட்டனர்.

பிற்பகல் 12.30 மணிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐ.நா. பொதுச்சபையின் தலைவர் ஆகியோர் வருகை தந்ததையடுத்து ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது. ஜனாதிபதி, ஐ.நா. பொதுச்சபையின் தலை வர், ஐ.நா. செயலாளரின் தூது வர் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கலை கலாசார நிகழ்வுகளும் இதன்போது இடம்பெற்றன.

சர்வதேச இளைஞர் மாநாட்டின் முதல்நாள் அமர்வு கொழும்பு பண்டாரநாயக்கா சர் வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று நடைபெறும். இதர அமர்வுகள் 8,9 ஆகிய திகதி களில் நடைபெற்று, 10 ஆம் திகதி கொழும்பு பிரகடனம் வெளியிடப்படும். (த)

# மயிலங்காடு ஞானமுருகன் வலி.தெற்குச் சம்பியனானது

வலி. வடக்கு, மே 7

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஏழாலை மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் பிரதேச சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.



விருந்தினர் வெற்றி பெற்ற அணிக்கு வெற்றிக் கிண்ணம் வழங்குகிறார்

உடுவில் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நாள் நிகழ்வுகளும் பரிசளிப்பு நிகழ்வும் சுன்னாகம் ஸ்கந்த வரோதயக் கல்லூரி மைதானத்தில் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இடம்பெற்ற போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஏழாலை மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

சேறும் சகதியுமாக காணப்பட்ட மைதானத்தில் பலத்த சிரமத்தின் மத்தியில் முதலாவது கோலை ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்ட நிலையில முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் வீரர்கள் சளைக்காது விளையாடி மீண்டும் ஒரு கோலைப் பெற்ற ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் முன்னணியில் காணப்பட்டது.

போட்டி முடிவடைய மூன்று நிமிடங்கள் இருக்கையில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் ஒரு கோலைப் பெற்றுக் கொண்டது. இந்நிலையில் இரண்டாம் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் 02:01 என்ற கோல் கணக்கில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகத்தை வென்று பிரதேச சம்பியனாகியது. (கு-86)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 7

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'வடக்கின் சுப்பர் கிங்' உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் லீக் முறையிலான 2 ஆம் சுற்று ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(கு-23)

* * *

யாழ்ப்பாணம், மே 7

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் அரியாலை சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தும் வட மாகாண ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது.

இரவு 8.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது.

இரவு 9.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மட்டுவில் விநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

(கு-23)

## முருங்கன் ம.வியை வீழ்த்தி மன்னார் சென்.சேவியர் சம்பியன்

யாழ்ப்பாணம், மே 7

மன்னார் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரின் இறுதியாட்டம் கடந்த வாரம் அடம்பன் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் முருங்கன் மகா வித்தியாலய அணியை எதிர்த்து மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி அணி களமிறங்கியது.

அதில் மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவானது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் அரிப்பு றோ.க.த.பாடசாலை அணியை எதிர்த்து பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியாலய அணி மோதியது.

அதில் அரிப்பு றோ.க.த. பாடசாலை அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது.

(ற-23)

# மாகாண மட்ட விளையாட்டு முதல்முறை முல்லைத்தீவில்

வலி. வடக்கு, மே 7

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் விளையாட்டுப் பிரிவின் மாகாண மட்டத்திலான பெரு விளையாட்டுப் போட்டிகளில் இரண்டாம் கட்டப் போட்டிகள் இந்த மாதம் 20 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதிவரை முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

முதல் தடவையாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலைகள் மட்டத்திலான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடை பெறவுள்ள போட்டிகளின் விவரம் வருமாறு:-

20ஆம், 21 ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு மத்திய மகா வித்தியாலய மைதானம் மற்றும் புதுக்குடியிருப்பு பொது விளையாட்டு மைதானம் என்பவற்றில் ஆண்கள், பெண்களுக்கான எல்லே போட்டிகள் நடைபெறவுள்ளன.

22ஆம், 23 ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் ஆண்கள், பெண்களுக்கான எறிபந்துப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

24ஆம், 25 ஆம் திகதிகளில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில 15, 17, 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

25ஆம், 26 ஆம் திகதிகளில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் 15,17,19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

27ஆம், 28 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் 15, 19 வயதுப் பிரிவினருக்கான ஆண்கள், பெண்களுக்கான கபடிப் போட்டிகள் நடை பெறவுள்ளதாக வட மாகாண கல்வி அமைச்சின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(கு-86-23)

# வவுனியா பாடசாலைகளின் விளையாட்டுக்கு நிதியுதவி

வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்று வரும் விளையாட்டுப் போட்டிகளுக்கான செலவினங்களை ஈடு செய்யும் முகமாக வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தினரால் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தின் தலைவர் தேசமான்ய சு.குமாரசாமி, செயலாளர் கு.சஜிக்குமார் ஆகியோரால் வவுனியா தெற்கு கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் தவரட்ணம் ஆகியோரிடம் வழங்கப்பட்டது.

(கு-23)



மக்கள் ஒன்றியத் தலைவர் காசோலை வழங்குகிறார்

# புத்தூர் கலைமதி - ஆவரங்கால் இந்து கரப்பந்து இறுதியாட்டத்தில் மோதல்

**முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.**

யாழ்ப்பாணம், மே 7

கெருடாவில் சிறிமுருகன் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் கடந்த வியாழக்கிழமை கெருடாவில் சிறிமுருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்றன.

முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட அரையிறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. இறுதியாட்டம் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது. (கு-23)

# மகாஜனவின் அனித்தா, அருணோதயவின் ஜோசப் தேசிய கோலூன்றிப் பாய்தலில் புதிய சாதனை

யாழ்ப்பாணம், மே 7

இலங்கை மெய்வன்மைச் சங்கம் நடத்தும் 57 ஆவது தேசிய கனிஷ்ட மெய்வன்மைப் போட்டியில் யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திப் பங்கு கொண்ட தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி மாணவி அனித்தா, அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவன் க.நெப்தலி ஜோசப் ஆகியோர் கோலூன்றிப் பாய்தலில் புதிய சாதனை நிலைநாட்டியுள்ளனர்.

கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கில் நடைபெற்று வரும் 57 ஆவது தேசிய கனிஷ்ட மெய்வன்மைப் போட்டியில் 18 வயதுப் பிரிவுப் பெண் களுக்கான கோலூன்றிப் பாய்தலில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி அனித்தா, முன்னைய சாதனையான 2.95 மீற்றர் உயரத்தை முறியடித்து 3 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து புதியசாதனை நிலை நாட்டியதுடன் முதலாம் இடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தையும் வென்றுள்ளார்.

இதேவேளை, 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயக்கல்லூரி மாணவன் க.நெப்தலி ஜோசப் முன்னைய சாதனையான 3.85 மீற்றர் உயரத்தை முறியடித்து 3.96 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து புதிய சாதனை நிலைநாட்டியதுடன் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும் வென்றுள்ளார்.

20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி மாணவர்களான நிரோந், அன்ரனி பிரசாந் ஆகியோர் 3.90 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து முதலாமிடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளனர்.

அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவன் பா.நிதுர்ஷன் 2.90 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

23 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டில் மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த ப.டினுஷன் 3.70 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கம் வென்றார்.

இதேவேளை 23 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி அ.பவித்திரா 3 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் பழைய மாணவியும் இலங்கைக் கடற்படை மெய்வன்மை அணியின் வீராங்கனையுமானஆர்.ஙேரி 23 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோல்லூன்றிப் பாய்தல் 2.90 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து 2 ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கம் பெற்றார் (கு-23-86)

## கோஹ்லியின் பாராட்டு





ஹைதராபாத் அணிக்கெதிரான ஆட்டத்தில் அதிரடி காட்டிய டிவில்லியர்ஸ், உலகின் தலைசிறந்த துடுப்பாட்டக்காரர் என பெங்களூர் அணித் தலைவர் விராட் கோஹ்லி புகழாரம் சூட்டியுள்ளார்.
ஐ.பி.எல். போட்டிகளில் பெங்களூரில் நடந்த ஆட்டத்தில் டிவில்லியர்ஸின் அதிரடியால் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணியை வீழ்த்தி 3 ஆவது வெற்றியைப் பெற்றது.
டிவில்லியர்ஸ் தனது அதிரடியின் மூலம் பெங்களூர் அணியை வெற்றி பெற வைத்தார். இது பற்றி பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் தலைவர் விராட் கோஹ்லி கூறுகையில், டிவில்லியர்ஸ் தாம் உலகின் சிறந்த துடுப்பாட்டக்காரர் என்பதை இப்போதும் நிரூபித்து இருக்கிறார்.
ஆட்டத்தில் யாராவது ஒருவர் அடித்து ஆட வேண்டியது எங்களுக்கு அவசிய மானதாக இருந்தது. 20/20 போட்டியில் நான் பார்த்ததில் இது தான் சிறந்த இன்னிங்ஸ் ஆகும். கெய்ல் நல்ல தொடக்கத்தைக் கொடுத்தார். டிவில்லியர்ஸ் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் ஆட்டத்தை எதிரணியின் கட்டுப்பாட்டில் இருந்து பறித்து அணியை வெற்றி பெறச் செய்தார் என்று கூறியுள்ளார். (கு)

## முன்னேற்றம் வேண்டும்




சென்னை அணி துடுப்பாட்டத்தில் சிறந்து விளங்கினாலும், பந்து வீச்சில் முன்னேற்றம் தேவைப்படுவதாக அணித் தலைவர் டோனி கருத்து வெளியிட்டுள்ளார்.
ஐ.பி.எல். போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி டெல்லியை வீழ்த்தி தொடர்ந்து 6 ஆவது வெற்றியைப் பெற்றது.
வெற்றி குறித்து சென்னை அணியின் அணித்தலைவர் டோனி கூறுகையில், நாங்கள் மிகவும் சிறப்பாக விளையாடி வருகிறோம். ஆட்டத்தின் கடைசி 2 அல்லது 3 பந்துப்பரிமாற்றங்களில் ஓட்டங்களை அதிகமாகக் கொடுத்து விட்டோம்.
எங்களது பந்து வீச்சில் முன்னேற்றம் தேவை. கடைசிப் பந்துப் பரிமாற்றங்களில் வீசக்கூடிய சிறந்த வேகப்பந்து வீரர்கள் அணிக்கு தேவைப்படுகின்றனர். சிமித்தும், மக்கலமும் சிறந்த தொடக்கத்தைக் கொடுத்தனர்.
சிமித்தின் ஆட்டம் அதிரடியாக இருந்தது. ரெய்னா இதைச் சரியாகப் பயன்படுத்தி கடைசி வரை சிறப்பாக விளையாடினார் என்று கூறியுள்ளார். (கு)




## டைசன் கேய்க்கு ஒரு வருடத் தடை

அமெரிக்க தடகள வீரர் டைசன் கேய்க்கு அந்நாட்டு ஊக்கமருந்து தடுப்பு அமைப்பு ஓராண்டு காலத் தடை விதித்துள்ளது.
அமெரிக்க ஊக்கமருந்து தடுப்பு அமைப்பு மற்றும் சர்வதேச தடகள சம்மேளனம் ஆகியவை 31 வயதாகும் டைசனிடம் போட்டிகள் இல்லாத நேரத்தில் இரு முறையும், போட்டி நடைபெற்றபோது ஒரு முறையும் சிறுநீர் மாதிரிகளைச் சேகரித்தன. அதில் அவர் ஸ்பிரிங்ஸ் ஊக்கமருந்து பயன்படுத்தியமை கண்டு பிடிக்கப்பட்டது.
இதையடுத்து அவர் 2012இல் லண்டன் ஒலிம்பிக் போட்டியில் வென்ற வெள்ளிப் பதக்கத்தை திரும்ப ஒப்படைத்தார்.
டைசன் கேய் தனக்கு விதிக்கப்பட்ட ஓராண்டு காலத் தடையை ஏற்றுக் கொண்டுள்ளார். கடந்த ஆண்டு ஜூன் 23ஆம் திகதி இடம்பெற்ற அமெரிக்க அவுட்டோர் தடகளப் போட்டியின்போது அவரிடம் இருந்து சிறுநீர் மாதிரி சேகரிக்கப்பட்டுள்ளது.
அப்போதிருந்து அவருக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டிருந்தது. அந்தத் திகதியில் இருந்து இந்த ஓர் ஆண்டு காலத் தடை கணக்கில் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ள தால் எதிர்வரும் 22ஆம் திகதியோடு அவர் மீதான தடை முடிவுக்கு வந்து விடும். இதுதவிர 2012 ஜூலை 15இல் முதல்முறையாக அவர் ஊக்க மருந்தைப் பயன்படுத்தியுள்ளார். அதனால் அந்தத் திகதியில் இருந்து அவர் வென்ற பதக்கங்கள் அனைத்தும் பறிக்கப் பட்டுள்ளன. இதனால் 2012 ஒலிம்பிக்கில் 4X100 மீ. ஓட்டத்தில் அவர் வென்ற வெள்ளிப் பதக்கத்தையும் இழந்துள்ளார். அந்தப் பதக்கத்தை அவர் அமெரிக்க ஒலிம்பிக் கமிட்டியிடம் ஒப்படைத்துள்ளார்.
இதேபோல் லண்டன் ஒலிம்பிக்கில் 100 மீ. ஓட்டத்தில் தாம் கைப்பற்றிய 4ஆவது இடத்தையும் இழந்துள்ளார். அதில் அவர் 9.80 விநாடிகளில் இலக்கை எட்டியிருந்தார். அதுதான் ஒலிம்பிக் வரலாற்றில் பதக்கம் வெல்லாத ஒரு வீரரின் அதிகபட்ச வேகமாக இருந்தது.
டைசன் மீதான ஊக்கமருந்து விவகாரம் கடந்த ஆண்டு வெளியானது முதலே உலக தடகள சம்பியன்ஷிப் உள்ளிட்ட அனைத்து போட்டிகளிலிருந்தும் விலகிய அவர், ஊக்கமருந்து தடுப்பு அமைப்புக்குழுவுடன் ஒத்துழைப்பதாக தெரிவித்திருந்தார். அவர் முழு ஒத்துழைப்பு அளித்ததன் காரணமாக குறைந்தபட்ச தண்டனையாக ஓராண்டு கால தடை விதிக்கப்பட்டது. இல்லையெனில் அவருக்கு இரண்டு ஆண்டுகள் தடைவிதிக்கப்பட்டிருக்கும். (கு)

## ஜோகோவிக் விலகினார்

நொவாக் ஜோகோவிக், மட்ரிட் மாஸ்டேர்ஸ் ரென்னிஸ் தொடரில் இருந்து உபாதை காரணமாக விலகியுள்ளார்.
உலக தரப்படுத்தல்களில் இரண்டாமிடத்தில் இருக்கும் இவருக்கு வலது கையில் ஏற்பட்டுள்ள உபாதை பூரண குணமடையாததன் காரணமாக அவர் குறித்த தொடரில் இருந்து விலகியுள்ளார்.
ஏற்கனவே மொன்டி கார்லோ தொடரின் அரை இறுதிப் போட்டியில் இந்த உபாதையுடன் விளையாடி தோல்வியைச் சந்தித்து இருந்தார் ஜோகோவிக்.
தான் இந்தத் தொடரில் விளையாடக் கூடிய வகையில் சகல தயார்ப்படுத்தல்களையும் செய்து இருந்த போதும் விளையாட முடியாமல் போய்விட்டது. ஆனாலும் ரோம் ரென்னிஸ் தொடரில் விளையாடுவேன் என ஜோகோவிக் நம்பிக்கை தெரிவித்துள்ளார். ரோம் ரென்னிஸ் தொடர் மே மாதம் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (கு)

## முதலிடத்தில் கோஹ்லி



ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியின் தரவரிசையில் இந்திய அணியின் அதிரடி வீரர் விராட் கோஹ்லி தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளார்.
சர்வதேச ஒருநாள் போட்டிகளில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை டுபாயில் வெளியிட்டது.
இந்தியாவின் விராட் கோஹ்லி 81 புள்ளிகளுடன் முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டார். தென்னாபிரிக்க வீரர் டிவில்லியர்ஸ் 872 புள்ளிகள் பெற்று 2ஆவது இடத்திலும், ஆஸ்திரேலிய வீரர் பெய்லி 3ஆவது இடத்திலும் உள்ளனர்.
இந்திய அணியின் அணித்தலைவர் டோனி 6ஆவது இடத்திலும், தவான் 8ஆவது இடத்திலும் உள்ளனர்.
பந்துவீச்சில் பாகிஸ்தான் அணியின் சயீத்அஜ்மல் முதல் இடத்தில் உள்ளார். தென்னாபிரிக்காவின் ஸ்ரெய்ன், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சுனில் நரைன் முறையே 2ஆவது மற்றும் 3ஆவது இடத்தில் உள்ளனர். (கு)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### இலங்கைத்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் பல்வேறு நாடுகளுக்கும் கடந்த ஒரு மாத காலத்துக்குள் பல புதிய தூதுவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் எதிர்வரும் மாதங்களில் தாம் நியமிக்கப்பட்டுள்ள புதிய நாடுகளுக்குச் சென்று பதவியேற்கவுள்ளனர்.
இதற்கு முன்னதாக வடக்கு-கிழக்குப் பகுதியில் போரின் பின்னர் இலங்கை அரசு மேற்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை அவர்கள் பார்வையிடவுள்ளனர். இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பார்வையிட்டு அவை தொடர்பில் தாம் செல்லும் நாடுகளுக்கு அவர்கள் விளக்கமளிக்கவுள்ளனர்.
இதற்காக யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் அவர்கள் சென்று பார்வையிடவுள்ளனர். யாழ்.போதனா வைத்திய சாலை, பொதுநூலகம், கோட்டை, நல்லூர் கோயில் மற்றும் இந்திய அரசினால் அரியாலையில் அமைத்துக் கொடுக்கப்பட்ட இந்திய வீட்டுத் திட்டம் ஆகியவற்றையும் இவர்கள் பார்வையிடவுள்ளனர்.
யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் பார்வையிட்ட பின்னர் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் செல்லவுள்ளனர். அதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்துக்குச் சென்று அங்கு மேற்கொள்ளப் பட்டுள்ள அபிவிருத்தி வேலைகளையும் பார்வையிடவுள்ளனர். (கு-5)

### பொருளாதார

தெரிவிக்கின்றன.
வடக்கின் துரித மீட்சித் திட்டம் மற்றும் வடக்கின் மீள் எழுச்சித் திட்டம் என்ற பெயரில் உலக வங்கி உள்ளிட்ட வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட நிதியைக் கொண்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மேற்படி விசேட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன.
வடக்கின் துரித மீட்சித் திட்டம் கடந்த 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தினூடாக ஆயிரத்து 366 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.
ஊரக வீதிகள் 22 திட்டங்களின் கீழ் செயற்படுத்துவதற்கு 552.08 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. அதில் 2 திட்டங்கள் தவிர்ந்த ஏனையவை யாவும் செயற்படுத்தி முடிக்கப்பட்டுள்ளன. நீர் விநியோகத் திட்டம் 2 செயற்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக 274.39 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
கூட்டுறவுத் துறையின் பல்வேறு கட்டடங்கள் அமைப்பதற்காக 15 திட்டங்களுக்கு 68.42 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பயன்படுத்தி முடிக்கப்பட்டுள்ளது. கமநல சேவை நிலையங்கள் 3 அமைப்பதற்காக 26.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து பயன்படுத்தி முடிக்கப்பட்டுள்ளது.
பாடசாலைகளின் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு 43 பாடசாலைகள் தேர்வு செய்யப்பட்டு 236.98 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அவை புனரமைக்கப்பட்டுள்ளன. சுகாதார திணைக்களத்தினூடாக வைத்தியசாலை கள் புனரமைப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் 20 திட்டங்களாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக 167.79 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.
பொதுமக்கள் கட்டடங்கள் 27 அமைப்பதற்கு 253.3 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. பொதுச் சந்தைகள் 5 அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் மீள்குடியேறிய மக்கள் தமது வாழ்விடங்களை துப்புரவு செய்வதற்கும் அவற்றை அகற்றுவதற்காக 14 திட்டங்களின் கீழ் 44.99 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (கு-5)

07 MAY 2014

# சர்மா, ஹர்பஜன் கலக்கல் மும்பை இந்தியன்ஸ் வெற்றி



துடுப்பாட்ட வீரர்கள், பந்து வீச்சாளர்கள் ஆகியோரது கூட்டு முயற்சியால் 19 ஓட்டங்களால் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியைத் தோற்கடித்து இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தது மும்பை இந்தியன்ஸ் அணி. அணித் தலைவர் றோகித் சர்மா மற்றும் கெரன் பொலார்ட் ஆகியோரின் அதிரடியான துடுப்பாட்டத்தின் உதவியுடன் 20 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 187 ஓட்டங்களைக் குவிந்தது மும்பை இந்தியன்ஸ் அணி.

ஏழாவது ஐ.பி.எல். தொடரின் இரண்டாம் கட்டப் போட்டிகள் இந்தியாவில் இடம்பெற்று வருகின்றன. அதில் நேற்று மும்பை வன்கடே மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியும் - பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதனை அடுத்து பென் டங் - கௌதம் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கியது. ஆரம்பத்திலிருந்து அதிரடி காட்டிய இந்த ஜோடியை 3 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் பிரித்தார் ஹர்ஷல் பட்டேல். பென் டங் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து களம் புகுந்த அம்பதி ராயுடு 69 ஓட்டங்களுடன் வெளியேற கௌதமுடன் இணைந்தார் தலைவர் றோகித் சர்மா. அவர் வந்ததும் 30 ஓட்டங்களுடன் கௌதம் நடையைக் கட்ட, தொடர்ந்து வந்த அன்டர்சனும் 6 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார்.

இதனை அடுத்து 5 ஆவது இலக்குக்காக சர்மாவுடன் இணைந்த பொலார்ட், இருவரும் இணைந்து பெங்களூர் பந்து வீச்சை துவம்சம் செய்தனர்.

இருவரும் இணைந்து 91 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்ற வேளை 31 பந்துகளில் 43 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொலார்ட் "ரன் அவுட்" முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இறுதியில் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றது. றோகித் சர்மா இறுதி வரை ஆட்டமிழக்காது3 நான்கு ஓட்டங்கள், 4 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 59 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் அசோக் டிண்டா, ஹர்ஷா பட்டேல், வருன் ஆரோன், ஷிகால் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

188 என்ற கடின இலக்குகளுடன் களமிறங்கிய பெங்களூர் அணிக்கு ஆரம்பத்துப்பாட்ட வீரர்களாக பார்த்தீவ் பட்டேல், கிறிஸ் கெய்ல் ஜோடி நல்லதொரு அடித்தளத்தை இட்டுக் கொடுத்தது. இந்த ஜோடி இணைப்பாட்டமாக 6 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 53 ஓட்டங்கள் பெற்றிருந்த போது பார்த்தில் பட்டேல் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

தொடர்ந்து களமிறங்கிய விராட் ஹோக்லி கெயிலுடன் இணைந்து ஓட்டங்களைக் குவித்து வந்த வேளை கெய்ல் 24 பந்துகளில் 3 நான்கு ஓட்டங்கள் 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். டி- வில்லியர்ஸ் (6) ஹோக்லி (35) இருவரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேற பெங்ளூரின் வெற்றி கேள்விக்குறியாக மும்பை இந்தியன்ஸ் வீரர்கள் உற்சாகமடைந்தனர்.. இவர்களுடைய உற்சாகத்துக்குத் தடை போட்டு பெங்களூர் அணியை வெற்றி பெறச் செய்யும் நோக்கில் இறுதி நேரத்தில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய றிலி ரொஸ் சோவ் 14 பந்துகளில் 24 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க பெங்களூர் அணியின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இறுதியில் 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்று 19 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது பெங்களூர் அணி.

பந்து வீச்சில் ஹர்பஜன் சிங், லசித் மலிங்க, யஸ்ப்றிர் பம்கா ஆகியோர் தலா 2 இலக்குகளையும் பவுண் சுயல் ஓர் இலக்கையும் கைப்பற்றினா.ர் .போட்டியின் ஆட்டநாயகனாக றோகித் சர்மா தெரிவு செய்யப்பட்டார். (400)




**IELTS** A1 B1 B2

MBA(London) Qualified Trainer Call: 0213208342

Visit: http://edu.kugroup.info/ielts

0777302882 IELTS Centre@KU

தனிப்பட்ட முறையில்.உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய.அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் 16 வருட அனுபவமுள்ள ஒரே கல்வி நிறுவனம்.

K.U Education,No 626 1/1,K.K.S Rd,Jaffna

**FREE** ஆங்கிலம் கற்க இலவச வாய்ப்பு!

இன்னும் இரண்டு தினங்கள் மட்டுமே சலுகை விலையில் பதிவுக்கட்டணம்.

UNIT ONE முற்றிலும் இலவசம்

பிரிட்டிஷ் கவுன்சிலின் பாடத்திட்டம்

மல்ரி மீடியா வசதியுள்ள வகுப்பறை

ஆன்லைனில் நேரடி செய்முறைகள்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்

51/3,(பொற்பதிப் பிள்ளையார் கோவிலருகில்) பொற்பதி வீதி,கொக்குவில்.

தொடர்பு: 0779866409 / 0758567447

ALISON DIGILITE

Supported by YES! Suvadi



மேலும் ஒரு மகத்தான சாதனை

## ஆறு நாள்களில் ஐரோப்பிய நாடுகளிற்கான செங்கன் விசா கிடைத்தது

எமது பரிபூரண சட்ட வழிகாட்டலில் J/269 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மாசிவன் சந்தி நீர்வேலி வடக்கு, நீர்வேலி என்கின்ற வதிவிட முகவரியாகக் கொண்ட எஸ்.சிவகுமார் ஆறே நாள்களில் செங்கன் விசா வென்றுள்ளார்.

இது எமது சட்ட ஆளுமையையும், இத்துறையில் 3 வருடங்களில் எம் வளர்ச்சியையும் வெளிப்படுத்தி நிற்கின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

திசைகாட்டி (பிறைவேற்)லிமிற்

175, பருத்தித்துறை வீதி,

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

021 221 9016, 021 568 9090







அரியாலை சரஸ்வதி நிலையத்தின் 95 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் முன்னோடி விளையாட்டுப் போட்டிகள்

* அமரர்களான சுப்பிரமணியம்- கௌசிகன். சுப்பிரமணியம்- இதயராஜ் ஆகியோரின் ஞாபகார்த்தமாக வடமாகாண ரீதியிலான மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

Ariyalai Saraswathy Premier Knockout - 03

ASPK -03

மேற்படி போட்டியானது இம்முறை யாழ்.மாவட்டத்தின் அனைத்து பிரதேச அணிகளையும் உள்வாங்கும் உயரிய நோக்கோடு 05 பிரதான இடங்களில் நடத்தப்பட்டு இறுதிச் சுற்றுக்கு 05 பிரதேசங்களிலுமிருந்து தலா 02 அணிகள் தெரிவு செய்யப்பட்டு அரியாலையில் போட்டிகள் இடம்பெறும். அதற்கமைவாக:-

வடமராட்சி - மாலுசந்தி மைக்கல் விளையாட்டு மைதானம்
தொடர்புகளுக்கு - 077 8075 338, 077 3095745

தென்மராட்சி - மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானம்
தொடர்புகளுக்கு - 0777 110445, 077 3095745

வலிகாமம் - காந்தி நியூஸ்ரார் விளையாட்டு மைதானம்
தொடர்புகளுக்கு - 077 0538126, 077 3095745

தீவகம் - வேலணை விளையாட்டு மைதானம்
தொடர்புகளுக்கு - 077 1107212, 077 3095745

யாழ்ப்பாணம் - யா/ கனகரத்தினம் ம.ம.வி. மைதானம்
தொடர்புகளுக்கு 07777 82192, 077 3095745

Over all Champions - வெற்றிக் கிண்ணம் + 20 000
Runner Up - வெற்றிக் கிண்ணம் + 10 000
1st Runner Up- வெற்றிக் கிண்ணம் + 5 000

இவை தவிர வீரர்கள் மற்றும் அணிகளுக்கு சிறப்பு பரிசில்களும் காத்திருக்கின்றன.

*யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் மாபெரும் தாச்சிப் போட்டி -
தொடர்புகளுக்கு - 077 3095745, 0777782192

*யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் Setup முறையான சுற்றுப் போட்டி (வடமாகாண ரீதியில்)

அணிகள் A, B என தரம் பிரிக்கப்பட்டே போட்டிகள் அனைத்தும் இடம்பெறும்.

தொடர்புகளுக்கு- 077 6176988, 07777 82192

*வடமாகாண ரீதியிலான மாபெரும் கயிறு இழுத்தல் போட்டி

தொடர்புகளுக்கு - 07777 82192, 077 3095745

விண்ணப்ப முடிவுத் திகதி:- 2014 -05 -13

விளையாட்டுக்குழு
அரியாலை சரஸ்வதி ச.ச. நிலையம்



மாதம் ஒரு லட்சத்துக்கு மேல் வருமானம் ஈட்டக் கூடிய

பயிற்சி நெறி

**HND in PHARMACY**

வயதெல்லை கிடையாது.

பகுதிநேரமாகப் படிக்கலாம்.

LAVA HOSPITALS

120, Temple Road, Jaffna.

(Tel : 077 316 4617/021 222 4333)

(47172) (7.5.3)



## புதிய வீடு விற்பனைக்கு

அழகிய ரம்மியமான சூழலில் குடியேற ஆசையா? உங்களுக்காகவே விளையாட்டரங்க வீதி,கல்வியங்காட்டில் அதிகமான உத்தியோகத்தர்கள் குடியிருக்கும் அமைதியான சூழலில் இரண்டு பக்க சுற்று மதில், கிணறுடன் 3 பரப்பு விஸ்தீரணம் கொண்ட காணியில், நான்கு அறைகளுடன் சமையலறை மற்றும் இணைப்பு குளியலறையுடன் கூடிய முழுமையாக மாபிள் பதிக்கப்பட்ட அழகிய புத்தம் புதிய வீடு விற்பனைக்கு.

இடைத் தரகர் தேவையில்லை.

மனையை பார்வையிட

காலை 09.00 - மாலை 6.00 மணி வரை



மேலதிக தொடர்புக்கு -

0771516013

0775492456

pthayaruban@gmail.com





## ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம் veta

Experts in English Training



யாழில் பல்கலைக்கழக, தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் 5000க்கு மேற்பட்டோர் தெரிவு செய்து வெற்றி பெற்று நிரூபிக்கப்பட்ட

**Spoken English** புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| Sat, Sun 8.30 a.m. | Mon, Fri 3.30 p.m. | Mon, Wed, 9.30 a.m. | Sat, Sun 8.00 a.m. |
| Tue, Thu 9.30 a.m. | Tue,Thu 8.30 a.m. | Sat, sun, 2.30 p.m. | Tue,Thu 3.00 p.m. |

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

DMI COMPUTER EDUCATION

A1-Exam B1-Exam திருமணம் செய்து நிரந்தர விசாவில் UK செல்பவர்களுக்கானது.

City & Guilds Approved Centre

IELTS •Unique Test Tips •Latest course Materials

**DMI INTERNATIONAL ENGLISH COLLEGE**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113. கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403 | M.M.V வீதி. (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | கே.கே.எஸ். வீதி, No 130, (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970 |


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


நம்மை நாமே வெறுக்காமலிருப்பது நமது முதற்கடமை யாகும். முன்னேற்ற மடைவதற்கு முதலில் சுயநம்பிக்கை அவசியம்
-சுவாமி விவேகானந்தர்

புதன் பொய்கை A

உதயன் | மே 07 2014 | புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு


# இயற்கையோடு ஒன்றிணைவோம்

ராஜராஜன்



இயற்கையோடு ஒன்றிணைந்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என்பதை மனிதர்கள் இப்போது புரிந்து கொண்டிருப்பார்கள். விஞ்ஞானத்தின் மூலமாக எதையும் சாதித்துவிட முடியுமென்ற அவர்களின் நினைப்பு மெல்ல மெல்லப் பலவீனமடைந்து வருவதை அன்றாடம் காண முடிகின்றது. இதற்கு ஆதாரமாக விஞ்ஞான வளர்ச்சியில் உச்சக் கட்டத்தில் உள்ள அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றங்களையும் அதனால் ஏற்பட்ட பாதிப்புக்களையும் எடுத்துக் கூற முடியும்.

இந்தப் பிரபஞ்சம் முழுவதும் இயற்கையின் ஆளுகைக்கு உட்பட்டது. இங்கு காணப்படும் அனைத்தும் இயற்கையின் தயவினால் உருவானவையே. மனிதர்கள் உருவாவதற்குப் பல கோடி ஆண்டுகளுக்கு முன்னரே இயற்கையின் சாம்ராச்சியம் விரிந்து பரந்து செயற்பட ஆரம்பித்து விட்டது.

மழை, வெயில், காற்று, நீர் என்பன இயற்கை அன்னையின் அருட்கொடைகள். இவை இல்லாது எந்த உயிரும் வாழ முடியாது. ஆறுகள், கடல்கள், காடுகள் என்பன நாம் வாழும் பூமியின் இயக்கத்துக்கு அடிநாதமாக விளங்குகின்றன. அதிலும் பூமியின் மூன்றில் இரண்டு பங்கு நீராகவும், மூன்றில் ஒரு பங்கு காடுகளாகவும் இருக்க வேண்டுமென்பதை நிர்ணயம் செய்ததும் இயற்கையே தான். கடந்த நூற்றாண்டு வரை இந்த உலகம் முழுவதும் இயற்கையின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருந்ததால் அது சீற்றமடைவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகளவில் ஏற்படவில்லை. எல்லாமே ஒழுங்காக இடம்பெற்று வந்தன. ஆனால் இன்றோ எல்லாமே தலைகீழாக மாறிக் காணப்படுகின்றன.

ஆதி மனிதர்கள் இயற்கையை ஒரு போதுமே பகைத்துக் கொண்டதில்லை. அதன்மீது மிகுந்த பயபக்தியுள்ளவர்களாக அவர்கள் காணப்பட்டனர். இயற்கையையே தமது தெய்வமாகக் கூட அவர்கள் வழிபட்டனர். இதனால் தான் கல், நெருப்பு, மரங்கள் என்பன கூட இவர்களின் வழிபாட்டுக்கு உகந்தவையாகத் திகழ்ந்தன. அந்த மனிதர்கள் பாசாங்குத்தனமாகத் தமது வழிபாடுகளை இயற்றவில்லை. மனப்பூர்வமாகவே இதில் ஈடுபட்டனர். இயற்கை அன்னையும் மனம் குளிர இவர்களை அரவணைத்துக் கொண்டாள்.

ஆனால் நாள்கள் செல்லச் செல்ல மனிதர்கள் மாறத் தொடங்கினர். தம்மால் எதனையும் செய்து காட்ட முடியும் என்ற ஆணவம் அவர்களின் மனங்களில் குடிகொள்ளத் தொடங்கின. இதனால் இயற்கையின் மீதிருந்த பற்று மட்டுமல்ல, பயமும் அவர்களை விட்டு நீங்கி விட்டன என்றுதான் கூற வேண்டும். மேலும் மூட நம்பிக்கை, ஏற்றுக் கொள்ள முடியாததும் பகுத்தறிவு இல்லாததுமான செயல்கள் இவையெனச் சிலர் பரப்புரைகளை மேற்கொண்டு வந்ததால் பழைய சிந்தனைகள் மெல்ல மெல்ல மறைய ஆரம்பித்தன. இதில் விஞ்ஞானத்தின் வளர்ச்சியும் சேர்ந்து கொண்டதால் மனிதர்கள் இயற்கையின் பக்கமிருந்து மெல்ல மெல்ல விலக ஆரம்பித்தனர்.

இந்த உலகை நவக்கிரகங்கள் ஆட்சி புரிவதாக அப்போது மட்டுமல்ல இப்போதும் கூறப்படுகின்றது. இந்த நவக் கிரகங்களாக சூரியன், சந்திரன், வியாழன், வெள்ளி, சனி, புதன், செவ்வாய், ராகு, கேது என்பன உள்ளன. ஒவ்வொரு உயிரின் உயிரணுக்களிலும் இந்த நவக் கிரகங்கள் கலந்து நின்று அதன் செயற்பாட்டுக்கு உறுதுணை புரிவதாகக் கூறுவார்கள். இன்று மனிதர்கள் இவற்றின் மீதே தமது ஆதிக்கத்தை நிலைநாட்டத் துணிந்து விட்டனர். அறுபதுகளில் முதலாவது மனிதன் நிலவில் காலடி எடுத்து வைத்ததாகக் கூறப்பட்டது. இதனைப் பொய்யென மறுப்போரும் இல்லாமல் இல்லை. விஞ்ஞான சாதனங் களின் உதவியுடன் அமெரிக்கர்கள் இவ்வாறானதொரு நாடகத்தை நடித்துக் காட்டியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எது எப்படியோ மனிதர்கள் நிலவில் காலடி எடுத்து வைத்துச் சுமார் நாற்பது ஆண்டுகள் ஆகின்ற போதிலும், அதனால் பயன் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. பெரும் பொருட் செலவில் நிலவுப் பயணத்துக்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இந்த நிதியைக் கொண்டு பல மில்லியன் மக்களின் பசிப் பிணியைப் போக்க முடியுமென வாதிடுவோரும் இல்லாமல் இல்லை. உண்மையைக் கூற வேண்டுமென்றால் அமெரிக்கர்களின் நிலவுப் பயணம் இயற்கையை உரசிப் பார்க்கும் ஒரு செயல் என்பதற்கு அப்பால் உருப்படியான பலன் எதனையும்கொடுக்கவில்லைஎன்பதேஉண்மையாகும். தற்போது நவக்கிரகங்களில் ஒன்றான செவ்வாயில் மனிதர்களைக் குடியேற்றப் போவதாகக் கூறுகின்றார்கள். இதற்கும் பெருமளவு நிதி செலவழிக்கப்படுகின்றது. இந்தத் திட்டமும் எந்த அளவுக்குச் சாத்தியமா கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இன்று மரங்கள் வகை தொகையின்றி வெட்டி வீழ்த்தப்படுகின்றமை மிகப்பெரிய அளவில் தீமை விளைவிக்கக் கூடியது. இயற்கை அன்னையின் அரிய படைப்புக்களில் மரங்கள் முக்கியமானவை. அவை உயிரினங்கள் உயிர் வாழ்வதற்குத் தேவையான உயிர் வாயுக்களை அளிப்பதோடு வெளியேற்றப்படும் தீமையான வாயுக்களை உள்வாங்கி உதவுகின்றன. மேலும் உரிய பருவத்தில் மழை பெய்வதற்கும் இந்த மரங்களே முக்கிய பங்கு வகிக்கின்றன. மண் அரிப்பைத் தடுத்துப் பூமியைப் பாதுகாப்பதோடு இயற்கைச் சீற்றங்களின் போது அரண்போன்று செயற்பட்டு சேதங்கள் குறைவதற்கு வழி வகுக்கின்றன. மேலும் விலங்குகள் வாழ்வதற்குரிய இடமாக மரங்களால் ஆன காடுகள் விளங்குகின்றன. இதனால் தான் பண்டைய மன்னர்கள் காடுகளைப் பேணுவதில் அதிக அக்கறை காட்டினர்.

ஆனால் இன்றுள்ள மனிதர்கள் காற்று, நீர் ஆகியவற்றை மாசடையச் செய்து அதன் காரணமாகவே தமது உயிர்களுக்கு உலை வைத்துக் கொள்கின்றனர். மனிதர்களின் தவறான போக்கு காரணமாகவே தற்போது இயற்கை அடிக்கடி சீற்றமுறுகின்றது. சுனாமி, சூறாவளி, பூமியதிர்ச்சி என்பனவாயிலாகஇயற்கைஅன்னைமனிதர்களுக்கு எச்சரிக்கை விடுத்து வருகின்றாள். ஆகவே இயற்கையால் படைக்கப்பட்ட மனிதர்கள் அதனைச் சீண்டுவதும், அதற்கு விரோதமாக நடந்து கொள்வதும் நல்லதல்ல இந்த உலகம் இன்னும் பல ஆண்டுகள் நிலைத்து நிற்க வேண்டுமாயின் இயற்கையை நாம் அனைவரும் மதித்து நடக்கப் பழகிக்கொள்ள வேண்டும். இயற்கையுடன் ஒன்றிய வாழ்க்கை முறையே இன்றைய தேவையாகும். நாம் எவ்வளவுக்கு எவ்வளவு இயற்கையை நேசிக்கின்றோமோ அதனிலும் பார்க்க அதிகமாகவே இயற்கை எம்மை நேசிக்கும், பாதுகாக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமேயில்லை.

**நாம் எவ்வளவுக்கு எவ்வளவு இயற்கையை நேசிக்கின்றோமோ, அதனிலும் பார்க்க அதிகமாகவே இயற்கை எம்மை நேசிக்கும், பாதுகாக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமேயில்லை.**





# அழகான சருமத்துக்கு ஆரோக்கியமான உணவுகளை சாப்பிட வேண்டும்

ஆரோக்கியமான சருமம் வேண்டுமென்றால் ஆரோக்கியமான உணவுகளையும் உட்கொள்ள வேண்டும். ஆனால் தற்போதைய பெண்கள் அழகான சருமத்துக்கு அழகு நிலையம் ஒன்றே போதும் என்று அங்கேயே செல்கின்றனர். ஒருவர் சருமத்துக்கு அழகு சாதனப் பொருள்களைப் போட்டுச் சருமத்தை அழகாக வெளிப்படுத்தினாலும், அதன் ஆரோக்கியம் என்பது உண்ணும் உணவுகளிலேயே உள்ளது. ஆரோக்கியம் இருந்தால் தான் உண்மையான அழகு வெளிப்படும். எனவே ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளுங்கள்.



**சொக்லெட்**

சொக்லெட்டைத் தினமும் அளவாக சாப்பிட்டு வந்தால், சருமத்தில் ப்ளேவோனால் அளவை அதிகரித்து, அதனால் நல்ல பொலிவான சருமத்தைப் பெற உதவுகிறது.
முக்கியமாக சொக்லெட்டில் கலோரி அதிகம் இருப்பதால், இதனை அளவாக சாப்பிடுவது நல்லது.

**சூரியகாந்தி விதை**

சூரியகாந்தி விதைகளில் சருமத்துக்குத் தேவையான விற்றமின் 'ஈ' என்னும் சத்து அதிக அளவில் உள்ளது. மேலும் இதனை தினமும் உணவில் சேர்த்து வந்தால், அது சருமத்தை சூரியக்கதிர்களின் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கும். எனவே இதனை சாலட், ஓட்ஸ், செரில் போன்றவற்றுடன் சேர்த்து சாப்பிடுங்கள். முக்கியமான உணவில் அதிக அளவில் உப்பு சேர்க்க வேண்டாம். ஏனெனில் அவை சருமத்துக்கு நல்லதல்ல.



**வள்ளிக் கிழங்கு**

சர்க்கரைவள்ளிக் கிழங்கில் நல்ல பொலிவான மற்றும் ஆரோக்கியமான சருமத்துக்குத் தேவையான விற்றமின் 'ஏ' மற்றும் 'சி' அதிகம் இருப்பதால், அதனை உட்கொள்வது சிறந்தது. அதில் உள்ள விற்றமின் 'சி' கொலாஜன் உற்பத்தியை அதிகரித்து, சருமத்தை மென்மையாக வைத்துக் கொள்ளவும் உதவுகின்றது.



**தக்காளி**

தக்காளியை அதிகம் சாப்பிட்டால் முகப்பரு வரும் என்று சொல்வார்கள்.
ஆனால் உண்மையில் தக்காளியில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட்டான லைகோபைன் சருமத்தின் ஆரோக்கியத்தை அதிகரிக்கும். எனவே தக்காளியை சாலட், சாண்ட்விச் போன்றவற்றில் சேர்த்து தவறாமல் சாப்பிடுங்கள்.



**தயிர்**

தயிரை உட்கொண்டு வந்தால், அதில் உள்ள புரோட்டீன், சரும சுருக்கம், கோடுகள் போன்றவற்றை தடுக்கும். அதிலும் தயிரைச் சாப்பிடும்போது, சர்க்கரை சேர்க்க வேண்டாம். ஏனெனில் அது சருமத்துக்கு நல்லதல்ல. எனவே சர்க்கரை, உப்பு எதுவும் சேர்க்காமல் சாப்பிடுங்கள். இதனால் சருமம் இன்னும் அழகாகும்.





# பல்லால் வாகனத்தை இழுத்த இளைஞன்





சீனாவைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் சுமார் 2,725 கிலோ கிராம் நிறையுடைய வாகனம் ஒன்றை நொருக்கப்பட்ட கண்ணாடிப் போத்தல்களின் மீது நின்று பல்லினால் இழுத்து சாகசத்தில் ஈடுபட்டுள்ளார். இந்தச் சாகச நிகழ்வினை 20 வயதான யங் டோங் என்ற இளைஞன் அண்மையில் சீனாவில் புஜியான் மாகாணத்திலுள்ள புசௌவு நகரில் மேற்கொண்டுள்ளார்.

நொருக்கப்பட்ட போத்தல் கண்ணாடிகளால் 13 அடி நீளமான பாதை அமைத்துள்ளார். பின்னர் வாகனத்தில் 9 பேரை ஏற்றியுள்ளார். இதன் நிறை மொத்தமாக சுமார் 2,725 கிலோ கிராம் ஆகும். இந்த வாகனத்தை நொருக்கப்பட்ட கண்ணாடிகள் மீது நின்று பல்லினால் இழுத்து சாகசம் மேற்கொண்டுள்ளார். ஆனால் இது ஒரு உலக சாதனையா என்பது குறித்து இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை. கடந்த வருடம் இந்தியாவைச் சேர்ந்த நபர் ஒருவரும் சுமார் 2,725 கிலோ கிராம் நிறையுடைய வாகனத்தை பல்லினால் இழுத்திருந்தார். ஆனால் அவர் வெறும் தரையிலேயே அந்த சாகசத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# சுவிற்ஸர்லாந்தில் நடைபெற்ற 2 ஆவது அனைத்துலக
# முருகபக்தி மாநாடு

2 ஆவது அனைத்துலக முருக பக்தி மாநாடு சுவிற்ஸர்லாந்தின் செங்காளன் மாநிலத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. சென் மாக்கிறதன் அருள்மிகு கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் சார்பில் நடைபெற்று வரும் இந்த மாநாட்டில், உலகெங்கிலுமிருந்து வந்திருக்கக் கூடிய 300 பேராளர்களும், ஆன்றோர்களும் கலந்து கொண்டுள்ளார்கள்.

கடந்த 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு அருள்மிகு கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் விழாவின் ஆரம்பநாள் நிகழ்வுகள் நடைபெற்றன. புண்ணிய தீர்த்தங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் நிரம்பிய கலசங்கள் பூஜிக்கப்பெற்று, கதிர்வேலாயுத சுவாமிக்கு அபிஷேகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஆலய பிரதம குரு ஈசான சிவாச்சார்யார் சிவஸ்ரீ. பா. ஜோதிநாதக் குருக்கள், விஷேட ஆராதனைகளை நிகழ்த்தினார். தொடர்ந்து சதுர்வேத பாராயணம், திருமுறை பாராயணம் என்பவற்றுடன், முருகப்பெருமானின் நல்லருள் வேண்டுதலைத் தொடர்ந்து, அருளாளர்களின் ஆசியுரைகள் இடம்பெற்றன.

2 ஆம் நாள் நிகழ்வுகள் 3 ஆம் திகதி சனிக்கிழமை, Mehrzweck & Sportanlagen, Amtacker Strasse, 9437 Marbach .SG என்ற முகவரியில், காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகின. முருக பக்தி மாநாட்டின் தலைமை ஏற்பாட்டாளரும், மலேசிய திருமுருகன் திருவாக்குப் பீடத்தின் அருட்தலைவருமாகிய, தவத்திரு பாலயோகி சுவாமிகளால், 2 ஆவது மநாட்டை சுவிற்சர்லாந்தில் நடத்த வேண்டும் என்ற விருப்போடு, சென் மாக்கிறதன் கதிர்வேலாயுத சுவாமி கோவில் தலைவர் கணேஸ்குமார் வேலுப்பிள்ளையிடம் ஒப்படைக்கப்பட்ட மாநாட்டின் செங்கோல், அலங்கரிக்கபட்டு பக்திபூர்வமாகவும், இளைய தலைமுறையினரின் காவடி, கோலாட்டம், போன்ற கலை வெளிப்பாடுகளுடனும், மங்கல வாத்திய சகிதமுமாக, வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா என்ற பக்திக் கோஷமதிர, ஆன்றோர்களும், அருளாளர்களும் புடைசூழ, மாநாட்டின் திருஞான சபைக்கு எழுந்தருளச் செய்தார்கள்.

திருஞான சபையில் செங்கோல் ஸ்தாபிக்கப்பட்டு, ஆராதனைகள் நடைபெற்றதைத் தொடர்ந்து, உலக அமைதி வேண்டி, அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிட அக வணக்கத்தை அமைதியாகச் செலுத்தினார்கள். அமைதிப் பிரார்த்தனையைத் தொடர்ந்து, கலைமா மணி ஒதுவார் திருத்தணி சுவாமி நாதன் அவர்களின் இன்குரலில் இறை புகழ்பாடும் நாத வேள்வி இடம் பெற்றது.

நாத வேள்வியைத் தொடர்ந்து, அனைத்துலக முருக பக்தி மாநாட்டு ஏற்பாட்டுக்குழு (2014) செயலாளர், ஆறுமுகம் செந்தில்நாதன் மாநாட்டுக்கு வந்திருந்த ஆன்றோர்களையும், பேராளர்களையும், பங்காளர்களையும், அன்பு கலந்தும், அழகு தமிழ் சேர்த்தும், வரவேற்று உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து, மாநாட்டு ஏற்பாட்டுக்குழு மற்றும், அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத் தலைவர், கணேசகுமார் வேலுப்பிள்ளையின் தலைமையுரை இடம்பெற்றது. அவர் தமதுரையின் போது, இம் மாநாட்டை நடத்தும் வாய்ப்பு, தமக்கும், தமது ஆலய உறுப்பினர்களுக்கும் கிடைத்த அருட்பேறு எனக் குறிப்பிட்டார்.

இவ்விழாவின் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்ட Marbach நகரசபை உறுப்பினர் Irma Graf அம்மையார் மங்கலகரமாக அமைந்துள்ள இந் நிகழ்வின் முக்கியத்துவத்தை தாம் உணர்வதாகவும், விழா சிறப்புற தமது நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும் உரையாற்றினார்கள். அவருக்கான கௌரவிப்பும் அரங்கில் இடம்பெற்றது.




யாழ் உதயன் பத்திரிகைக்கான கௌரவத்தை, அந்தநிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஈ. சரவணபவன் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து அருளாளர்கள், தவத்திரு சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமிகள் (இணைஅதிபர், திருப்பனந்தாள் காசி திருமடம்) தவத்திரு குமர குருபர சுவாமிகள் (மடாதிபதி, கௌமார மடாலயம்) தவத்திரு யோகானந்த அடிகள் (தலைவர், உலக சைவப் பேரவை) ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள். திரு. கந்தவனம் (கவிஞர், கனடா), திருமதி. சாந்தி நாவுக்கரசன், (பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை), வபி. நாராயணசாமி (முன்னாள் செயலர், சட்டத்துறை அமைச்சு, புதுச்சேரி), ஆகிய சான்றோர்களின் வாழ்த்துரையைத் தொடர்ந்து, டான்ஸ்ரீ டத்தோ ஆர். நடராஜா (அறங்காவலர், நிர்வாக வாரியத் தலைவர், உலகப்புகழ் மலேசிய பத்துமலைத் திருத்தலம்) சிறப்புரை ஆற்றினார்கள். அவர் தனது சிறப்புரையில், பத்துமலைத் திரு முருகனின் பெரும்புகழையும், அவனருளாலே அமையப்பெற்ற உலகின் அதி உயர் முருகன் சிலை குறித்தும், அந்த அழகுச் சிலை உலக முருக வழிபாட்டின் அடையாளமாக மாறியிருப்பதையும், அழகுற எடுத்தியம்பினார்.




ஆய்வாளர்கள் ஆய்வுகளைச் சமர்ப்பித்து உரையாற்றிய போது.....

மலேசியா திருமுருகன் திருவாக்கு திருபீடத்தின் அருட் தலைவர் தவத்திரு பாலயோகி சுவாமிகள் அனைத்துலக முருகபக்தி மாநாட்டை ஆரம்பித்தருளும் வகையில், அருட் தலைமையுரை ஆற்றினார்கள். அவர் தமதுரையில் 2 ஆவது மாநாட்டை மிகுந்த சிரத்தையுடன் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள கதிர்வேலாயுத சுவாமி கோவில் தலைவர் உள்ளிட்ட சபையினருக்குப் பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்ததோடு, முருகனின் திருவருளையும் போற்றிக் கொண்டாடினார்கள்.

மாநாட்டு மலர், மற்றும் சிறப்பு மலர்களை தவத்திரு பாலயோகி சுவாமிகளும், தவத்திரு சுந்தர மூர்த்தி தம்பிரான் சுவாமிகளும், தவத்திரு குமரகுருபர சுவாமிகளும், இணைந்து வெளியிட, இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ்ப்பாணம் உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநருமான ஈ. சரவண பவன் அவர்கள் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்கள்.

மதிய போசன இடைவேளையைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆய்வரங்கின் முதல் அமர்வுக்கு சிவஸ்ரீ. த. சரஹனபவானந்த குருக்கள் (ஸ்ரீ விஷ்ணு துர்க்கை அம்மன் ஆலயம், சுவிஸ்) முன்னிலை வகிக்க, தவத்திரு சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமிகள் (இணைஅதிபர், திருப்பனந்தாள் காசி திருமடம்), தலைமையேற்க, ஆய்வாளர்களான பேராசிரியர். மு. ராசேந்திரன் (மலேசியா), ஓய்வுநிலை பேராசிரியர். எஸ். சிவலிங்கராஜா (தலைவர், தமிழ்த் துறை, யாழ். பல்கலைக் கழகம்), பேராசிரியர். மா. வேதநாதன் (தலைவர், இந்து நாகரிகத் துறை, யாழ். பல்கலைக் கழகம்), பேராசிரியர். க. திலகவதி (கோலாலம்பூர், மலேசியா), திருமதி. சாந்தி நாவுக்கரசன் (பணிப்பாளர் - இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை), பேராசிரியர். வே. சபாபதி (பல்கலைக்கழகம், மலேசியா), திருமதி. உமாதேவி அழகிரி (மொரீசியஸ்), ஆகியோர் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து உரையாற்றினார்கள்.

சிற்றுண்டி இடைவேளையைத் தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆய்வரங்கு அமர்வுக்கு சகலாகம சங்கரர் சிவபிரம்மஸ்ரீ து. உமாசங்கரக் குருக்கள், (ஜெனிவா) முன்னிலை வகிக்க லண்டனில் இருந்து வருகை தந்திருந்த வருகை விரிவுரையாளர் சிவாப்பிள்ளை தலைமையேற்றார். இவ் ஆய்வரங்கில், பேராசிரியர். செ. யோகராசா (மொழித் துறை, கிழக்கிலங்கை பல்கலைக் கழகம்), திருமதி. நீலா நகுலேச பிள்ளை (செயலாளர், உலக சைவப் பேரவை, கனடா), திருமதி. எஸ். கேசவன் (சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிக கற்கைகள் புலம், கிழக்கிலங்கை பல்கலைக்கழகம்), இராசையா மகேஸ்வரன், (முதுநிலை துணை நூலகர், நூலக தகவல் தொழில்நுட்ப துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்), முனைவர். கிங்க்ஸ்டன் பால் தம்புராஜ், (மலேசியா), சி. திருசெந்தூரன் (விரிவுரையாளர், அரசறிவியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்), செல்வி. சியாமளாங்கி கருணாகரன் (விரிவுரையாளர், பல்கலைக்கழகம், இலங்கை) திருமதி. சுகன்யா அரவிந்தன் (விரிவுரையாளர், இசைத் துறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோர் தமது ஆய்வுகளைச் சமர்ப்பித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, சூரிச் மாநில திருக்கோணேஸ்வர நடனாலய ஆசிரியர் திருமதி. சந்திரவதனியின் மாணவிகளது ஆறுபடை வீடு நாட்டிய நடனம் முருகனின் ஆறுபடைவீட்டின் உட்பொருள் உணர்த்தும் கலைச்சிறப்பாக இடம்பெற்றது. இந் நடனதாரகைகளுக்கான கௌரவிப்பைத் தொடர்ந்து, மலேசியா டான் ஸ்ரீ டத்தோ ஆர். நடராஜா தயாரிப்பில் உருவான, பக்தி மலையும் பத்து மலையும் பல்லூடகக் காட்சி இடம் பெற்றது. மாலை நிகழ்வுகள், டத்தோ தணேந்திரன் (தலைவர் - சக்தி அறவாரியம், மலேசியா) தலைமையில், இடம் பெற்றன. அவரது உரையைத் தொடர்ந்து, மாநாட்டின் சிறப்புக்கு அனுசரணையாகவிருந்த ஊடகவியலாளர்கள் உட்பட்ட பலர் அரங்கில் கௌரவிக்கப்பட்டார்கள். யாழ். உதயன் பத்திரிகைக்கான கௌரவத்தை, அந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவண பவன் பெற்றுக்கொண்டார். ஊடகவியலாளர்கள் இரா.துரைரத்தினம், தர்ஷன், ஆகியோரும் கௌரவிக்கப்பட்டார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த செந்தமிழரசு கி. சிவக்குமார் அவர்களின், சிறப்புரை அழகு தமிழும், அன்பு கசியும் பக்தியும் நிறைந்த தாக அமைந்திருந்தது. மலேசிய பத்மநிருத்தியாலையா ஆர்ட்சின் ஆசிரியர் திருமதி. விநோ ஸ்ரீசங்கரின், மாணவி ஸ்ரீவர்ஷிணி உமாசங்கரின் நாட்டியார்ப்பணத்துடன் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நிறைவு பெற்றன. இந்த நிகழ்வுகள் அனைத்தையும் முன்னாள் இலங்கை வானொலி அறிவிப்பாளரும், பிபிசி தமிழ்ச்சேவைச் செய்தியாளருமாகிய விமல் சொக்கநாதன் நிகழ்வுகளைச் சுவைபடச் சுந்தரத்தமிழில் தொகுத்து வழங்கினார்கள். மறுநாள் காலை 8 மணி முதல் மாநாட்டின் 3ம் நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெற்றன. மூன்றாவது மாநாட்டின் ஏற்பாட்டாளர்களிடம், மாநாட்டின் செங்கோல் ஒப்படைக்கப்பட்டது. இதேவேளை 3 ஆவது மாநாடு தென்னாபிரிக்காவில் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சமந்தாவைக் கடத்த முற்பட்ட வேற்று கிரகவாசிகள்




வேற்றுக்கிரவாசிகள் என்று அழைக்கப்படும் ஏலியன்ஸ் குறித்து பரவலாக ஒரு பேச்சு இருக்கிறது. அது மனிதர்களிடம் தொடர்பு கொள்ள முயற்சிக்கிறது என்றும் ஆனால், அது மனிதர்களுக்கு தெளிவாகப் புரிவதில்லை என்றும் கூறப்படுகிறது. பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த சமந்தா மெக்டொனால்டு என்ற பெண் தன்னை ஏலியன்ஸ் கடத்த முயற்சித்தனர் என அதிர்ச்சி தரும் தகவலை வெளியிட்டு உள்ளார்.

அவர் கூறும்போது, கடந்த 1990 ஆம் ஆண்டில் இருந்து வேற்றுக் கிரகவாசிகள் தன்னை வந்து பார்த்துள்ளனர்.

ஆனால், என்னால் அந்த அனுபவத்தை நினைவு படுத்திப் பார்க்க முடியவில்லை. எனது நினைவில் இருந்து அவை நீங்கி விட்டது என்று தெரிவித்துள்ளார். ஆனால், தூங்கி எழும்போது, ஊசி போட்ட அடையாளம் உள்ளிட்ட காயங்களுடன் தான் காணப்பட்டதாக சமந்தா தெரிவித்துள்ளார். வேற்று கிரகத்தில் இருந்து வரும் அவர்களை தி ரெப்டீலியன்ஸ் மற்றும் தி கிரேஸ் என்று அழைக்கும் சமந்தா, அவை ஒன்றாக இணைந்து பணியாற்றுபவை என்று நம்புகிறார்.

சமந்தா மேலும் கூறுகையில் :-

நான் அவர்களைப் பார்த்து என்னிடம் என்ன வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர்கள், உன்னையும், உனது குடும்பத்தையும் எடுத்துச் செல்ல வந்திருக்கிறோம் என்று தெரி வித்ததாகக் கூறியுள்ளார்.

அவர்கள் ஏன் தொடர்ந்து என்னிடம் வருவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நான் தியானம் மேற்கொள்வதால் எனது சக்தி குறித்து அறிவதற்காக அவர்கள் வருகிறார்கள் என்று நான் கருதுகிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். உங்களைக் கடத்தியதாகக் கூறும் நீங்கள் அப்பொழுது நடந்தது என்ன என்று தெரிவியுங்கள் என்று கேட்டதற்கு, நீங்கள் கடத்தப்பட்டதை குறித்த நினைவுகளைக் கொண்டிருக்க முடியாது.

ஏனென்றால், உங்களது நினைவுகள் அழிக்கப்பட்டு விடும். நீங்கள் வேறு எங்கோ இருக்கிறீர்கள் என்பதை உணர முடியும். ஆனால், உங்களால் உண்மையில் அதனை நினைவுபடுத்திப் பார்க்க இயலாது என்று கூறியுள்ளார்.

இதனை நாங்கள் கனவு எனக் கூறுவோம். உங்களுக்கும் இதுபோன்று தான் ஏற்பட்டுள்ளதா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, நிச்சயமாக இல்லை. எனது உடல் முழுவதும் அடையாளங்களுடன் நான் எழுந்துள்ளேன். சில நேரங்களில், உங்களுக்குள் நினைவுகள் வரும்.

ஆனால், அது உங்களுக்குச் சொந்தமாக இருக்காது. அதனை வேறு எந்த வழியிலும் உங்களுக்கு விளக்கிட முடியாது என்று பதிலளித்தார். ஒரு கடத்தலுக்குப் பின்பு தூங்கி எழும் நான், ஊசி அடையாளங்களால் எனது உடல் சூழப்பட்டிருப்பதைப் பார்த்தேன். உட லில் காயங்களுடன், தழும்புகள் இருப்ப தையும் நான் கண்டேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.


வேற்றுக் கிரக அனுபவம் ஏற்பட்டதால், பூமியில் தான் கண் காணிக்கப்பட்டு வருகிறேன் என்று நம்புவதாக கூறிய அவர், எனது வீட்டின் மேலே கறுப்பு ஹெலிகாப்டர்கள் பறப்பதும், என்னை பொலிஸார் கார்களில் பின் தொடர்வதுமாக இருக்கின்றனர் என்றும் கூறியுள்ளார். எனவே, நாங்கள் உன்னைக் கண்கா ணித்து வருகிறோம். நீ அதிக ஜாக்கிரதை யுடன் இருக்க வேண்டும் என்பதனை சொல்லவே அவர்கள் முயன்று வருவதாக நான் கருதுகிறேன் என்று சமந்தா தெரிவித்துள்ளார். இதுபோன்று வேற்றுக் கிரகவாசிகள் குறித்துக் கூறும் பலரையும் அவர்களது அனுபவத்தை அடுத்து 48 மணி நேரத்தில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன்கள் மற்றும் கறுப்பு ஒளி அலைவரிசையில் வைத்து சோதனை செய்துள்ளனர்.

அதில், அவர்களது உடலில், கைகள் வைத்த அடையாளங்கள் போன்ற ஒளித் தடங்கள் இருப்பது தெரிய வந்துள்ளது. இது குறித்து ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அதில், 1,500 பேர் கலந்து கொண்டனர். அவர்களில் 3ல் ஒரு பங்கினர், தாங்கள் வேற்றுக் கிரக தட்டுகளை கண்டுள்ளோம் என்று கூறியுள்ளனர். அதே அளவு மக்கள் தாங்கள் பேயைப் பார்த்துள்ளதாகவும் கூறியுள்ளனர். அவர்க ளில், 5 இல் ஒருவர் பேயை ஊடகம் (மீடியம்) ஒன்றின் வழியாக பார்த்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

ஆனால், அவர்களில் பாதிப் பேர் தாங்கள் இது போன்ற சக்திகள் இருப்பதாகக் கூறிய பொய் யான நபர்களால் ஏமாற்றப்பட்டு விட்டதாக கூறியுள்ளனர். 3 இல் ஒருவர், இரவில் பொருள்கள் மறைதல் மற்றும் ஓரிடத்தில் இருந்து வேறு இடத்துக்கு நகர்ந்து செல்லுதல் ஆகிய அனுபவங்கள் தங்களுக்கு ஏற்பட்டு உள்ளன என்று தெரிவித் துள்ளனர். உங்களது எண்ணபலத்தால் ஒரு பொருளை மற்றொரு இடத்துக்கு மாற்றுவதில் நம்பிக்கை இல்லை என்று 60 சதவீதத்தினர் கூறுகின்றனர். ஆனால், 20 சதவீதம் பேர் பேய்களுடன் செக்ஸ் வைத்துக் கொள்ளலாம் என நம்புகின்றனர். இந்த ஆய்வில் முக்கிய அம்சமாக, வேற்றுக் கிரக வாசிகளால் கடத்தப்பட்டு பாதிக்கப்பட்ட நபர் சமந்தா மட்டும் இல்லை. அவரைப் போன்று ஆய்வில் கலந்து கொண்டோரில் 4 சதவீதத்தினர் தாங்களும் கடத்தப்பட்டு உள்ளோம் என்று தெரிவித்துள்ளனர்.

இந்த ஆய்வு முடிவில் இருந்து, ஆய்வில் கலந்து கொண்டோரில் பெரும்பாலானோர் பேயுடன் தொடர்பு கொண்டுள்ளனர் என்றும், பறக்கும் தட்டுகளைப் பார்த்து உள்ளனர் என்றும் மரணம் அடைந்தவர்களுடன் தொடர்பு கொள்ள விரும்புகின்றனர் என்றும் தெரிய வந்துள்ளது.





## படங்களுக்குரிய பெயரை அறிந்து கொள்ளுங்கள்

பாவற்காய்



ரோஜாப்பூ



இஞ்சி



கார்த்திகைப் பூ



எலுமிச்சை



கொன்றை



# குருவின் நல்ல உள்ளம்

ஒருநாள், முனிவர் சித்தானந்தர் தம் சீடர்களுடன் நகரத்தின் தெருக்கள் வழியாக நடந்து கொண்டிருந்தார். அவர் சிறந்த ஞானி. எனவே, மக்கள் அவரை மிகவும் மதித்தனர். அவர் சீடர்கள் அவரைத் தொடர்ந்து சென்றனர்.

ஒரு பணக்காரப் பெண்மணியின் வீட்டருகே அவர்கள் நடந்தனர். அப்போது ஒரு சிறிய பெண் குழந்தை அந்த வீட்டிலிருந்து வெளியே வந்தது. குழந்தைகள் மேல் மிகுந்த அன்புடையவர் ஞானி. அவர் அந்தக் குழந்தையை அன்புடன் நோக்கினார். குழந்தை ஒரு தட்டு நிறைய ரோஜா மலர்களைக் கொண்டு வந்து சித்தானந்தர் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது.

மலர்கள், மணம் தரும் பொருட்கள், தைலங்கள் என்றால் அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைவார் என்பது சீடர்களுக்குத் தெரியும். ஒரு ரோஜா மலரை மட்டும் எடுத்துக் கொண்டு தட்டை சீடர்களிடம் நீட்டினார். சீடர்களுக்குச் சொல்லவா வேண்டும்.

ஒவ்வொருவரும் இரண்டு மூன்றாக மலர்களை அள்ளிக் கொண்டனர்.

மலர்களை அர்பணித்த குழந்தை மகிழ்ச்சியுடன் இல்லம் சென்றது. சீடர்கள் புடை சூழ சித்தானந்தரின் உலா தொடங்கியது.

ஒரு வயதான மூதாட்டி ஞானியைத் தனது வீட்டுக்குள் வரவேற்றாள். சீடர்கள் உள்ளே சென்று அமர்ந்தனர். ஒரு பணியாள் ஆப்பிள் பழத்தட்டை அவர் முன் வைத்தார். ஒரு பழத்தை எடுத்துச் சுவைத்தார் சித்தானந்தர். பழம் மிகவும் சுவையாக இருந்தது. அவைகளை எடுத்துத் தனது சீடர்களுக்கு வழங்கினார்.

சீடர்கள் பழங்களைச் சுவைத்து உண்டனர். ஞானியைத் தொடர்ந்து செல்வதால் அவர்களுக்கு அவ்வப்போது நல்ல சுவையான பொருட்கள் கிடைத்து வந்தன. எனவே, இந்தச் சந்தர்ப்பங்களை சீடர்களில் எவரும் தவறவிடுவதில்லை.

செல்வந்தர்கள் வாழும் வீதிகளை எல்லாம் அவர்கள் கடந்து சென்றனர். இப்போது வசதி குறைந்தவர்களின் இடம்; நகரின் ஒதுக்குப் புறமான பகுதி.

ஏழை விதவைப் பெண்ணொருத்தி அங்கே நின்று கொண்டிருந்தாள். அவள் ஞானியை தன் சிறிய வீட்டுக்கு வருமாறு அழைத்தாள். அவளது அழைப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். அவரும் சீடர்களும் உள்ளே சென்று அமர்ந்தனர்.

ஐயனே, நீங்கள் இதைச் சாப்பிட வேண்டும், என்று கூறி ஒரு தட்டை நீட்டினாள்.

தட்டைப் பெற்றுக் கொண்ட ஞானி அதில் திராட்சைப் பழங்கள் இருந்ததை பார்த் தார்.

ஒரு பழத்தை எடுத்து வாயில் போட்டார். சுவைத்து உண்டார். சீடர்கள் பார்த்துக் கொண்டே இருந்தனர்.

மீண்டும் ஒரு பழத்தைப் பிய்த்து வாயில் போட்டு மென்று சுவைத்தார். இப்படியாக எல்லா பழங்களையும் தான் ஒருவராகவே தின்று தீர்த்தார். தங்களுக்கு அப்பழத்தை வழங்காமல் தானே உண்டதைக் கண்ட சீடர்கள் வியப்படைந்தனர்.

திராட்சைப் பழம் வழங்கிய ஏழைக் கைம்பெண்ணுக்கு நன்றி கூறினார் ஞானி. பின்னர் வெளியே வந்து நடக்கத் தொடங்கினார். சீடர்கள் அவரோடு நடந்தனர்.

சீடர்கள் முகத்தில் மாற்றம் ஏற்பட்டிருந்தது. இதுவரை சகல பொருட்களையும், உணவையும் பகிர்ந்து கொண்ட குரு திராட்சைப் பழங்களை மட்டும் தன்னந்தனியாய்த் தானே உண்டது ஏன்? எல்லோருடைய உள்ளத்திலும் இக்கேள்வி எழுந்து நின்றது.

சீடர் ஒருவர் வாய் திறந்து இக்கேள்வியைக் கேட்டே விட்டார். நீங்கள் ஏன் தனியாகச் சாப்பிட்டீர்கள்? எங்களுக்கு ஒரு பழங்கூட தரவில்லையே… ஏன்?

அந்த திராட்சைப் பழம் மிகவும் புளிப்பாய் இருந்தது. எனவே, நான் ஒருவனாக அவற்றைத் தின்றேன், என்றார் குரு. உங்களுடைய சுகத்திலும் துக்கத்திலும் நாங்கள் பங்கு கொண்டிருக்கிறோம். அப்படியிருக்க, சுவையற்றதை ஏன் நீங்கள் தனியாக உண்ண வேண்டும்; சுவை மிகுந்ததை மட்டும் எங்களோடு பகிர்ந்துண்ண வேண்டுமா? இது நீதியாகுமா?

என்னுடைய சுகத்திலும் துக்கத்திலும் நீங்கள் பங்கு கொள்ள விரும்புவது உண்மையாக இருக்கலாம். ஆனால், இதில் ஓர் ஏழைக் கைம்பெண் இடையே இருக்கிறாள். அவள் தந்த திராட்சைப் பழங்களை உங்களுடன் பகிர்ந்து கொண்டால், இந்தப் பழம் புளிக்கிறது என்று நீங்கள் சாப்பிடும் போதே சொல்லி விமர்சனம் செய்து அந்தப் பெண்ணின் மனதைப் புண்படுத்திவிடுவீர்கள். அவளது மனது படாத பாடுபட்டு நொந்து போய்விடும். அதனால் தான் திராட்சைப் பழங்களை உங்களுக்குத் தரவில்லை, என்று சொன்னார் முனிவர்.

எவருடைய மனதையும் புண்படுத்தக் கூடாது என்ற நிலைப்பாட்டில் தங்கள் குரு எத்தனை உண்மையாக இருக்கிறார் என்பதை அறிந்து மகிழ்ந்தனர் சீடர்கள்.

## பொது அறிவு

வி. விஜயசாந்தி புலோலி

♥ இறுவட்டுக்கள் தயாரிக்கப் பயன்படும் உலோகம் எது?
**அலுமினியம்**

♥ மட்பாண்ட உற்பத்தியில் பயன்படும் களிமண் எது?
**பந்துக்களிமண்**

♥ டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் முதன் முதலில் 3 சதங்களை அடித்த ஆசிய வீரர் யார்? **றெனீவ் முகமது (பாகிஸ்தான்)**

♥ மனித உடலில் உள்ள இரத்தக் குழாய்களின் மொத்த நீளம் என்ன?
**96,000 கிலோ மீற்றர்**

♥ 'இன்ரநெற்' முதன் முதலில் எந்தத் துறையில் பயன்படுத்தப்பட்டது?
**இராணுவத்துறை**

♥ இந்தியாவுக்கு விடுதலை கிடைத்த போது மகாத்மா காந்தி எங்கே இருந்தார்?
**நவகாளி**

♥ செட்னா கிரகம் முதன்முதலில் எப்போது கண்டுபிடிக்கப்பட்டது?
**2003 நவம்பர் 14**

♥ இந்தியாவின் மிக விலையுயர்ந்த வாசனைத் திரவியம் எது? **குங்குமப்பூ**

♥ செல்லுலர் போனின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
**மார்ட்டின் கூப்பர்(அமெரிக்கா)**

♥ கிரிக்கெட் போட்டிகளில் கெல்மெற் அணிவதை அறிமுகப்படுத்திய நாடு எது?
**ஆஸ்திரேலியா**

## ஒன்று எண்ணுவோம்



ஒன்று ஒன்று
ஒன்று என்று
இன்று எண்ணுவோம்
நன்று எண்ணுவோம்.

தலை ஒன்று
நெற்றி ஒன்று
மூக்கு ஒன்று
நாடி ஒன்று

வாய் ஒன்று
கழுத்து ஒன்று.
வயிறு ஒன்று
முதுகு ஒன்று

அப்பா ஒன்று.
அம்மா ஒன்று.
வெற்றி ஒன்று.
பற்றுவோம் தொடர்ந்து.

# கண்ணீரை புன்னகையால் மூடியவர்

விசித்திரங்களால் நெய்யப்பட்டது வாழ்க்கை. அதன் மர்மங்கள் சாதாரண மனிதர்களின் அறிவுக்கு அப்பாற்பட்டவை. மௌனப் படங்களைத் தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த சார்லி சாப்ளின் பிறப்புக்கான அதிகாரபூர்வ ஆவணம் இல்லை என்கிறார்கள். பிறப்புச் சான்றிதழோ ஞானஸ்நானம் பெற்றதற்கான பதிவோ இல்லாத சாப்ளினின் பிறந்த நாளை இன்று உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் உற்சாகத்துடன் கொண்டாடுகிறார்கள். ஆனால் பால்யத்தில் ஒருவேளை உணவுக்கே வழியின்றி அலைந்து திரிந்தார் சாப்ளின்.

தாயின் மன்நோயும், தந்தையின் குடியும் சாப்ளினைத் தரித்திரனாக்கியிருந்தது. உலகத்தைச் சிரிக்க வைத்தவரின் பால்யத்தைத் துன்பச் சரடுகள் மூச்சுவிட முடியாத அளவு நெருக்கியிருந்தன. நெருக்கடிகள் நிறைந்திருந்த வாழ்க்கையில் மூழ்கிப்போகாமல் திமிர்ந்து எழுந்து கலைஞனாக அவர் நின்றமை காலத்தின் கருணையா தன்னம்பிக்கையின் வெற்றியா என்பதை எளிதில் சொல்லிவிட முடியாது.

உலகைப் பொறுத்தவரை சார்லி ஸ்பென்சர் சாப்ளின் லண்டனின் தெற்குப் பகுதியில் அமைந்திருந்த சம்மர்செட் குடியிருப்புப் பகுதியிலிருந்து வந்திருந்தவர். அங்கு 1889 ஏப்ரல் 16 இல் பிறந்திருந்தார் சாப்ளின். வாடகை தர முடியாத காரணத்தால் அவரது தாய் ஹன்னா, சகோதரர் சிட்னி, சாப்ளின் மூவரும் குடியிருந்த வீடுகளிலிருந்து அடிக்கடி துரத்தப்பட்டனர்.

ஒவ்வொரு முறையும் தட்டுமுட்டுச் பொருள்களைத் தூக்கிக் கொண்டு வேறொரு வீடு தேடி சாப்ளின் குடும்பம் அலைந்திருக்கிறது. இப்படித் துரத்தப்பட்ட பொழுதுகளின் இரவை அங்கிருந்த கொட்டகை ஒன்றில் கழித்துள்ளதாக சாப்ளின் நினைவுகூர்ந்துள்ளார். ஆனால் அங்கிருந்த பூங்காக்களில் தூங்குவதற்கே தான் அதிகம் பிரியப்பட்டதாகவும் அவர் சொல் கிறார்.

வறுமை நிறைந்திருந்தபோதும் சிறுவயதில் ஒரு சில ஆண்டுகள் தாயின் பாசம் சாப்ளினுக்குப் பூரணமாகக் கிடைத்துள்ளது. அப்போது வீட்டைக் கவனித்துக்கொள்ளப் பணிப்பெண் இருந்துள்ளார். சப்ளின் குடும்பத்தினர் ஞாயிற்றுக்கிழமைகளில் அருகிலிருந்த சுற்றுலாத் தலங்களுக்குக் குதிரை வண்டியில் சென்றுவந்துள்ளனர். ஆனால் இந்த மகிழ்ச்சி மிகக் குறுகிய காலமே நீடித்தது.

சப்ளினுக்கு நான்கு வயது ஆனபோது குடும்பத்தின் வறுமை அதிகரித்தது. அவருடைய தாய் ஹன்னா தையல் வேலைகளைச் செய்தார். ஆனால் அதில் அதிக வருமானம் கிடைக்கவில்லை. சாப்ளின் பப்களின் வெளியே நடனமாடி ஏதோ கொஞ்சம் சம்பாதித்தார். மூன்று பேர் நிம்மதியாக உண்ணக்கூட முடியாத பல சந்தர்ப்பங்களில் தானமாய்க் கிடைத்த உணவைக் கொண்டே நாள்களைக் கழித்தனர். வறுமையான சூழலில் இருந்து மீள்வதற்குள் சாப்ளினின் தாய்க்கு உடல்நிலை பாதிப்படையவே அவர் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டார்.

சப்ளினின் தந்தை ஒரு காலத்தில் இசையரங்குகளில் நட்சத்திரமாக விளங்கினார். ஆனால் இந்தப் புகழ் கொஞ்சம் கொஞ்சமாக மங்கியது. சாதாரண வாழ்க்கைகூட வாழ வழியற்ற நிலையில் சாப்ளினின் தந்தை குடிக்கு அடிமையானார். தாயும் தந்தையும் அன்புடனும் ஆதரவுடனும் கவனிக்க வேண்டிய பாலப் பருவத்தில் சாப்ளினுக்குத் தனிமையே துணையானது.

ஹான்வெல் என்னும் ஆதரவற்ற சிறுவர்களுக்கான இல்லத்தில் சாப்ளின் சேர்க்கப்பட்டார். இங்கே சாப்ளின் சந்தித்ததெல்லாம் வாழ்வில் ஒருபோதும் எதிர்பார்த்திராத துயரங்களை மட்டுமே. அத்தனை துன்பங்களையும் சகித்துக் கொள்ள வேண்டிய சூழலில் சாப்ளின் நாட்களை நகர்த்தினார். ஆண்டுக்கணக்கில் யாருமே பார்க்க வராத நிலையில் ஆற்றவோ தேற்றவோ ஒருவருமற்ற தனிமை சப்ளின் மீது கவிந்தது.

ஹான்வெல் கடுமையான ஒழுக்க விதிகளை வலியுறுத்தும் இல்லம். இங்கே இருந்தபோது தனது தவறான நடத்தைகளுக்காக சாப்ளின் நன்கு அடிபட்டார். தலையில் ஏற்பட்ட படர்தாமரை காரணமாகத் தலை மொட்டையடிக்கப்பட்டது. அதிக கண்ணீர் உகுத்த நாள்கள் இவை எனப் பின்னாளில் சப்ளின் குறிப்பிடுகிறார். இந்தத் துயரங்களுக்கு மத்தியிலும் தான் உலகத்திலேயே சிறந்த நடிகர் என்று சாப்ளின் அடிக்கடி நினைத்துக்கொள்வாராம். இந்த நினைப்புதான் சாப்ளினை அந்தத் துன்பச் சேற்றில் மூழ்கிவிடாமல் துணிந்து நிற்க வைத்தது. இதை அவர் தன் மகனிடம் கூறியுள்ளார்.

ஹான்வெல் இல்லத்தில் சப்ளின் பெற்ற துன்பங்களைத் தாங்கும் தன்மை சாப்ளின் பிற்காலத்தில் திரைப்பட ஆளுமையாக மாறியபோது கைகொடுத்தது. சப்ளின் திடீர் திடீரெனக் காணாமல் போய்விடுவார். நாடோடி போல் எல்லையற்ற மகிழ்ச்சியுடன் கம்பீரமாக நீண்ட தொலைவுக்கு நடந்துசெல்வார். இந்த நடைப் பழக்கம் அவருக்கு அதிகப்படியான ஆற்றலையும் முடிவெடுக்கும் தன்மையையும் கொடுத்தது.

சப்ளினுக்கு உணவின் மீதும் பாதுகாப்பான வாழ்க்கை மீதும் நாட்டம் இருந்தது. இந்த இரண்டுமே பால்யத்தில் சப்ளி னுக்குச் சரிவரக் கிடைக்காமல் இருந்தன.

வாழ்நாள் முழுவதும் பரிபூரணக் காதலுக்காக வெறிகொண்டலைந்தார். ஆனால் இறுதிவரை அதை அவர் கண்டடையவில்லை.


தனது தொடக்ககாலத் திரைப்படங்களில் கோபத்துடனோ குரூரத்துடனோ தன்னைத் துன்புறுத்துபவர்களைப் பழி வாங்கத் துடித்தார் சப்ளின். பகைமை நிறைந்த பரிவற்ற உலகத்தில் பிழைத்திருப்பது குறித்த அக்கறையை அவரது பிற்காலப் படங்கள் வெளிப்படுத்தின.

ஒன்பது வயதில் சப்ளின் நாட்டுப்புற நடனக் குழு ஒன்றில் சேர்க்கப்பட்டார். இந்தக் குழுவினருடன் பிரிட்டனில் இருந்த பெரும்பாலான இசையரங்குகளுக்குச் செல்லும் வாய்ப்பு சப்ளினுக்குக் கிடைத்தது. அந்தக் குழுவில் இடம்பெற்றிருந்த கோமாளிகளின், நகைச்சுவையாளர்களின் ஒவ்வொரு அசைவையும் நன்கு அவதானித்துத் தனக்குள் பதிய வைத்துக்கொண்டார் சப்ளின். இந்தச் சூழலில் 1901 இல் சப்ளினின் தந்தை குடிநோய் முற்றி மரித்தார். சாப்ளினின் தாய் மனநோய் பீடித்துத் துன்புற்றார். பித்துப் பிடித்த தாயை இழுத்துக்கொண்டு லண்டன் தெருக்களின் வழியே நடந்து சென்றான் சிறுவனான சாப்ளின். மனநோய் இல்லத்தில் அனுமதிக்கப்பட்ட ஹன்னா 17 ஆண்டுகளை அங்கேயே கழித்தார்.

இந்தத்துன்பங்களை எல்லாம் தாங்கிக்கொண்ட சப்ளினுக்கு 14 வயதில் ஷெர்லாக் ஹோம்ஸ் கதையில் நடிக்க ஒரு சிறு கதாபாத்திரம் கிடைத்தது. இதில் நடிப்பதற்காக சப்ளின் பிரிட்டன் முழுவதும் சுற்றினார். இந்தப் பிரயாணம் தவிர்த்து இடையில் கிடைத்த நேரங்களில் ஸ்னூக்கர் விளையாட்டு, மது, மாது எனப் பொழுது கழிந்தது சாப்ளினுக்கு.

1913 இல் சப்ளின் கலிஃபோர்னியாவில் உள்ள கீஸ்டோன் ஸ்டுடியோவில் சேர்ந்தார். அப்போது அவருக்கு வாரத்திற்கு 150 டொலர் சம்பளம். அது இதுவரை அவர் சம்பாதித்திராத தொகை. ஓராண்டுக்குள் சார்லி சாப்ளின் அமெரிக்காவின் மிகப் பிரபலமான நகைச்சுவை நடிகராக மாறினார். 1917 இல் சொந்தமாக ஸ்டுடியோவைக் கட்டினார். 1921 இல் சாப்ளின் லண்டனுக்குத் திரும்பிய போது ஆயிரக்கணக்கான ரசிகர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர். இப்போது அவரைத் தெரியாதவர் ஒருவருமில்லை.





இன்றைய இளைய சமுதாயத்தினரின் கைகளை அலங்கரித் துக் கொண்டிருக்கிறது மொபைல் போன்.

உலகில் எந்த மூலையில் நடக்கும் விடயங்களையும் இதன் மூலம் மிக எளிதாகத் தெரிந்து கொள்ளலாம், அந்த அளவுக்கு அது வளர்ந்து விட்டது. கூடவே அருகில் வைத்து பயன்படுத்துவதால், அதிலிருந்து வெளியாகும் கதிர்வீச்சின் மூலம் பல்வேறு தீமைகளும் இருக்கின்றன என்று ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

1. மொபைல் போனை பயன்படுத்தும்போது பெரும்பாலும் உடம்பிலிருந்து தள்ளியே வைத்துப் பயன்படுத்தவும். இதற்கென பயன்பாட்டில் உள்ள ஹெட்செட், ஸ்பீக்கர் போன், புளூடூத் ஹெட்செட் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

2. தலையின் ஒரே புறமாக வைத்துப் பயன்படுத்தாமல், மாற்றி மாற்றி வைத்துப் பயன்படுத்தவும்.

3. மொபைல் போனுக்கு வரும் சிக்னல் மிகவும் குறைவாக உள்ள நேரத்தில் பயன்படுத்த வேண்டாம். ஏனென்றால், போன் அதிக சக்தியைப் பயன்படுத்தி, சிக்னல்களைப் பெற முயற்சிக்கிறது. அப்போது அதிகக் கதிர்வீச்சு வெளிப்படுகிறது.

4. குரல் தெளிவாகக் கேட்க, போனை உங்கள் தலை மேல் வைத்து அழுத்திப் பேசுவதைத் தவிர்க்கவும். இயலும் போது, டெக்ஸ்ட் வழியாகத் தகவலை அனுப்பவும்.

5. இரவில் தூங்கும்போது, படுக்கையில் உங்கள் தலை அருகே போனை வைத்துப் படுக்க வேண்டாம்.

6. குழந்தைகள் மொபைல் போனைப் பயன்படுத்த சந்தர்ப்பம் வழங்கக் கூடாது. அப்படியே பயன்படுத்தினாலும், வெகுநேரம் பயன்படுத்தக் கூடாது.




## மொபைல் போனின் கதிர்வீச்சிலிருந்து தப்பிக்க சில வழிகள்

# நிறம் மாறும் பச்சோந்திகள்

ஓணான்போல் பச்சை நிறத்தில் காணப்படும் பச்சோந்திக்கு அப்பெயர் வரக் காரணமே அதன் பச்சை நிறம் தான்.
இலைகளுக்கு மத்தியில் தன்னை மறைத்துக் கொள்ளவும், எதிரிகளிடமிருந்து தப்பிக்கவும் பச்சோந்தி தனது நிறத்தை மாற்றிக்கொள்ளும் என்பதும் தெரிந்த விடயம்.
சில தெரியாத விடயங்களும் இருக்கின்றன. அதில் முக்கியமானது பழுப்பு, சிவப்பு, மஞ்சள், வெள்ளை, நீலம், கறுப்பு அல்லது இவைகளுள் ஏதாவது ஒரு நிறத்தைக் கொண்டு தங்களின் நிறத்தை சூழ்நிலைக்கு ஏற்ப பச்சோந்திகள் மாற்றிக் கொள்கின்றன.
எனினும் பெரும்பாலான நேரங்களில் பச்சோந்திகள் தங்களின் நிறத்தை பச்சை நிறத்தில் மாற்றிக் கொள்கின்றன.
பச்சோந்தி இனத்தில் மொத்தம் 100 வகை உள்ளன. இவற்றில் 59 பச்சோந்தி இனங்கள் மடகாஸ்கர் தீவில் இருக்கின்றன.
தனது உடலின் நீளத்தை போல் இரண்டு மடங்கு நீளநாக்கை கொண்ட பச்சோந்தி லபக்கென்று இரையை நாக்கில் சுருட்டி பிடித்துக் கொள்கிறது.
இப்படி நாக்கில் ஒட்டிய இரை





கீழே விழுவதே கிடையாது. காரணம் அதன் நாக்கில் சுரக்கும் கெட்டியான பசை போன்ற திரவமாகும்.
பச்சோந்தியின் இரண்டு கண்களும் ஒரே நேரத்தில் வெவ்வேறு திசைகளில் பார்க்க கூடியவை.
ஓணானைப் போல மரத்தை விட்டு நிலத்துக்கு வருவதில்லை. அப்படி இறங்கி வந்தால் தனது எதிரிக்கு இரையாகிவிடுவோம் என்பதை அவை உணர்ந்தே இருக்கின்றன.
எப்படிப் பச்சோந்திகளால் இப்படி வெவ்வேறு நிறங்களுக்கு மாற முடிகின்றது?
இதன் தோற் பகுதியில் பல்வேறு விதமான நிறமிகள் உள்ளன. இதுதான் பச்சோந்தியின் உடல் பலவிதமாக மாறுவதற்கு உதவுகின்றது.
கறுப்பு நிறமான இந்த நிறமியில் மெலனோபோர்ஸ் என்னும் அணுக்கள் காணப்படுகின்றன.
இந்த நிறமி மெலனோபோர்சுடன் கலக்கும் போது வெவ்வேறு நிறங்கள் தோன்றுகின்றன.
குறிப்பாக பச்சோந்திகள் வேகமாக நடக்கும் போதும், சூழ்நிலைக்கேற்ப தங்களை மறைத்துக் கொள்ளும் போதும் இந்த நிறமாற்றம் வேகமாக நடைபெறுகிறது.
தவிர, இவற்றின் நரம்பு மண்டலங்களும் நிறமாற்றத்துக்கு உதவுகின்றன.
மேலும் தனது இணையைக் கவர்வதற்காகவும், ஆண் பச்சோந்தி தனது நிறத்தை மாற்றிக் கொள்கிறது.

# மின்னலை சிறைப்படுத்திய பெஞ்சமின் ஃபிராங்க்ளின்

இறந்த பின்னரும் நீங்கள் மறக்கப்படாமல் இருக்க வேண்டும் எனில், ஒன்று சிறந்த படைப்புகளை எழுதுங்கள் அல்லது பிறர் உங்களைப் பற்றி எழுதும் அளவுக்கு ஓர் அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழுங்கள்.
மேற்கூறிய தத்துவத்தை உதிர்த்ததோடு மட்டுமல்லாமல் அதன்படியே வாழ்ந்துகாட்டியவர் பெஞ்சமின் பிராங்க்ளின்.
அவர் ஓர் அரசியல் தலைவர் மட்டுமல்ல, எழுத்தாளர், அறிவியலாளர் மற்றும் கண்டு பிடிப்பாளர் என்ற பன்முகதன்மை கொண்ட மாமேதை.

இவர் அமெரிக்காவில் உள்ள போஸ்டன் நகரில் 1706 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தார்.
இளம்வயதில் சுறுசுறுப்பும், குறும்புத்தனமும் கொண்டவராக விளங்கிய பெஞ்சமின் கணிதத்தில் சிறந்து விளங்கியதோடு ஸ்பானிஷ், இத்தாலி மற்றும் லத்தீன் மொழியையும் ஆர்வத்தோடு கற்றுக்கொண்டார்.
தனது சகோதரர் ஜேம்ஸுடன் ஏற்பட்ட சிறு தகராறில், கப்பலேறி நியூயோர்க்குக்கு பயணப்பட்டபோது அவருக்கு வயது 17.

நியூயோர்க்கிலிருந்து பிலெடெல்பியாவுக்குச் சென்ற பெஞ்சமின், தனது 21வயதில் புகழ்பெற்ற 'ஏழை ரிச்சர்டின் Ã þ (Poor Richard's Almanack) என்ற பல மொழிகளை உள்ளடக்கிய இதழை வெளியிட்டார்.
மிகவும் மாறுபட்ட பாணியில் வெளிவந்த அந்த இதழ் பெரும் வெற்றியையும், செல்வத்தையும் பெற்றுத் தந்ததால் அச்சுத் தொழிலில் இறங்கிய பெஞ்சமின் தனது காதலி டெபோரா றீடையும் மணந்தார்.

இதன் பின்னர் அறிவியல் ஆராய்ச்சிகளிலும் பொது வாழ்விலும் பங்கு கொள்ள தொடங்கிய அவர் குளிரைப் போக்கும் ஸ்டவ் அடுப்பு, ஆர்மோனிகா என்ற இசைக் கருவி, இடிதாங்கி போன்ற பல அரிய கண்டுபிடிப்புகளையும் உருவாக்கினார்.
பல அறிவியல் சாதனங்களை கண்டுபிடித்துள்ள அவர், எந்தக் கண்டுபிடிப்பிற்கும் காப்புரிமை வாங்க மறுத்துவிட்டார்.
மற்றவர்களின் கண்டுபிடிப்புகளால் நாம் பயன்பெறும்போது நமது கண்டுபிடிப்பால் பிறர் பயன்பெறுவதை நாம் நற்பேறாகக் கருத வேண்டும் என எண்ணினார்.

மேலும், தபால் துறையில் பல சீர்சிருத்தங்களை மேற்கொண்ட




அவரது நினைவாக சுதந்திரம் அடைந்த பிறகு அவருடைய உருவம் பதித்த 5 'செண்ட்' தபால் தலையை அமெரிக்க அரசு வெளியிட்டு மரியாதை செய்தது.

பிலடெல்பியா நகர மக்களின் மனதைக் கவர்ந்த பெஞ்சமின் அந்த மக்களின் விருப்பத்தின் பேரில் அந்த நகரத்தின் நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.
பின்னர் 1751 ஆம் ஆண்டு பென்ஸில்வேனியா நகர மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், அரசாங்கத்தால் லண்டனுக்கு சமரச தூதராக அனுப்பி வைக்கப்பட்டார்.
ஐந்தாண்டுகளில் தனது பணியை முடித்துவிட்டு நாடு திரும்பிய அவரைச் சட்டசபையில் இருந்து மறுபடியும் ஐரோப்பாவுக்கு அனுப்பினார்கள்.
உரிமைப்போர் தொடங்கவுள்ளது என்பதையும், அந்தப் போர் தொடங்கினால் நீண்ட நாள்களுக்கு நடக்கும் என்பதையும் உணர்ந்த அவர், குடியேற்ற நாடுகள் இரண்டிற்கும் சமாதானமே சிறந்தது என்று 10 ஆண்டுகளாகப் போராடி வந்தார்.
தனக்கு வயதாகிவிட்ட நிலையிலும் அமெரிக்காவுக்காக போரைத் தடுப்பதற்கு பல முறைகளிலும் முயன்று கொண்டிருந்தார்.
அவரது சமரச தூது தோல்வியில் முடிந்தாலும், அமெரிக்கப் புரட்சியில் பெஞ்சமின் துப்பாக்கி மட்டும்தான் ஏந்தவில்லையே தவிர ஏனைய எல்லா வேலைகளையும் செய்துவந்தார்.

பின்னர், அமெரிக்க குடியேற்ற நாடுகளின் கமிஷனராக பொறுப்பேற்ற போது, அமெரிக்காவை விட பிரான்ஸில் அதிக புகழ் பெற்றார்.
போருக்காக உதவிகேட்டு பிரான்ஸிற்குச் சென்ற போது, பாரிஸ் நகரில் அவர் போகும் திசை யெல்லாம் மக்கள் அவரை மொய்த்துக் கொண்டு, அவரைத் தொட்டுத் தங்கள் கண்ணில் ஒற்றிக்கொண்டனர். அவர்களின் அளவுகடந்த அன்பையும், மகிழ்ச்சியைக் கண்டு பெஞ்சமின் வியந்து போனார்.
பிரான்ஸில், 1778 ஆம் ஆண்டு யூலை மாதம் 4ம் திகதி, அமெரிக்க சுதந்திர தினத்தை 50 பிரமுகர்களுடன் விருந்து வைத்துக் கொண்டாடினார்.
பிரான்ஸில் சிலகாலம் தங்கி தூதராக பணிபுரிந்த அவர், அமெரிக்கா திரும்ப பிரெஞ்சு மன்னர் 16 ஆம் லூயியிடம் விடைபெற்று ஊர் திரும்பிய போது பல்லக்கில் ஊர்வலமாக அரச மரியாதையுடன் அழைத்துச் செல்லப்பட்டார்.

தாயகம் திரும்பிய பின்னர், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் சாசனத்தைத் தயாரிக்க நியமிக்கப்பட்ட குழுவில் அவரும் ஒரு பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். அவரது மேற்பார்வையில் உருவான அரசியல் சட்டம்தான் இன்றும் அமெரிக்காவை வழிநடத்துகிறது.

எங்கு சுதந்திரம் வாழ்கிறதோ, அங்கேதான் என் நாடு இருக்கிறது என்று கூறிய பெஞ்சமின் முதுமையும் நோயும் வாட்ட கடுமையான காய்ச்சலுக்கு ஆட்பட்டு 1790 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் திகதி உயிர் நீத்தார்.





# மனித நாகரிகத்தின் முழுமையான அழிவை தவிர்ப்பது கடினமே

கனடாவில் இருந்து வெளியாகும் நஷனல் போஸ்ட் என்ற பத்திரிகையில் ட்ரிஸ்டின் ஹோப்பர் (Tristin Hopper) என்பவர் எழுதிய ஒரு கட்டுரை சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளது. அதைக் கீழ்க் கண்ட இணைப்பில் காணலாம். அதன் தமிழ்மொழி பெயர்ப்பு கீழே தரப்பட்டு உள்ளது: அமெரிக்க அரசின் தேசிய விமான மற்றும் விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் (NASA d National Aeronautics and Space Administration) கணித நிபுணர்கள் மனித சமூகத்தை இயக்கும் கூறுகளை எண் வகைப்படுத்தி, அவற்றைப் பிரதிபலிக்கும் நான்கு கணிதச் சமன்பாட்டுத் தொகுப்புகளில் பயன்படுத்திப் பார்த்து, மனித நாகரிகத்தின் முழுமையான அழிவை இனிமேல் தடுப்பது கடினம் என்கின்ற முடிவுக்கு வந்து இருக்கிறார்கள்.

உண்மையான காரணிகளின் அளவுகள் அறிஞர்கள் கூறுவதை விட மாறுபடலாம்; ஆனால் வரும் பத்தாண்டுகளில், மேட்டுக்குடி மக்களின் அளவுக்கு அதிகமான நுகர்வினால் பொது மக்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு அதனால் மனித குலமே அழிவுக்கு உட்படும் படியான தண்டனை அடையும் என்பதில் மாறுதல் இருக்காது.

அதாவது உள்ளோர் இல்லாதோர் இடையிலான இடைவெளியைப் பெருமளவில் குறைத்தே தீர வேண்டும்; அல்லது உலக மக்கள் தொகை மிகவும் குறைக்கப்பட வேண்டும் என்ற இரண்டில் ஒரு முடிவை மனித இனம் எடுத்தாலொழிய, அதன் அழிவைத் தடுத்து நிறுத்த முடியாது. அமெரிக்க அரசு நிறுவனமான தேசிய விமான மற்றும் விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் கணித வல்லுநரான ஸஃபா மொடிஷரி (Safa Motesharrei) தலைமையிலான குழுக்களின் மூலமாக மனித இன அழிவைக் குறிக்கும் இச்செய்திகள் சூழலியல் பொருளாதாரம் (Ecological Economics) பத்திரிகையின் வரும் இதழ்களில் வெளிவர உள்ளன.

பலரும் அறியாத இந்தச்செய்தி அண்மையில் பிரிட்டனின் 'த கார்டியன்' (The Guardian) பத்திரிகையில் வெளி வந்தது. இதில் நஃபீஸ் அஹமத் (Nafeez Ahmed) என்ற சுற்றுச் சூழல் எழுத்தாளர் 'எழுமின் விழிமின்' என்ற விதத்தில் மனித சமூக இயக்கத்தில் உடனடியாக மாற்றங்கள் தேவை என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதுவரையிலும் சுற்றுச் சூழலியல்வாதிகள், சமூகவியலாளர்கள், அமெரிக்க நாட்டுக் குடியரசுக் கட்சியின் தீவிர உறுப்பினர்கள் ஆகியோர் மட்டுமல்லாது தொடர் வாழ்வியலாளர்களும் (Survivalists) மேற்கண்ட இந்த 32 பக்க ஆய்வின் முடிவுகளை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

கனடா நாட்டின் வான்கூவர் (Vancouver) நகரில் இருந்து வெளிவரும் ராபில் (Rabble) பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் டெரிக் ஓ'கீஃபெ (Derrick O'Keefe) ஒரு செவ்வாய்க் கிழமை டுவிட்டரில் (Tuesday Twitter) அமெரிக்க அரசின் இந்த ஆய்வின் முடிவு மனித குலம் நிகரமை (சோஷலிச) சமூகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது முழுமையான அழிவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அறைகூவல் விடுப்பதாகத் தெரிவித்துள்ளார். இதைப் பார்த்த, தான் யார் என்பதைத் தெரிவிக்காத, ஒருவர் (அவ்வாறு மக்கள் நிகரமைச் சமூகம் அமைக்கப் போரிட முயலலாம் என்றும் - ஆகவே அவர்களை ஒடுக்க ஆயுதங்களை வாங்கிக் குவித்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறி உள்ளார்.



மனித நாகரிகத்தை ஒன்றுக் கொன்று மாற்றிக் கொள்ளக் கூடிய, மேட்டுக் குடியினர், பொது மக்கள், இயற்கை வளங்கள், மனித உழைப்பில் உருவான செல்வங்கள் ஆகிய நான்கு காரணிகளாகப் பிரித்துக் கொண்டு இந்த ஆய்வு தொடங்கப்படுகிறது. ஏனெனில் இயற்கைச் சூழலின் அழுத்தம் மக்களிடையே உள்ள பொருளாதாரப் படிநிலைகள் ஆகிய இரண்டு கூறுகள் தான் மனித சமூகத்தை அழிக்கும் வலுவான கொள்ளை நோயாக தொடர்ந்தும் செயற்படுகின்றன.

ஒவ்வொரு காரணியும் சிக்கலான கணிதச் சமன்பாட்டில் பிரயோகிக்கப்பட்டு, ஹேண்டி (HANDY d Human And Nature DYnamic) என்று ஆராய்ச்சியாளர்களால் அழைக்கப்படும் சூத்திரத்தின் மூலம் விடைகள் சேகரிக்கப்பட்டன. அதன்பின் சமமில்லாத சமூகம் உட்பட பலவிதமான சமூகங்களின் விதிகளைக் கணக்கிட இச்சூத்திரம் வடிவமைக்கப்பட்டது. பணக்காரர்களும் ஏழைகளும் உள்ள அமைப்பு, இன்றைய உலகின் சமூக அமைப்பை மிகவும் சரியாகப் பிரதிபலிப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டனர் . முதலில் மேட்டுக் குடிமக்கள் 750 ஆண்டுகளுக்குப் பின்னர் உழைக்கும் மக்களுக்குப் பஞ்சம் ஏற்படுத்தி ஆயிரம் ஆண்டுகளில் மனித நாகரித்துக்குச் சாவு மணி அடிக்கும்படியாக வேரூன்றி நின்றனர். இரண்டாவதாக, 350 ஆண்டுகளுக்குப் பிறகு மேட்டுக் குடியினரும் பொது மக்களுமாகச் சேர்ந்து ஈடு கட்ட முடியாத அளவுக்குப் புவியின் வளங்களைப் பிழிந்து வருகின்றனர். இச்செயல் மனித இனத்தையும், இப்புவிக் கோளையும் இன்னும் 500 ஆண்டுகளில் முழுமையாக அழித்துவிடும்.

இந்த இரண்டு நிகழ்வுகளிலுமே சூழ்நிலைக் கேட்டினால் விளையும் பாதகமான விளைவுகளால், பொது மக்கள் பாதிக்கப்பட்டு நீண்ட காலம் வரையிலும், மேட்டுக் குடியினர் தங்கள் செல்வ நிலையின் பின் புலத்தால் பாதிக்கப்படாமலேயே தப்பி விடுவார்கள் என்பதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும் என்று இந்த ஆய்வு கூறுகிறது.

சமூகத்தின் பிற பகுதி மக்களைப் பற்றி அக்கறை கொள்ளாத மேட்டுக் குடியினரால் (மெக்சிகோ நாட்டு) மாயன் நாகரிகமும், ரோமன் நாகரிகமும் அழிந்துபோனமை போல, இப்பொழுது உள்ள மேட்டுக்குடியினரும்; தங்களுக்குச் செல்வச் செழிப்பு நிலை அளிக்கும் பாதுகாப்பின் காரணமாகத் தங்கள் வழக்கமான வழியிலேயே செல்வார்கள் என்று உறுதியாகக் கூற முடியும்.


இந்நிலை மாறி மனிதர்கள் அனைவரும் அழியாமல் இருப்பதற்கு இரண்டே வழிகள் தான் உள்ளன. ஒன்று பிறப்பு வீதம் மிகப் பெரும் அளவு குறைக்கப்பட வேண்டும்; அல்லது இயற்கை வளங்களும் அவற்றின் விளைபொருள்களும் நியாய மான முறையில் அனைவருக்கும் சமமான அளவில் விநியோகிக்கப்பட வேண்டும். வரவிருக்கும் அழிவுகளைத் தடுப்பதற்கு இந்த யோசனைகளை ஏற்பதுதான் வழி என்று இந்த ஆய்வு கூறுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேய அறிஞர் தாமஸ் மால்துஸ், (புலனடக்கம் மூலமாக) பிறப்பு விகிதத்தைப் பெருவாரியாகக் குறைத்தால் அன்றி, மனிதர்களிடையே கொன்று தின்னும் அளவுக்குப் பஞ்சமும் அழிவும் ஏற்படுவதைத் தடுக்க முடியாது என்று கூறினார். அதேபோன்ற அச்சமூட்டக் கூடிய நிலைமை தான் இன்றும் இருக்கிறது. இருநூறு ஆண்டுகளில் விவசாயத்தில் ஏற்பட்டு உள்ள தொழில் நுட்ப வளர்ச்சிகள் மால்தூஸின் வரும்பொருள் உரைத்தலைத் தவறாக்கி உள்ளன.

ஆனால், இப்பொழுது தொழில் நுட்ப வளர்ச்சிகள் நிலைமைகளைச் சீர்திருத்த முடியாது என்று, ரோம் சாம்ராஜ்யத்தின் அழிவை ஆதாரமாகக் காட்டி, முதிர்ச்சியான, சாமர்த்தியமான, சிக்கலான, படைப்பாற்றல் கொண்ட நாகரிகம் அழியும் தன்மை கொண்டதாகவும், நிரந்தரமற்றதாகவுமே இருக்கும் என்று ஸஃபா மொடிஷரியின் ஆய்வு கூறுகிறது. நாம் அறிந்த (சமத்துவத்தை அடிப்படையாகக் கொள்ளாத) மாயா, ரோமன், சீன வம்ச, சுமேரிய நாகரிகங்கள் அழிந்தே உள்ளன.

யாருமே எல்லாமே சரியான முறையில் தெரிவு செய்து போய்க் கொண்டு இருக்கவில்லை; மாற்றத்துக்கான விசை நாகரிக சமூகத்தின் உள்ளேயே இருக்கிறது என்று பெல்ஜியத்தில் உள்ள கனேடிய பத்திரிகையாளர் டெபோரா மக்கன்ஜி (Debora Mackenzie) மின்னஞ்சல் மூலம் புதிய அறிவியலாளர் களுக்கு, சமூகத்தின் பேரழிவு பற்றி நஷனல் போஸ்ட் (National Post) பத்திரிகையில் எழுதி உள்ளார்.

இந்த ஆய்வு கூறும் மனித நாகரிகத்தின் முழுமையான அழிவு என்ற கருத்தைப் பற்றித் தனக்கு நம்பிக்கை இல்லை என்றும், அதில் அக்கறை கொள்ளவில்லை என்றும் விக்டோரியா பல்கலைக் கழகத்தின் கிரேக்க, ரோமன் ஆய்வுத் துறையின் தலைவர், தொல்லியல் ஆராய்ச்சியாளர் பிரெண்டன் புர்க் (Brendan Burke) நேஷனல் போஸ்ட் பத்திரிகைக்கு அனுப்பிய மின்னஞ்சலில் 'இருண்ட காலம் என்று வரலாற்றில் கூறப்படும் ஒரு பேரழிவுக்குப் பின் வரும் காலமானது மிகவும் குறைவாக அறியப்பட்ட/ஆராயப்பட்ட காலமாகும்' என்று எழுதி உள்ளார்.




## தாகம் தீரத் தண்ணீர்

பேரரசர் அலெக்ஸாண்டர் தனது படை வீரர்களுடன் போருக்குச் சென்றார். ஒரு பாலைவனத்தில் போர் வீரர்களுடன் தங்கியிருந்தார். அனைவருக்கும் தண்ணீர்த் தாகம்.

அப்போது வழிப்போக்கர் ஒருவர் தோல் பையில் தண்ணீர் எடுத்துக் கொண்டு அவ்வழியே வந்தார். அரசர், இந்தத் தண்ணீரை யாருக்கு கொண்டு போகிறீர்கள்? என்று கேட்டார்.

அதற்கு, எனது மனைவி, மக்களுக்காக எடுத்துப் போகிறேன். நீங்களும் தாகம் தீருங்கள் என்று கூறினார்.



அவர் தண்ணீரை உற்றுப்பார்த்த போது, போர் வீரர்களின் முகங்கள் தெரிந்தன.

உடனே தண்ணீரை அவரிடம் கொடுத்து, நீங்கள் கொண்டு செல்லுங்கள், இந்தத் தண்ணீரை நான் மட்டும் குடித்தால் ஆயிரக்கணக்கான எனது போர் வீரர்கள் தளர்ச்சியுற்று கீழே விழுந்து விடுவார்கள் என்று கூறினார்.

இது அவரது போர் வீரர்களுக்கு புதிய உற்சாகத்தையும், புதிய சக்தியையும் கொடுத்ததில் ஆச்சரியம் இல்லை.